உ

# நல்லைநகர்

# நாவலர் பெருமான் வழியில்

# பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை






நூலாசிரியர்

கலாபூஷணம், கலாநிதி

குமாரசாமி சோமசுந்தரம்





வெளியீடு

சைவத்திரு கா. சிவபாலன்

2015

# நல்லைநகர் நாவலர் பெருமான் வழியில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை


நூலாசிரியர்

கலாபூஷணம், கலாநிதி

**குமாரசாமி சோமசுந்தரம்**



வெளியீடு

**சைவத்திரு கா. சிவபாலன்**

**2015**

## நூல் தரவுகள்


| | | |
|---|---|---|
| தலைப்பு | : | நல்லைநகர் நாவலர் பெருமான் வழியில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை |
| நூலாசிரியர் | : | கலாபூஷணம், கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் |
| பதிப்பாசிரியர் | : | கா. சிவபாலன் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு |
| காலம் | : | 2015 மார்ச் |
| பதிப்பகம் | : | அனுஷ் பிரின்டர்ஸ், கொழும்பு-13. |
| பக்கம் | : | XII + 109 |
| விலை | : | ரூபா. 200.00 |


## BOOK DATA


| | | |
|---|---|---|
| Title | : | Nallai Nagar Navalar Peruman Vazhiyil Pandithamani S. Kanapathippillai |
| Author | : | Kalabhooshanam, Dr. Kumarasamy Somasundaram |
| Publisher | : | K. Shivapalan |
| Edition | : | First Edition |
| Date | : | 2015 - March |
| Printers | : | Anush Printers, Colombo-13. |
| Pages | : | XII + 109 |
| Price | : | Rs. 200.00 |

# முன்னுரை

சைவப்பழமாய்த், தமிழின் தந்தையாய் வாழ்ந்து, சைவத்தையும், தமிழையும் வாழவைத்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் இன்றும் ஒரு சைவத் தமிழ் மலையாக நம்மவர் மனங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார். நல்லாசிரியருக்கு இலக்கணம் கூறவந்த நன்னூல் ஆசிரியர், மலைநிகர் மாட்சி உடையவரே நல்லாசிரியர் என்கிறார்.

*"அளக்கலாகா அளவும் பொருளும்*
*துளக்கலாகா நிலையும் தோற்றமும்*
*வறப்பினும் வளந்தரும் வண்மையும் மலைக்கே"*

என மலையின் இயல்பை விரித்துக் கூறுகின்றார். நாவலர் பெருமானுக்கு இது எவ்வளவு பொருத்தம் எனக் காண்போம்.

*"அளவு செய்யப்படாத தன் கல்வியின் அளவும், அளவு செய்யப்படாத பலவகை நூற்பொருளும், எப்படிப்பட்ட புலமையுடையோராலும் அசைக்கப் படாத கல்வி நிலையும், நெடுந்தூரத்திலுள்ளாராலும் அறியப்படும் உணர்ச்சியும், பொருள் வருவழி வறண்ட காலத்திலும் தன்னைச் சேர்ந்த மாணாக்கர்க்குக் கல்விப் பொருளைக் கொடுக்கும் கொடையும், ஆசிரியனுக்கு உள்ள குணங்கள் ஆதலால் மலை நல்லாசிரியனுக்கு உவமையாயிற்று"* என்பர்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் மலை போன்ற நல்லாசிரியர். மலையிலிருந்து பல அருவிகள் தோன்றி ஆறுகளாகப் பாய்ந்து மண்ணை வளம்படுத்தி மக்களை வாழவைப்பது போல நாவலருடைய மாணாக்கர் பலர் அவரிலிருந்து தோன்றி கிளை ஆறுகள் போலத் தமக்கென மாணாக்கரை உருவாக்கி இன்று வரையும் தமிழர் வாழ்வை அவர்கள் மூலம் வளம்படுத்திக் கொண்டு இருக்கின்றனர்.

நாவலர் பெருமானின் மாணாக்கரின் மாணாக்கர் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள். அவரை மானசீகக் குருவாகக் கொண்டு கூடிவாழ்ந்தவர், இந்த நூலின் ஆசிரியர் கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்.

"நாவலர் பெருமான் வழியில் பண்டிதமணி" என்னும் இந்த நூலில் நாவலர் பெருமானையும், அவர்வழிவந்த பண்டிதமணி அவர்களையும், பண்டிதமணி வழிவந்த நூலாசிரியரையும் தரிசிக்கின்றோம்.

நாவலர் பெருமானை மலையாகவும் அவர் வழிவந்த பண்டிதமணி அவர்களை ஆறுஆகவும் உவமிப்பதற்குக் கவிச்சக்கரவர்த்தி கம்பனே சாட்சி.

கம்பர் கோதாவரி நதியைப்பற்றிக் கூறுமிடத்து

*புவியினுக்கு அணி ஆய், ஆன்ற பொருள் தந்து, புலத்திற்று ஆகி,*
*அவி அகத்துறைகள் தாங்கி, ஐந்திணை நெறி அளாவி,*
*சவி உறத் தெளிந்து, தண்ணென் ஒழுக்கமும் தழுவி, சான்றோர்*
*கவி என, கிடந்த கோதாவரியினை வீரர் கண்டார். என்பர்.*

சான்றோன் ஆகிய நாவலர் பெருமானின் கவியாக நமக்குக் கிடைத்தவர் பண்டிதமணி ஐயா அவர்கள். நாவலர் பெருமான் தமிழுக்குத் தூய வசன நடையைத் தந்தவர். அதனால் அறிஞர்களால் "வசனநடை கைவந்த வல்லாளன் எனப் போற்றப்பட்டவர்.

பண்டிதமணி ஐயா அவர்களும் தனக்கெனத் தனித்துவமான ஒருவசன நடையை வகுத்து, நாவலர் பெருமானின் நயத்தகு இலட்சியங்களை நமக்குத்தந்தவர். "நாவலர் போல நைஷ்டிகப் பிரமச்சாரியாக வாழ்ந்து நாவலர் பணியே நம்பணி" என அவரின் உயிர் மூச்சாக நம்முன் வாழ்ந்தவர்.

இந்த விபரங்கள் எல்லாவற்றையும் இந்நூலில் அடங்கியுள்ள ஒன்பது கட்டுரைகளின் ஊடாகவும் திட்ப நுட்பமாக நாம் அறிய முடியும், இவை அவ்வப்பொழுது பண்டிதமணி பற்றி நூலாசிரியர் எழுதியகட்டுரைகளின் தொகுப்பு. ஆதலால் சில செய்திகள் மீண்டும் மீண்டும் வருவது தவிர்க்கமுடியாதது ஆகும்.

இந்த நூலைத் தொகுத்தவர் பண்டிதமணியின் ஊரிற் பிறந்து அவரின் உறவினராக அவரைப் போற்றி வாழ்ந்து, சிவத்தமிழ் செல்வியின் அரவணைப்பில் மலர்ந்து, சான்றோரைப் போற்றும் சான்றோனாக வாழும் சைவத்திரு. கா. சிவபாலன் ஆவார்.

நூலாசிரியர், மனிதவிழுமியச் செம்மலாக நம்முன் வாழ்ந்து கொண்டு தன்பேச்சும் மூச்சும் தமிழுக்கும் சைவத்துக்கும் பணிசெய்தலே என வாழ்வாங்கு வாழ்ந்து காட்டிக் கொண்டிருக்கும் கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் ஐயாவையும், இந்த நூலைத் தமிழ் கூறும் நல்லுலகத்துக்குக் ஈந்து உவக்கும் சைவத்திரு கா. சிவபாலன் அவர்களையும் போற்றுதலுடன் அவர்களின் பணிகள் பல்லாண்டு தொடரச் சிவப்பரம் பொருளை வணங்கித் தொழுவோம்.

ஓய்வு நிலை அதிபர்
இளவாலை, மெய்கண்டான் ம. வி.

கலாபூஷணம், சைவப்புலவர்
சு. செல்லத்துரை

# முகவுரை

இலங்கைத் திருநாட்டிலே, யாழ்ப்பாணப் பிரதேசத்திலுள்ள மட்டுவில் பதியிலே, பிறந்து வளர்ந்து நம் அருமைத்தீந்தமிழ் செம்மொழிக்கும், சித்தாந்த சைவச்செந்நெறிக்கும், வளம் பெருக்கிச், செழுமை காத்து, அவற்றின் நலம் பேணி, இன்பங்கண்டு, தாம் பெற்ற இன்ப சுகத்தை மற்றையோருடனும் பகிர்ந்து கொண்டு அவர்களையும் அதில் மூழ்கித்திளைக்கவைத்துப் பெருமை கொண்டவர் மூதறிஞர், இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ஆவார். அவர்கள் நல்லைநகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஞானப்பரம்பரையில் தோன்றிய ஞானக்கொழுந்து ஆகத்திகழ்கின்றார்.

நாவலருக்குப் பின், அவர் வழியில் நின்று நமக்கு ஒரு தமிழ்க் காவலனாகவும், சைவப் புரவலனாகவும், விளங்கியவர், பண்டிதமணி ஆவார். ஈழத்துத்தமிழ் இலக்கிய வழியைச் சரிவர ஆராய்ந்து, அறிந்து, தமிழ்கூறும் நல்லுலகிற்கு வெளிப்படுத்தியமை; சைவத்தமிழ்ப் பண்பாட்டு மரபுகள்; பாரம்பரியங்கள்; ஒழுக்கசீலங்கள்; ஆகியவற்றை, இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ளச் செய்தமை; திருநெல்வேலி சைவாசிரிய பயிற்சிக் கலாசாலையில், தமிழ் விரிவுரையாளர் ஆகவும், தமிழ்ப் பேராசானாகவும் விளங்கி, ஏறத்தாழ முப்பது ஆண்டுகள், ஆயிரத்திற்கும் அதிகமான நல்லாசிரியர்களை உருவாக்கி, சைவத்தமிழ்த் தூதுவர்களாக, இலங்கை நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள சைவத்தமிழ்ப் பாடசாலைகளில் ஆசிரியப்பணியாற்றவும்; மாணவர்கள் சைவத்திலும், தமிழிலும் ஆழ்ந்த பற்றும், பக்தியும் கொண்டு, சைவத்தமிழ்ப் பண்பாடு, ஆசாரசீலங்கள், ஒழுக்க நெறிமுறைகள் என்பவற்றின் நலம் காத்து, வாழ்க்கையில் பேணி, வாழ்பவர்களாக, அவர்களை வழிப்படுத்துவதற்கு, ஏற்ற தகைமைகள், அறிவு, திறன், மனப்பாங்கு விருத்திகள் என்பவற்றை அவ்வாசிரியர்கள் பெற்றுக்கொள்ளக் கூடியவாறு அறிவூட்டல் மற்றும் செயல் வழிப்பயிற்சிகளை வழங்கி, நல்லாசிரியர்களாக அவர்களை நெறிப்படுத்தியமை, என்பன பண்டிதமணியின் ஆளுமைக்கு சில எடுத்துக்காட்டுகள் ஆகும்.

அவற்றின் விரிவாக்கங்களையும், விளக்கங்களையும், இந்நூலில் இடம் பெற்றுள்ள கட்டுரைகளில் தெளிவாகக் காணலாம்.

பழைமை, பண்பும் பயனும் நிறைந்தது. அது பின்நோக்கு, பிற்போக்கு அன்று. வந்த பாதையை அறிந்திருந்தாலே, புதிய பாதை சுவைக்கும். பழைமையிலிருந்து புதுமை பொங்கி எழ வேண்டும். "பழையன கழிதல், புதியன புகுதல் வழுவல" என்கிறார், இலக்கண நூலாசிரியர், பவணந்தி முனிவர். பழையன பயனற்றதாயின், கழிந்தே தீரும். புதியன பயனுள்ளதாயின் புகுந்தே தீரும், வரவேற்கப்பட வேண்டியன. வலிந்து ஒன்றைக் கழித்தலும், புகுத்தலும் ஆகாதன மட்டுமல்ல, ஆபத்தானவையும் கூட. புதியனவற்றை வரவேற்று விமர்சித்துப் பயனுள்ளதாயின் ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கினை வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும். விமர்சனம், கண்டனம் என்பன காய்தல் உவத்தலின்றிச் செய்யப்பட வேண்டியன. "முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளே, பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனே", என இறைவனைப் போற்றுவது சைவ மரபு. பண்டிதமணியின் பழைமை, புதுமை பற்றிய இத்தகைய கருத்துக்களும்; மரபும் மாற்றமும் பற்றிய அவரின் நவீன சிந்தனைகளும், இனி வரும் கட்டுரைகளில் தெளிவுபடுத்தப்படவுள்ளன. பண்டிதமணியின் உரைத்திறன், நவீனத்துவம் வாய்ந்தது. சொல்விற்பனமும், அவதானமும் கல்வி சொல்ல வல்ல நல்வித்தையும், சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் அற்புதக் கலையும், நகைச்சுவையை நளினமாகக் கையாளும் பாங்கும் பண்டிதமணியின் தனித்துவ முத்திரைகளாக, அவரின் ஆளுமை நலத்திற்கு அணி செய்கின்றன.

பண்டிதமணியின் இப்பண்புகளை விளக்கும் வகையிலும், அவரின் சைவத்தமிழ் பணிகளை ஓரளவு கோடிட்டுக் காட்டும் நோக்கிலும் என்னால் எழுதப்பட்ட ஒன்பது கட்டுரைகள் இந்நூலில் உள்ளடக்கம் பெற்றுள்ளன. அவற்றுட் சில பண்டிதமணியின் பிறந்த, மறைந்த தினங்களை முன்னிட்டு இலங்கை வானொலி தமிழ்ச் சேவையினர், ஒலிபரப்புச் செய்து, பண்டிதமணிக்கு கௌரவம் வழங்கினர். மற்றையன பத்திரிகைகளில் வெளியிடப்பட்டன. இந்த ஊடகங்களிற்கு எமது நன்றிகள் உரித்தாகுக.

பல்வேறு சந்தர்ப்பங்களில் பண்டிதமணி பற்றி எழுதப்பட்டு, வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பு, நூலாக இருப்பதால், கூறியது கூறல், தவிர்க்க முடியாமல் வந்து விடுதல், இயல்பு தான் என்பதை வாசகர்கள் புரிந்து கொள்வார்கள் என நம்புகிறேன். ஒரு

முக்கிய விடயத்தை மீண்டும் மீண்டும் சிந்தித்துப் புது விளக்கம் பெற்று இரசனை கொள்ளவும் மனத்தில் பதித்துக் கொள்ளவும், கூறியது கூறல் அனுசரணையாக விளங்கும்.

"நாவலர்" என்றால் அது யாழ்ப்பாணத்து நல்லை நகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானையே, சிறப்பாகக் குறிப்பது போன்று பண்டிதமணி என்று மட்டும் குறிப்பிட்டாலே அது தென்மராட்சி, மட்டுவில் பதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களையே சிறப்பாகக் குறிப்பதாக அமைகின்றது.

பண்டிதமணி பற்றிய எனது கட்டுரைகளைத் தொகுத்து நூல் வடிவம் கொடுத்து, அதை அச்சேற்றி வெளியீடு செய்ய முன்வந்தவர், பண்டிதமணியிடம் ஆராத அன்பும் பெருமதிப்பும் கொண்டவரும், எனது உத்தம மாணவரும், என்மீது மிகுந்த அன்பு பூண்டவரும், எனது பெருமதிப்புக்குரியவரும், சைவ சீலரும், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தின் அணுக்கத் தொண்டனுமாகிய சைவத்திரு காசிநாதர் சிவபாலன் அவர்கள் ஆவார். சிவத்தமிழ்ச் செல்வி அம்மையாரின் பணிகளுக்குப் பக்க பலமாக இருந்தவர். இன்றும் தெய்வீகப்பணியை ஆலயத்தில் அர்ப்பணிப்புடன் ஆற்றிவருகின்றார். அவருக்கு எனது அன்பு கலந்த நன்றியையும், நல்வாழ்த்துக்களையும் உரித்தாக்கி மகிழ்கிறேன்.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கி, அணி செய்து உதவிய எனது பெருமதிப்புக்குரிய அன்பர், முன்னைநாள் அதிபர், சைவப்புலவர் கலாபூஷணம் சு. செல்லத்துரை அவர்களுக்கு, அன்பு கலந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

இந்நூலை அழகுற அச்சிட்டு உதவிய அனுஷ் பிறின்ரேஸ் அச்சகத்தினருக்கு எனது மனமார்ந்த நன்றிகள் பலப்பல.

எல்லாவற்றிற்கும் மேலாக எம்மை வழிப்படுத்தி அருள் பாலிக்கும் இறைவனுக்கு, வணக்கத்தையும் நன்றியையும் சமர்ப்பிக்கின்றேன்.

- கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் -

## பதிப்புரை

சைவத்தமிழ் ஆசானும், பேரறிஞருமாகிய சைவப் பெரியார் கலாநிதி. குமாரசாமி சோமசுந்தரம் ஐயா அவர்கள் நாடறிந்த கல்விமான். இவர் சைவத்துக்கும் தமிழுக்கும் ஆற்றிய கல்வித்தொண்டுகளை நம் நாடு நன்கு அறியும்.

பெரியார் கலாநிதி கு. சோமசுந்தரம் ஐயா அவர்களின் "நல்லைநகர் நாவலர்" என்ற நாடக நூல் 1977ம் ஆண்டு வெளிவந்தது. இந்நூலுக்கு பண்டிதமணி அவர்கள் மிக அருமையானதொரு அணிந்துரையையும் வழங்கி மிகவும் பாராட்டியுள்ளார். இவரின் நாடக நூல் ஆறுமுக நாவலரின் உண்மையானச் சரித்திரத்தைத் தந்த பெருமை பெற்றது.

பண்டிதமணி அவர்கள் சமய தத்துவத்தை தந்து (Theory) "சமயம் படியும் படியும்" எனக்கூறி வழிகாட்டி வாழவைத்தவர். சிவத்தமிழ் செல்வி அம்மையார் சமயத்திலும், கோவில் பரிபாலனத்திலும் (Practical) பயிற்சி தந்து சமயவாழ்வு தந்தவர். இவர்களைப் போன்றே சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் யான் மாணவனாக இருக்கும் போது "படி படி" எனப்பாடம் கற்பித்த நல் ஆசான் இவர். என் ஞான குரு வரிசையில் ஒருவர். இவர் பாடம் கற்பிக்கும் போதும், கல்லூரி வழிபாட்டு மண்டபத்தில் (Prayer Hall) சமயச் சொற்பொழிவு ஆற்றும் போதும், குண்டுசி விழுந்தாலும் கேட்கும், அமைதியான கூட்டமாக மாணவர்கள் இருப்பார்கள். இப்போது என் பசுமை நினைவுகளை மீட்டுப்பார்க்கின்றேன்.

ஐயா, ஆசிரியராக இருந்து, உயர் பதவிகளில் பணியாற்றிய போதும், யானும் அவரைப் பின் தொடர்ந்து வந்தேன். "மட்டுவில் தந்த பண்டிதமணி சி. க." என்ற நூலை வெளியிட்டு, விழாவுக்கு தலைமைதாங்க மிகவும் பொருத்தமானவரும் தகுதியான வரும் ஒரே ஒருவர் (கலாநிதி) திரு. கு. சோமசுந்தரம் ஐயா என சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார் கூறி, அவரின் இல்லம் சென்று இருந்தோம். அன்று அவரின் வேலைப்பளு காரணமாக சந்திக்க இயலவில்லை. பின்னர் தமது இசைவினை சிவத்தமிழ்ச் செல்வி அம்மையாருக்கே அறியச் செய்தார். ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் மாதாந்த "அருள் ஒளி" சஞ்சிகையில், குமாரசாமி சோமசுந்தரம் ஐயாவின் கட்டுரையே முதலாவதாக வெளிவர வேண்டும் எனப் பணித்து

இருந்தார், அம்மையார். இன்றும், அருள் ஒளியில் ஐயாவின் நூறு கட்டுரைகள் வரை வெளிவந்துள்ளமை பெருமைக்குரியது.

மேலும், வரலாற்றுப்பெருமையும் வழிபாட்டுப் பெருமையும் கொண்ட மாவைக்கந்தன் திருத்தல வரலாற்று நூலைக்கொழும்புத் தமிழ்ச்சங்க மண்டபத்தில் அறிமுகம் செய்ய யான் முற்பட்டபோது, கலாநிதி கு. சோமசுந்தரம் ஐயா அவர்களே, தலைமை தாங்கிப் பெரும் சிறப்பைத் தந்தார்.

இவ்வாறாக, ஐயா அவர்களுடன் தொடர்புகளினாலும் பேரன்பினாலும் இன்று வெளிவரும் பண்டிதமணி ஐயா பற்றிய கட்டுரைத் தொகுப்பை வெளியிட, யான் அநுமதி கேட்டேன். அவர், இத்தொகுப்பைக் கடந்த ஆண்டு எம்மிடம் ஒப்படைத்து இசைவினை தெரிவித்துள்ளார். அவர்களுக்கு யான் என்றென்றும் நன்றியுடையேன்.

நாவலர் தர்மத்திலும், நாவலர் நீதியிலும் வாழ்ந்த பண்டிதமணி அவர்களின் வரலாற்று நூலைப்பதிப்பித்து வெளியிடும் புண்ணியம் எமக்கு கிடைத்தது பெரும் பேறு.

பண்டிதமணி அவர்களை ஞானகுருவாகக் கொண்ட எம்மை, பண்டிதமணியும், சிவத்தமிழ் செல்வி அம்மாவும் இனங்கண்டவாறு நூலாசிரியர் கலாநிதி கு. சோமசுந்தரம் ஐயாவும் இனங்கண்டார்கள். அவர்கள் நூலுக்கு அருமையான முகவுரையை வழங்கியுள்ளார். அவர்களுக்கும் யான் நன்றியுடையேன்.

மேலும் இந்நூலுக்கு அருமையான ஒரு முன்னுரை தந்தவர், சைவப்புலவர், கலாபூஷணம் சு. செல்லத்துரை, அதிபர் ஐயா அவர்கள்; சைவத்தமிழ் உலகில் யாவராலும் அறியப்பட்டவர். சமயம் பற்றிய சந்தேகங்களுக்கு எமக்கு விளக்கம் தரவல்ல ஒரே ஒருவர் ஆவார். இவர் தமது பேச்சாலும் எழுத்தாலும் பல்லாயிரக் கணக்கானவர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட நல்லறிஞர். என் ஆன்மீகத் தேடலில் நான் சந்தித்த ஒரு பெரியார் புலவர் ஐயா. பண்டிதமணி சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார் ஆகியோரை நன்கு அறிந்த அறிஞர். அவர் இந்நூலுக்கு வழங்கிய முன்னுரை பண்டிதமணி அவர்களுக்கும் நூலுக்கும் பெரும் சிறப்பைத் தருவதாகும். சைவப்புலவர் ஐயாவுக்கு நன்றி கூற எம்மிடம் வார்த்தைகள் இல்லை. ஆயினும் என் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

இந்நூல் மிகவும் சிறப்பாகவும், அழகுபெறவும், புறுாவ் பார்த்துத் திருத்தம் பெற, அச்சிட்டுத்தந்த கொழும்பு-13 அனுஷ் பிரின்டர்ஸ் முதல்வர் திரு. கு. அருளானந்தம் அவர்களுக்கு நன்றியுடையேன். என் பதிப்புப் பணிமுயற்சியில் இந்நூல் 7வது நூலாக வெளிவருவதற்கு உறுதுணையாக, உற்ற நண்பராகவும் பேரன்பராகவும் விளங்குபவர் இவரே. தனித்துவமான பதிப்புப்பணி செய்து வரும் திரு. கு. அருளானந்தம் அவர்களுக்கு என் நன்றியும் மிகுந்த கடமைப்பாடும் உண்டு.

உலகத் தமிழ் அறிஞராகிய பண்டிதமணி, அமரத்துவம் பெற்று 29ம் ஆண்டு நினைவாக வெளிவரும் இந்நூல் ஈழம் தொடக்கம் தமிழ் கூறும் நல்லுலகம் எங்கணும் நல்விருந்தாகுக எனத் துர்க்கை அம்பாளைப் பிராத்திப்போமாக.

*13-03-2015* - கா. சிவபாலன் -

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 01. | நாவலர் ஞானபரம்பரையைத் தொடர வைத்த, பண்டிதமணி, இலக்கிய கலாநிதி சி. கணபதிப்பிள்ளை | 1 |
| 02. | பண்டிதமணி இலக்கிய கலாநிதி சி. கணபதிபிள்ளை - வாழ்வும் வளமும் | 8 |
| 03. | ஈழத்துத்தமிழ்க் கல்வி வழியில் பண்டிதமணி | 19 |
| 04. | பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை தரும் மனித விழுமியச் சிந்தனைகள். | 29 |
| 05. | பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் இளமைக்கால அனுபவங்கள். | 37 |
| 06. | பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை - ஆளுமை வளர்ச்சி | 45 |
| 07. | நாவலருக்குப் பின் நமக்கொரு சைவக்காவலர் பண்டிதமணி, இலக்கிய கலாநிதி சி. கணபதிப்பிள்ளை | 51 |
| 08. | பண்டிதமணி, இலக்கிய கலாநிதி சி. கணபதிபிள்ளை | 62 |
| 09. | நாவலர் வழியில் பண்டிதமணி போற்றிய கந்தபுராண கலாசாரம்: ஒரு கண்ணோட்டம் | 72 |
| 10. | Pandithamani Dr. S. Kanapathippillai - (1899-1986) | 107 |

உ

# நாவலர் பெருமான் வழிவந்த இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்



விகாரி வருடம் ஆனி மாதம்
14ம் நாள் (சதயம்)
1899-06-27

குரோதன வருடம் மாசி மாதம்
28ம் நாள் (ரேவதி)
1986-03-13

உ

# 1. நாவலர் ஞானபரம்பரையைத் தொடர வைத்த பண்டிதமணி இலக்கிய கலாநிதி சி. கணபதிப்பிள்ளை

பத்தொன்பதாம் நூற்றாண்டில் சைவத் தமிழ் மறுமலர்ச்சிக்கு வித்திட்டுத் தலைமை தாங்கி, வளர்த்து, அதன் தந்தையாகிவிட்டவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள். நாவலர் பெருமானுக்குப்பின்னர், அவரின் அடிச்சுவட்டிலே, மறுமலர்ச்சிப் பணிகளைத் தொடர, நாவலர் பரம்பரை தோன்றியது. நாவலர் அணியின் விசுவாசம் மிக்க தளபதிகளுள் ஒருவராகவும், நாவலர் நோக்கினையும் போக்கினையும் உள்ளபடி அறிந்து உலகிற்குணர்த்திய தலைமகனாகவும் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை விளங்கினார்.

பண்டிதமணி எவ்வாறு நாவலர் பரம்பரையுடன் இணைந்து கொண்டார்? என்ற வினாவும் கூடவே எழுகின்றது. அவரது ஆளுமை வளர்ச்சியில், அவர் நாவலர் பரம்பரையினர் என்ற அம்சம் கணிசமான பங்கினைச் செலுத்தியுள்ளது என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

1917 ஆம் ஆண்டில், நாவலர் காவிய பாடசாலையில் பண்டிதமணி, மாணவனாகச் சேர்ந்தார். நாவலரின் நேர் மாணாக்கனான சுன்னாகம் அ. குமாரசாமிப்புலவர், காவிய பாடசாலையின் தலைமை ஆசிரியராக இருந்தார். நாவலரின் தமையனாரின் புதல்வர், த. கைலாசபிள்ளை, அப்பாடசாலையின் மனேச்சராக விளங்கினார். அவரும் நாவலரிடம் கற்றவர். அவர்கள் இருவரிடமும் பண்டிதமனி பாடங்கேட்டார். இந்தத் தொடர்பே பண்டிதமணி, நாவலர் மாணவ பரம்பரையில் இடம் பெறுவதற்குக் கால்கோளாயிற்று.

வண்ணார்பண்ணையில், 1848 இல் நாவலரால் நிறுவப்பட்ட சைவப்பிரகாச வித்தியாசாலை, மேற்கத்தைய தேய முறை சார்ந்த கல்வி அமைப்பினையும் பாடபோதனையையும் கொண்டிருந்தது. ஆனால் சைவத் தமிழ்ச் சூழல் நிலவியது. அதே வளவில் மற்றோர் இடத்தில் சைவத் தமிழ் மரபுக் கல்வியைப் புகட்டுவதற்கு நாவலரால் காவிய பாடசாலை நிறுவப்பட்டது. மரபுவழிவந்த குருசீட முறைமை, திண்ணைப் பள்ளிக்கூட அமைப்பு என்பன அங்கு பேணப்பட்டன.

சைவத் தமிழ் மறுமலர்ச்சியின் முக்கிய பெறுபேறாக உருவான நாவலர்பரம்பரை, காவிய பாடசாலையிலிருந்து முகிழ்த்தது. இலங்கைத் தமிழ் மக்களின் சைவத்தமிழ்த் தேசியம் தனித்துவமானது என்ற ஓர் உணர்வினைத் தமிழ் மக்களிடையே தோற்றுவிக்கவும், நிறுவவும், அதனைத் தமிழ்நாட்டாரும் பிறரும் அறிந்து கொள்ளவும், நாவலர் பரம்பரையினர் ஆற்றிய பணிகள் அளப்பரியன. இந்த வகையில் பண்டிதமணியின் பங்களிப்பு மிகப்பெரிது ஆகும்.

நாவலர் பெருமான் தனக்கொரு ஞானபரம்பரை உருவாக வேண்டுமென்றோ, தன்சரித்திரம் எழுதப்படவேண்டுமென்றோ எண்ணிச் செயற்பட்டவரன்று. அவ்வாறு நினைத்திருந்தால் ஏதாவது வாழ்க்கைக் குறிப்பை விட்டுச் சென்றிருப்பார். நாவலரின் நேரடி, மாணாக்கர்களும், அவர்கள் வழிவந்தோருமே, குருபக்தியினால் உந்தப்பட்டு, நாவலரின் எண்ணங்களுக்கு உருக்கொடுத்தனர்.

நாவலரின் மாணாக்கர்களான சுன்னாகம் அ. குமாரசாமிப்புலவர், உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை, த. கைலாசபிள்ளை மற்றும் வித்துவான் ந. சுப்பையாபிள்ளை ஆகியோரின் நேரடிச் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்த பண்டிதமணி, நாவலர் சிந்தனைகளையும் நோக்கினையும் அறிந்து செயல்ப்பட்டார். காவிய பாடசாலைச் சூழலில் பத்து ஆண்டுகள் வரை, வாழ்ந்து கற்ற ஒருவர், அதன் தாக்கத்திற்கு உட்பட்டது இயல்பானதே.

1926இல், கணபதிப்பிள்ளை அவர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் ஆனார். நாவலரின் காவிய பாடசாலையில் கற்ற தமிழ்க்கல்வியறிவு, பண்டிதர் பரீட்சையில் தேறுவதற்குப் பெரிதும் துணையாயிற்று. காவிய பாடசாலையில் தமிழ் இலக்கியம், இலக்கணம், தர்க்கம், வடமொழி, சைவம் என்பனவற்றை முறையாகக் கற்றுத் தேர்ந்து, பாடசாலை வித்துவசபையினர் நடாத்திய பரீட்சைகளில் விசேட சித்தி பெற்று பரிசில்களையும் பெற்றவர் பண்டிதமணி.

மட்டுவில் அமெரிக்கமிஷன் பாடசாலையில் ஐந்தாம் வகுப்பு வரை படித்து விட்டு, முறைசார்ந்த பள்ளிப் படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்தவர், கணபதிப்பிள்ளை அவர்கள். அதன்பின், காவிய பாடசாலையில் சேரும்வரை, பல வருடங்கள் கல்வித் தொடர்பு பெரிதுமின்றிக் காலங்கழித்தார். இக்காலப்

பகுதியில் இராப்பள்ளிக்கூடங்களில் நடைபெற்ற புராணபடன வகுப்புகளுக்குப் போய் வருவார். அப்படிப்பட்ட கணபதிப்பிள்ளை, "யாழ்ப்பாணத்தில் ஆண்மக்களில் பண்டிதர் என்று ஒருவர் இல்லாத ஒரு காலத்தில் மதுரை தமிழ்ப் பண்டித பரீட்சையில் சித்தியெய்தினேன்." என்று குறிப்பிட்டு, அதற்குக் காரணம் நாவலர் பள்ளிக்கூடமும், மனேச்சர், புலவர் ஆகியோரின் அநுக்கிரகமும், வித்துவானின் கல்வி சொல்லவல்ல விற்பன்னமும் தான் என்று நன்றியுணர்வோடு நினைவுகொள்ளத் தவறுவதில்லை. நாவலர் பரம்பரையில் இடம்பெறும் தகுதிப்பாட்டையும் தகைமையையும், காவியப் பாடசாலையில் கற்ற காலத்தில் பண்டிதமணி வளர்த்துக் கொண்டார்கள். பின்னர் பக்குவமடைந்து, நாவலர் எண்ணங்களைச் செயற்படுத்த முனைந்த காலத்தில் இவ்வனுபவங்கள் அவருக்குப் பெரிதும் உதவின.

பண்டிதமணியின் ஆளுமை வளர்ச்சியில் பங்கு கொண்ட மற்றொரு நிகழ்வு, காவிய பாடசாலையில் கற்ற காலத்தில் "திருநெல்வேலி ஈரப்பலாச் சங்கம்" என்னும் கல்விமான்கள் குழாத்துடன் அவர்கொண்டிருந்த தொடர்பு ஆகும். காவிய பாடசாலைக் கல்வி பழமையில் பற்று வைக்கும் பண்பினை வழங்க, புதுமையில் நாட்டங்கொள்ளும் முனைப்பினை ஈரப்பலாச்சங்கம் அவரிடம் வளர்த்தது. திருநெல்வெலிச் சிவன்கோவிலுக்கருகே ஒரு தோட்டம், அங்கு செழித்து வளர்ந்த ஓர் ஈரப்பலா. அதன் கீழ்த் தினமும் சங்கம் கூடும். ஆங்கிலக் கல்வி கற்றோர், விஞ்ஞானம், தத்துவம், ஆங்கில இலக்கியம், கணிதம் போன்ற தத்தம் துறைகளில் மேலை நாடுகளில் ஏற்பட்ட நவீன முன்னேற்றம் பற்றிக் கலந்துரையாடுவர், அவர்களுள். பின்னர் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் உப-அதிபராக இருந்த கைலாசபதி அவர்களும், பரமேஸ்வர ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் அதிபராக விளங்கிய, கல்வியாளர் கலாநிதி கு. சிவப்பிரகாசம் அவர்களும், மட்டுவில் வே. நடராசா அவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். ஆங்கில மொழி தெரிந்து கொள்ளாத கணபதிப்பிள்ளைக்கு இவர்களின் கூட்டுறவால் மேற்கத்தைய புதுமைகளையும் அறிந்து தனது அறிவு நோக்கினைப் பரந்துபட்டதாக விரிவடையச் செய்யவும், நாவலர் பரம்பரையினருள் சற்று வித்தியாசமாகச் சிந்திக்கும் ஒருவராக ஆற்றலைப் பெறவும், பழமையைப் புதியனவற்றுடன் பொருத்திப் பார்க்கும் மனநிலையினை வளர்த்துக் கொள்ளவும் வாய்ப்புக்களை நல்கியது.

ஆசிரியராக வருவதாயிருந்தால், ஆசிரியபயிற்சி பெறவேண்டும். 1927ஆம் ஆண்டில் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் சேர்ந்து ஈராண்டு ஆசிரிய பயிற்சி பெற்றார். கல்வித் தத்துவம், உளவியல், கற்பித்தல் முறைகள் ஆகியவற்றில் புதிய விடயங்களையும், புதிய அனுபவங்களையும் பெற்றார். மகாலிங்கசிவம் அங்கு தமிழ் விரிவுரையாளராக இருந்தார். கணபதிப்பிள்ளை அவர்கட்கு ஏற்கனவே பழக்கப்பட்டவர் மட்டுவில் வேற்பிள்ளை உபாத்தியாயரின் மகன் அவர், மகாலிங்கசிவத்தின் உந்துதலாலேயே கணபதிப்பிள்ளை பயிற்சி பெறச் சென்றார். இலக்கிய இரசனையை, வித்துவசிரோன்மணி பொன்னம்பலம்பிள்ளையிடம் கற்று விருத்தி செய்து கொண்ட கணபதிப்பிள்ளை, மகாலிங்கசிவத்திடம் மேலும் கற்றதனால் இரசனையை நன்கு வளர்த்துக் கொண்டார். ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆசிரிய பயிற்சி பெற்றகாலத்தில் மேலைத்தேய, கீழைத்தேய கல்விச் சிந்தனைகள், புதிய போக்குகள், பிரச்சினைகள், உளவியல் கொள்கைகள் பற்றி ஆசிரிய - மாணவனாக இருந்து அறிந்து கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றிருந்தார். இங்கும் புதுமையில் பற்று வைக்கும் ஒரு தேவையை, காவிய பாடசாலைச் சூழலில் இருந்து வந்த கணபதிப்பிள்ளை உணர்ந்திருப்பார்.

தமிழ்ப் பண்டிதர் என்றால் சமூகத்திலிருந்து விலகியிருப்பார், பேசுகின்ற மொழி நடை உயர்ந்ததாக இருக்கும், நோக்கிலும், போக்கிலும் பழமைததும்பும், ஒரு வித்தியாசமான பேர் வழியாய் இருப்பார் என்ற ஓர் அபிப்பிராயம் தான் எல்லோரிடமும் இருக்கும். அப்படியான விசித்திரப்போக்குகள் எதுவும் பண்டிதமணியிடம் காணப்படவில்லை. இதற்குக் காரணம், நாம் முன்னர் பார்த்த புதிய புதிய சூழல்களில் பண்டிதமணி தமது ஆளுமையை வளர்த்துக் கொண்டமையேயாகும்.

> "முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய்
> பின்னைப் புதுமைக்கும் பேர்க்குமப் பெற்றியனாய்"

விளங்குபவன் இறைவன் என்று கூறி இறைவனைத் துதிக்கின்றோம். பண்டிதமணி, நாவலர் காவிய பாடசாலையில் சைவத்தமிழ் மரபுக் கல்வியைத் தக்க ஆசிரியர்களிடம் பயின்று பழமையை உணர்ந்தார். பண்பாட்டினை அறிந்தார். ஈரப்பலாச்சங்கம், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, மற்றும் ஆங்கிலக்கல்விகற்றுத்

தேர்ந்தோருடனான சேர்க்கை என்பவற்றால் புதுமையையும் விசாரணை செய்தார். இந்த வகையில் பழமையும் புதுமையும் சங்கமித்த ஒருவராகப் பண்டிதமணி விளங்கினார்.

பண்டிதமணியில் சங்கமமான பழமையும் புதுமையும், அவரது பேச்சுக்கள், எழுத்துக்களில் வெளிப்பாடாயின. இதற்குக் களம் அமைத்துக்கொடுத்தது, திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையாகும். நாவலர் பரம்பரை என்ற வட்டத்திற்குள் பண்டிதமணி நின்றாலும் கூட, அப்பரம்பரையின் தனித்துவத்தைப் பேணிய அதேவேளை, தமது தனித்துவத்தையும் இணைத்துக் கொண்டார். தாம் வாழ்ந்த காலத்து உணர்வினையும், சமகாலத் தேவைகளையும் அவர் கருத்தில் கொள்ளத் தவறவில்லை. காலத்திற்கு ஒவ்வாதவற்றைக் கழிக்கவும், தேவையானவற்றைப் புகுத்தவும் அவர் தயங்கவில்லை.

பண்டிதமணி கண்டனக்காரர் என்று பெயர்பெற்று இருந்தார். நாவலர் பெருமானின் பெருமைகளைக் குறைத்துப் பேசியும் எழுதியும் வந்தவர்களையும், அவரின் உண்மைச் சரித்திரத்தை இருட்டடிப்புச் செய்தவர்களையும் சி. வை. தாமோதரம்பிள்ளையின் பதிப்புப்பணிகளைத் திரித்துக் கூறியவர்களையும் பண்டிதமணி விட்டுவைக்கவில்லை. அவர்களைக் கண்டித்துத் தக்க பதில் கொடுத்துள்ளார். பத்தொன்பதாம் நூற்றண்டுத் தமிழ் இலக்கிய வரலாற்றை உருவாக்குவதிலும், தமிழிலக்கிய இலக்கண மறுமலர்ச்சியைத் தோற்றுவித்து வளர்ப்பதிலும், இலங்கைத் தமிழறிஞர்களின் பங்கு மிகக் கணிசமானது. இந்த உண்மையைத் தாங்கிக் கொள்ள முடியாத தமிழ்நாட்டு அறிஞர்கள் சிலர் இவ்வாறு இலங்கைத் தமிழறிஞர்களுக்கெதிராக அவதூறுகள் கிளப்பினார்கள். இதனை எதிர்த்து நாவலர் பரம்பரையினர் சார்பாக, போர்க்கொடி தூக்கிய பண்டிதமணி, பொய்ம்மையாளரைக் கண்டித்தது உண்மைதான். அதனால் அவர் வரட்டுப் போக்கோ, குறுகிய மனப்பான்மையோ கொண்டவரென்று கூறிவிடமுடியாது.

நாவலர் பரம்பரையினரை இனங்காண்போர் அவர்களிடம் உள்ள பொதுத்தன்மைகள், இலட்சணங்களைச் சுட்டிக்காட்டுவர். அவையாவன: இலக்கிய, இலக்கண, சாத்திர, நூற்புலமை, கல்விப் பணி, நூல் வெளியீடு, சைவசமய பிரசாரம், பிறமத

கண்டனம், பிரசங்கமுறை, புராண படனம், அருட்பாக்கோட்பாடு என்பனவே அவையாகும். பண்டிதமணி, அவர் வாழ்ந்த காலத்து நிலைமையோடு ஒத்துப் பார்க்கும்போது, சற்று முற்போக்குச் சிந்தனையாளராகக் கொள்ள வேண்டியுள்ளது. பழமைக்கும் புதுமைக்கும் இணக்கங்கண்டவராய், சைவத்தமிழ்ப் பண்பாட்டின் பாதுகாவலராய் வாழ்ந்து காட்டியவர் பண்டிதமணி ஆவார்.

திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் தமிழ் விரிவுரையாளராக நியமனம் பெற்றதும் பண்டிதமணியின் சைவவித்தியாவிருத்திச் சங்கத்துடனான தொடர்பு நெருக்கமாயிற்று. "இந்துப்போர்ட்" என்று அழைக்கப்படும் இந்நிறுவனம் சைவத்தமிழ்ப் பாடசாலைகளை நாடெங்கிலும் நிறுவிப் பெரும்பணியாற்றியது. அதன் முகாமையாளர் உயர் திரு. சு. இராசரத்தினம் அவர்கள் பண்டிதமணியின் ஆலோசனைகளைப் பெற்றுப் பணியாற்றி வந்தார். ஆசிரிய கலாசாலையில் ஆசிரிய பயிற்சி பெற்று, இந்துபோர்ட் பாடசாலைகளில் ஆசிரியர்களாகச் சேவைசெய்த நூற்றுக்கணக்கானவர்கள் மூலம் நாவலர் ஞானபரம்பரை ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி, நாடெங்கிலும் பரந்து, செழித்து வளர்ந்தது. மற்றெவரும் செய்யாத அளவிற்கு, நாவலர் பரம்பரையை பரக்கச் செய்த பெருமை பண்டிதமணியைச் சேர்ந்தது. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் தமிழ் விரிவுரையாளராகக் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

சைவவித்தியா விருத்திச்சங்கம் நிறுவிய ஆசிரிய கலாசாலை, முத்துத்தம்பி வித்தியாசாலை, அநாதைசாலை எள்பன ஒரே வளாகத்தில் இருந்தன. 1935 ஆம் ஆண்டில் பண்டிதமணியின் சிந்தனையில் உதித்த காவிய பாடசாலை, திருநெல்வேலி வளாகத்தில் ஆரம்பிக்கப்பட்டது. பண்டித வகுப்புக்களுடன், சமஸ்கிருதம், சிங்களம், ஆங்கிலம் போன்ற மொழிகள் கற்பிக்கவும் ஒழுங்குகள் செய்யப்பட்டன. செயற்திறனிலும் மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. நூல் நூற்றல், நெசவு நெய்தல், தோட்டவேலை, பன்னம் என்பன தொடங்கப்பட்டன. முத்துத்தம்பி வித்தியாசாலை மாணவர்கள் ஏட்டுக்கல்வியுடன் தொழிற்கல்விப் பயிற்சியும் பெற்றனர். நாவலர் வழிவந்த மரபுக்கல்வியுடன், தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தக் கூடிய மொழிக்கல்வி, வாழ்க்கையை

நடாத்துவதற்குரிய தொழிற்கல்வி என்பனவற்றையும் சேர்த்துக் கலைத்திட்டம் அமைத்துப் புதிய சிந்தனையுடன் காவிய பாடசாலையை நடத்திய பெருமை பண்டிதமணியைச்சாரும். நான்கு ஐந்து ஆண்டுகள் இலவசமாக நடைபெற்ற இக்கல்வி முறைமைக்கு மூடுவிழாச் செய்யப்பட்டது, தமிழ் மக்களின் துர்அதிர்ஷ்டமே. நிறைவேறாத தனது இக்கல்வித்திட்டத்தை வாழ்நாள் முழுவதும் உள்ளம் உருக்க கூறிக் கூறிப் பண்டிதமணி ஆதங்கப்படுவார்.

பண்டிதமணியின் சிந்தனைகளுக்குச் செயல்வடிவம் கொடுப்பது நம்கடன். அதுவே, இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையை நினைவுகூருவதற்குச் சிறந்த முறையாகும்.

## 2. பண்டிதமணி இலக்கிய கலாநிதி சி. கணபதிபிள்ளை - வாழ்வும் வளமும்

பண்பாடு, பாரம்பரியம், மரபு, கலாசாரம், பழைமை, என்பன பல நூற்றாண்டு காலமாக நமது முன்னோரினால் தேடப்பட்டு, பாதுகாக்கப்பட்டு, பேணி வளர்க்கப்பட்டு நம்மிடம் கையளிக் கப்பட்டுள்ள அரும்பெரும் செல்வங்கள். இவையனைத்தும் காலந்தோறும் மக்களின் வாழ்க்கையிலிருந்து மலர்ந்தவைகளே. இவை வாழ்க்கையை மேம்படுத்த உதவுகின்றன. காலந்தோறும் இவை பரிசோதனைகளுக்குட்படுத்தப்பட்டு, வாழ்க்கைக்குப் பொருந்தாதன கழிக்கப்பட்டு, வேண்டுவன பேணப்பட்டு, மேலும் தேவையானவை புதிதாகச் சேர்க்கப்பட்டு இத் தலைமுறையிளருக்கு நம் மூதாதைகளால் வழங்கப்பட்ட முதுசொத்துக்கள். ஓர் இனத்தின் பெருமை, சீர், சிறப்பு, செழுமை, உயர்வு என்பன இவற்றில் அவ்வினம் அடைந்துள்ள அடைவுகளை கொண்டே மதிப்பீடு செய்யப்படுகின்றது. விஞ்ஞான மேதை ஐசாக் நியூட்டன் இது தொடர்பாக தரும் கருத்து மனதில் கொள்ளத்தக்கது.

"எனது முன்னோர்களைக் காட்டிலும் என்னால் அதிக தொலைவு காணமுடிந்தமைக்கு காரணம் அவர்களின் தோள்களின் மீது ஏறி நின்று நான் பார்த்ததே". இங்கு முன்னோர்களின் தோள்கள் என்று குறிப்பிடப்படுபவை நம்முன்னோர்கள் எமக்களித்த இவ்ச் செல்வத்தையும் பண்பாட்டு மரபுகளையும் என்று உணர்ந்து கொள்ள வேண்டும். மனிதனின் நாகரிக வரலாறு என்பது இவ் அரும்பெருஞ் செல்வங்கள் தோன்றி வளர்ந்து வந்த வரலாறு தான். இவையில்லாத மனித சமுதாயத்தை ஒரு தரம் கற்பனை செய்து பார்த்தால் அச்சமுதாயத்தின் வெறுமை, வறுமை, சிறுமை என்பன துலங்கக் காணலாம்.

மரபு, பழைமை என்பன பண்பும், பயனும் பலம் கொண்டன. இவை பிற்போக்கு அன்று: பின்னோக்கேயாம். பின்னோக்கும் முற்போக்கும் சேர்ந்து செல்ல கூடியன. மனித சமுதாய வளர்சிக்குப் பழைமையும் புதுமையும் இணைதல் நன்மை தரும். இப்பின்னோக்கும் மரபுகளில் பற்று வைக்கும் நிலைம்

புதுமைக்கு அடித்தளமாக அமைகின்றன. புதுமை பழைமையில் இருந்து பிரவாகித்து எழவேண்டும். இவ்வாறு பழைமை மரபு பாரம்பரியங்களில் பற்றும், உணர்வும் கொண்டு அதேவேளை வாழுங்காலத்துப் புதுமை உணர்வுகளையும் அரவணைத்து, இரண்டிற்கும் பாலம் அமைத்துச் சைவத்தமிழ் மறுமலர்சிக்குப் பெரும் பணிகள் ஆற்றிய இந்த நூற்றாண்டின் சைவத்தமிழின் தலைமகன் பண்டிதமணி, இலக்கிய கலாநிதி சி. கணபதிபிள்ளை ஆவர்.

சென்ற நூற்றாண்டில் சைவமும்,தமிழும், சைவத் தமிழ் மக்களின் பண்பாடும்,மரபுகளும் அந்நியரினால் ஆக்கிரமிப்புக்குள்ளாகி இருந்த போது, இவற்றை மீட்டு, பாதுகாத்து, இவற்றின் மறுமலர்சிக்காக அல்லும்,பகலும் உணர்வோடு உழைத்துப் பெரும் பணியாற்றியவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள். நாவலருக்குப் பின் இவற்றின் காவலராக நாவலர் ஞானபரம்பரையைத் துலங்க வைக்க எழுந்த ஞானபானுவாக இந்த நூற்றாண்டில் பண்டிதமணி சி.கணபதிபிள்ளை விளங்கினார்.

கல்வி என்பது விளக்கேற்றல் என்று நாவலர் கூறியுள்ளார். ஒரு விளக்கில் இருந்து பல விளக்குகளை ஏற்றிவைக்க முடியும். நாவலர் ஒரு ஞானவிளக்கு. இந்த ஞானவிளக்கிலிருந்து பல ஞானவிளக்குகள் ஏற்றப்பட்டன. நாவலர் ஞானபரம்பரையினர், இந்த ஞானச் சுடர்களாக விளங்கினர். இந்த ஞானச்சுடர்களுள் மிகப் பிரகாசமான சுடராகப் பரிணமித்தவர் பண்டிதமணி.

யாழ்ப்பாணக்குடாநாட்டில், தென்மராட்சிப் பிரிவில், மடுவில் எனும் கிராமத்தில் *1899* ஆம் ஆண்டு ஆனி மாதம் இருபத்தேழாந்திகதி சின்னத்தம்பி, வள்ளியம்மை தம்பதிகளுக்குக் குழந்தையாகப் பிறந்தவர் நமது பண்டிதமணி. தனங்கிளப்பு இவரின் தாயாரின் ஊர். இங்கு எழுந்தருளியிருக்கின்ற காரைத்தூ விநாயகரைத் தொழுது தவமிருந்து வேண்டிப் பெற்ற பிள்ளையாகையினால் இவருக்குக் கணபதிப்பிள்ளை என்று திருநாமம் சூட்டினர்.

தெய்வநம்பிக்கை, சைவ அநுட்டானங்கள், புராணபடனம், தமிழ் இலக்கிய இலக்கண அறிவு, தமிழர் சால்பு ஆகியன

நிரம்பப் பெற்ற குடும்பம், உறவினர்கள், சமூகச் சூழல், கணபதிப்பிள்ளையின் பிள்ளைப் பராய வளர்ச்சிக்கும் செம்மைச் செழிப்புக்கும் உரமும் வலுவும் அளித்தன. இவை அவரின் ஆளுமை உருவாக்கத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பது உணரற்பாலது.

மட்டுவிலில் தமது ஆரம்பக்கல்வியைத் தன்னும் முறை சார்ந்த பாடசாலையில் முழுமையாகத் தொடரமுடியாத நிலையில் 1912 ஆம் ஆண்டில் இவரின் தந்தை சின்னத்தம்பியார், கணபதிப்பிள்ளையையும் அழைத்துக் கொண்டு சென்று தனங்கிளப்புக் கிராமத்தில் குடியேறினார்.

மட்டுவில், தனங்கிளப்பு உள்ளிட்ட பல கிராமங்களைக் கொண்டது தென்மராட்சி. இங்கு மருத நிலப் பண்புகளும், எழில் நிறைந்த இயற்கை வளங்களும், நோக்குமிடமெங்கணும் நீக்கமற நிறைந்து காணும் சைவத் திருக்கோயில்களும், எளிமையும், உயர் தமிழ்ப்பண்புகளும் ஒன்று சேர வாழ்வாங்கு வாழும் சான்றோர்களும், பசுமையும், வந்தாரை வரவேற்று விருந்தோம்பும் பண்பும் நிறைய இருந்தன. முறை சார்ந்த பாடசாலைகளிற்றான் கல்வியை கற்க வேண்டும் என்ற நிலைபாடு அன்று அவ்வளவு தூரம் இப்பகுதிகளில் நிலை கொள்ளவில்லை. முறை சார்ந்த பாடசாலை படிப்பின் எதிர்பார்ப்பு, சான்றிதழ் பெற்று உத்தியோகம் பெறுதல் இக் கிராமங்களில், மக்களின் சுயதேவைகளைப் பூர்த்தி செய்து, திருப்தியான வாழ்வினை நடாத்துவதற்கு வேண்டிய பொருளாதார வளங்களும், வாய்ப்புக்களும் இருந்தமையினால் உத்தியோகங்களில் அமர்ந்தால்தான் வாழ்வு என்ற மன அங்கலாய்ப்பு மக்களில் அவ்வளவு தொற்றிகொள்ளாத காலம் அது. எனவே, கணபதிபிள்ளையும் உத்தியோகப்பற்றுள்ள பாடசாலைக் கல்விக்கு முற்றுப்புள்ளியிட்டமை பற்றி அவரின் குடும்பத்தவரோ, உறவினரோ கவலைபடவில்லை. எனினும், இயற்கையோடினைந்த வாழ்வுச் சூழலிருந்து அனுபவம், கேள்வி, ஒழுக்கம் என்பவற்றின் மூலம் கணபதிபிள்ளை கற்க வேண்டியவற்றைக் கற்றுக் கொண்டுதான் இருந்தார். திண்ணைப்பள்ளிகூடங்களிலும், இராப்பள்ளிகூடங்களிலும் அற நூல்கள், சமயநூல்கள், புராண இதிகாசங்கள், தமிழ் இலக்கிய இலக்கணம் என்பவற்றையும் கற்றுக் கொள்ளத் தந்தையார் ஏற்பாடு

செய்திருந்தார். இதனால் இவரின் உறவினர், உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை, சாவகச்சேரி பொன்னம்பலபிள்ளை, பொன்னையா உபாத்தியாயர் பொன்னப்பாபிள்ளை ஆகியோருடனான குரு-சீட உறவும், குருகுல வாசமும், வாசனையும் கணபதிபிள்ளைக்குக் கிடைத்தன. உத்தியோகப்பற்றற்ற, முறைசாராத, இயற்கையான இக் கல்விமுறை, கற்போரை மக்கட் பண்புடையோராக்குகின்றது: அங்கலாய்ப்புக்கள், ஏக்கங்கள், சஞ்சலங்கள் இல்லாத சாந்தியும், சமாதானமும், தன்னம்பிக்கையும் நிறைந்த நல் வாழ்விற்கு இட்டு செல்கின்றது. உடல், உள, ஆத்மீக வளர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய தூய்மையான கிராமியச் சூழலில் கணபதிபிள்ளை தமது இளமைப்பருவத்தில் பதினெட்டு ஆண்டுகளைக் கழித்தார். "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பதற்கிணங்க இப் பருவத்தில் கணபதிபிள்ளை இயற்கையோடிணைந்து தன்னிச்சையாகக் கற்ற கல்வியும் பெற்ற அனுபவங்களும் அவரின் வாழ்வு முழுவதும் ஊடுருவிச் செறிந்து நிலைப்பெற்றன. மனிதனுக்கு இயல்பானவற்றை இயற்கை வழி நின்று கற்றார். மனிதனுக்கு இயல்பானவை அன்பு, மானிடநேயம், உண்மை, கருணை, நீதி, நல்லொழுக்கம் என்பன. மனிதனுக்கு அந்நியமானவற்றைக் கற்காது விட்டார். மக்களின் வாழ்க்கைத் தேவைகள் வேறு வாழ்க்கை ஆசைகள் வேறு. வாழ்க்கை ஆசைகள் குறைந்ததும் ஆனால் வாழ்க்கைத் தேவைகளை ஓரளவேனும் பூர்த்தி செய்யக் கூடியதுமான கிராமியச் சூழல் கணபதிபிள்ளைக்கு இளமைப் பருவத்தைச் செம்மைப் படுத்தியிருந்தது.

இத்தகைய கிராமிய, சைவத் தழிழ்ப் பண்பாட்டுச் சூழலில் பதினெட்டு ஆண்டு முன்பள்ளிப் படிப்பின் பின்னர் 1917 ஆம் ஆண்டு கார்த்திகை மாதத்திலிருந்து வண்ணார்பண்ணை நாவலர் காவிய பாடசாலையில் மாணவனாகச் சேர்ந்து சைவத்தமிழ் மரபுக் கல்வியைக் கற்கும் வாய்ப்பு கணபதிபிள்ளைக்குக் கிடைத்தது. நாவலர் ஞானப்பரம்பரையின் ஞானக் கொழுந்தாக உருவாவதற்கு கால்கோள் இடப்பட்டது. சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர், நாவலரின் தமையனார் மகன் ஸ்ரீமத் த. கைலாசப்பிள்ளை, வித்துவான் சுப்பையாபிள்ளை ஆகியோரிடம் கற்க வேண்டியவற்றைக் கசடறக்கற்றார். சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் நாவலரின் நேரடி செல்வாக்கிற்கு உட்பட்டு நாவலரின் கொள்கைகளை நன்கு உணர்ந்து கொண்டவர். அத்துடன்

சி. வை. தாமோதரம்பிள்ளை, வித்துவசிரோன்மணி பொன்னம்பலம் பிள்ளை இலக்கிய ரசனையில் மிக்க புலமை பெற்று விளங்கியவர். இவர்கள் யாபேரினதும் செல்வாக்கிற்குட்பட்ட கணபதிபிள்ளை, காவிய பாடசாலையில் பெற்ற கல்வி அனுபவங்களால் நாவலரின் சைவத்தமிழ்ப் பேரியக்கத்தின் இருபதாம் நூற்றாண்டுக் காவலராகவும், அவரின் ஞானப்பரம்பரையைத் தொடர வைப்பதில் முக்கிய இயக்குனராகவும் விளங்குவதற்கு வேண்டிய தகைமைகளை பெற்றார்.

1926ஆம் ஆண்டு, மதுரை தமிழ்ச்சங்க பண்டிதர் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தி பெற்று பண்டிதர் பட்டத்தையும் பெற்றார் கணபதிபிள்ளை.

இவையனைத்தும் செந்தமிழின் பழைமையினையும், மரபினையும் இலக்கண இலக்கிய வளத்தையும் அறிந்து கொள்ளக் கணபதிபிள்ளைக்கு உதவின. இலக்கிய இரசனையையும் நன்கு வளர்த்துக் கொண்டார். அத்தோடு ஈழமண்டலத்துப் புலவர்கள் சரித்திரங்களையும் பேராசான் குமாரசுவாமிப் புலவர் அவர்களிடம் பாடங்கேட்கும் போதெல்லாம் அவர் சொல்லக் கேட்டறிந்து அவர்கள் மீது பற்றும் பாசமும் கொள்ளத் தொடங்கினார். இதனால் பின்னர் பல தடவைகள் இவர்களின் உண்மை வரலாறுகளை நிலைநாட்டும் பொருட்டு அவற்றை இருட்டடித்தவர்களுக்கு எதிராகப் போர்கொடி தூக்கவும், கண்டணக்குரல் எழுப்பவும் நேர்ந்தது.

காவிய பாடசாலையில் கற்ற காலத்தில் இலங்கையில் ஆங்கிலக் கல்விமுறை நன்கு வேரூன்றி விட்டது. இந்துக் கல்லூரிச்சபை போன்ற சைவக் கல்வி நிறுவனங்களும், பாடசாலைகளை நிறுவி ஆங்கிலக் கல்வி முறையை ஒட்டிய கல்வியையே அளித்து வந்தன. இந்த நிலையில் இக் கல்வியைக் கற்றவர்களே நாகரீகமானவர்கள் என்றும் கற்றறிந்தோர் என்றும் சமூகத்தின் உயர் குழாத்தினர் என்றும் கொள்ளப்பட்டனர். கல்வி அதியுயர்ந்த பணப்பெறுமதியை பெற்ற காலம் அது. இந்நிலையில் பண்புப் பெறுமதியையும் மனித விழுமியங்களையும் வழங்கி வந்த தமிழ்ப் பாரம்பரியக் கல்வி புறக்கணிப்புக்குள்ளானது. நாவலர் பெருமான் கல்வி மறுமலர்ச்சி வேண்டிச் செய்த தவமும் தானமும்

எங்கே அவமாகி விடுமோ என்று அஞ்சப்பட்ட காலம். எனவே பண்டிதமணிக்கு நன்கு சிந்தித்து செயற்பட வேண்டிய நிலை ஏற்பட்டது.

நாவலர் பணியாற்றிய காலச் சூழ்நிலை வேறு: பண்டிதமணி பணியாற்ற எதிர்நோக்கிய காலச் சூழ்நிலை வேறு. கால உணர்வையும்: பெருகி வரும் அறிவு வளத்தையும் கருத்திற் கொள்ளாமல் இருக்க முடியாது. அதேவேளை நாவலரின் சைவத் தமிழ் மறுமலர்ச்சிக்குப் பணிகளையும் தொடர வைக்க வேண்டும். இந்நிலையில் மாற்று வழிகளையும், புதிய உத்திகளையும் கையாளும் திறன்களைப் பெற்றுக் கொள்ளத் தன்னைத் தயார் செய்யும் காலமாக அவர் வாழ்வின் அடுத்த கட்டம் ஒன்று உருவாயிற்று.

நாவலர் காவிய பாடசாலையில் பண்டிதமணி கற்றுக் கொண்டிருந்த காலத்திலும், அதற்குப் பின்னரும், ஆங்கிலக் கல்விமுறையில் அறிவியல் நூல்களும், இலக்கிய நூல்களும் கற்றவர்கள், அதேவேளை தமிழ் ஆர்வலர்களாகவும் விளங்கியவர்கள் சிலரும் பண்டிதமணியும் திருநெல்வேலியில் உள்ள வளவில் ஈரப்பலாமரம் ஒன்றின் கீழ் அவ்வப்போது கூடி சைவமும் தமிழும் பற்றியும் ஆங்கிலக் கல்லூரி அனுபவங்கள், அறிவியல் தொடர்பாகவும் மேலைத்தேய கீழைத்தேய தத்துவம், இலக்கியம் பற்றியும் ஆழமான கருத்துப் பரிவர்த்தனைகள் நடாத்தி வந்தார்கள். இதனை "ஈரப்பலாச்சங்கம்" என்றழைத்தனர். இந்தமுறைசாராத அமைப்பில் கலாநிதி சு. சிவப்பிரகாசம்: பட்டதாரிகளான மட்டுவில் வே. நடராசா, பொ. கைலாசபதி, தென்மராட்சி நடராசா, வைத்தியலிங்கம் போன்றோருடன் பண்டிதமணியும் இடம் பெற்றிருந்தார். பண்டிதமணி புதியனவற்றில் நாட்டம் செலுத்தும் பண்பினைப் பெறுவதற்கும் தனது அறிவு எல்லையை, தமிழ் வட்டத்திற்கு அப்பாலும் நீடித்துக் கொள்வதற்கும் ஈரப்பலாச்சங்கம் தகுந்த களம் ஒன்றினை அமைத்துக் கொடுத்தது. பண்டிதமணி தனது கேள்வி ஞானத்தை விருத்தி செய்து கொண்டார். செல்வத்துள் எல்லாம் தலையாயது செவிச் செல்வம். பண்டிதமணியின் புலமைக்கும், புகழுக்கும் இது பேருதவியாக இருந்தது.

பண்டிதராக இருந்தால் மட்டும் ஆசிரியர் வேலை கிடைத்து விடாது. எனவே ஆசிரிய பயிற்சித் தராதரப் பத்திரம் பண்டிதமணிக்கு ஆசிரியத் தொழில் பெறுவதற்குத் தேவைப்பட்டது. கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலையில் 1927ஆம் ஆண்டிற் சேர்ந்து இரண்டு ஆண்டுகள் பயிற்சி பெற்றார். ஆசிரிய பயிற்சித் தராதரப் பத்திரம் கறிக்குத் தாளிதம் போல, பண்டிதர், புலவர், வித்துவான் என்றிருந்தவர்களுக்குச் சிறப்புச் செய்தது என்று பண்டிதமணி நகைச்சுவையுடன் கூறுவார்.

1929 ஆம் ஆண்டு, பண்டிதமணி அவர்கள் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் தமிழ் விரிவுரையாளர் ஆனார். தொடர்ந்து முப்பது ஆண்டுக் காலம் அப்பதவியை அலங்கரித்தார். இக்கலாசாலையில் ஆசிரியப் பயிற்சி பெற்ற ஆயிரக்கணக்கானோர்க்கு இவர் "குருமணி" யாக அமர்ந்து அவர்களினால் அன்பாக "பண்டிதரையா" என அழைக்கப்பட்டு வந்தார். பண்டிதரையா சைவத் தமிழ்ப் பேரியக்கத்தின் காவலராகத் திருநெல்வேலியில் வீற்றிருந்து உருவாக்கிய சைவத் தமிழ் ஆசிரியச் செம்மல்கள் இலங்கையின் பல பாகங்களிலும் உள்ள சைவப் பாடசாலைகளிலும், இந்துக் கல்லூரிகளிலும் நல்லாசிரியர்களாக அமர்ந்து அறிவோடு சைவத்தமிழ்ப் பண்பாட்டையும், அறங்களையும் பரப்பினார்கள். நாவலர் ஞானபரம்பரை, பண்டிதமணியின் தலைமையில், பண்புரீதியாகவும், தொகை ரீதியாகவும் பெருவளர்ச்சி கண்டது.

சைவாசிரிய கலாச்சாலையில் பண்டிதமணி பணியாற்றிய காலத்தில் மூவருடன் மிக நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்தார். பண்டிதமணியின் இலட்சியப் பணிகளுக்கு இத்தொடர்புகள் வலுவையும், வனப்பையும் தந்தன. இக் கூட்டு அணி நீண்டதொரு காலப் பகுதிக்கு நிலைப்பெற்றிருக்குமேயானால், அதன் சாதனைகள் பலவற்றின் காத்திரமான நிலைகளைத் தமிழ் மக்கள் கண்டும், அவற்றின் பயன்களை அனுபவித்தும் கொண்டிருப்பார்கள். ஆனால் காத்திராப்பிரகாரமாகக் குறிப்பிட்ட குறுகிய காலத்தின் பின்னர் அது தளர்ச்சி கண்டது தமிழ் மக்களின் துர்பாக்கியம் போலும். சைவாசிரிய கலாசாலை அதிபர், மயிலட்டி சி. சுவாமிநாதன், உப- அதிபர் பொ. கைலாசபதி, சைவாசிரிய கலாசாலையையும் அநேக சைவப் பாடசாலைகளையும் நிறுவி

நிர்வாகித்து வந்த சைவவித்தியா விருத்திச் சங்க முகாமையாளர் சு. இராசரத்தினம் ஆகியோரே இந்த மூவரும் ஆவர். பண்டிதமணி சைவாசிரிய கலாசாலையில் பணிபுரிந்த தொடக்க காலங்களில் இலக்கியரசனையில் கூடிய ஈடுபாடு கொண்டு இருந்தார். கம்பராமாயணம் அவரைப் பெரிதும் கவர்ந்திருந்தது. தனது இரசனையை கட்டுரைகள், உரைகள் வாயிலாக வெளியுலகிற்கு வெளிப்படுத்தினர். இலக்கிய சர்ச்சைகள் பலவும் நடைபெற்றன. நாவலர் பரம்பரைக்கு ஏற்ப இலக்கியத்தின் அற அடிப்படையை மிகவும் அழுத்தி வந்தார் பண்டிதமணி. இந்த அடிப்படையில் நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் பண்டிதமணியின் நெஞ்சத்தை தொட்டுக் கொள்ள முடியவில்லை.

இந்தக் காலப்பகுதியில், பண்டிதமணி பங்கேற்றுப் பணியாற்றிய மூன்று அமைப்புகள் அவரின் பங்களிப்பினால் பரிமளிப்புப் பெற்றன. இவற்றுள் ஒன்று 1931 ஆம் ஆண்டளவில், அறிஞர்களும், கல்விமான்களும், கலைஞர்களும் ஒன்றிணைந்து வண்ணார்பண்ணையில் நிறுவிய கலாநிலையம். இதனை ஆரம்பிப்பதில் கலைப்புலவர் க. நவரத்தினம் முன்னோடியாக இருந்து அதன் செயலாளராகவும் விளங்கினார். கலையாக்கங்கருதி ஆரம்பித்த இக்கற்றோர் பேரவையில் இலக்கியம், இலக்கணம், தத்துவம், பௌதிக விஞ்ஞானம், வரலாறு, ஓவியம், நாகரீகம் ஆகிய துறைகளில் பாரதமும், இலங்கையும் அடைந்த பேறுகள் தொடர்பான ஆய்வுகள், விளக்கங்கள், விரிவுரைகள் நடைபெற்றன. திரு. சு. நடேசன். சுவாமி விபுலானந்தர் உள்ளிட்ட பல பெரியார்கள் அங்கம் வகித்தனர். பண்டிதமணி கலாநிலையத் தொடர்பினால் இலக்கியத் துறையிலும் கலைத்துறையிலும் பல புதிய அனுபவங்களைப் பெற்றுக் கொண்டார்.

பண்டிதமணி யாழ்ப்பாணம் ஆரிய திராவிடர் அபிவிருத்திச் சங்கச் செயற்பாடுகளிலும் முன்னின்று உழைத்தவர். கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் இயங்கிய இச்சங்கம் வடமொழி, தமிழ் மொழி, ஆகியவற்றின் விருத்தியின் பொருட்டு பணியாற்றியது. பிரவேச பண்டிதர், பால பண்டிதர், பண்டிதர் பரீட்சைகளை நடாத்திப் பட்டங்கள் வழங்கி வந்தது. இதன் தொடர்பாகப் பண்டிதமணி திருநெல்வேலி சைவாசிரியர் கலாசாலை வளாகத்தின் காவிய பாடசாலை ஒன்றை பன்னிரண்டாண்டுகள்

1935 ஆம் ஆண்டிலிருந்து நடாத்தி வந்தார். தமிழ், சமஸ்கிருதம், சிங்களம் ஆகிய மும்மொழிகளும் போதிக்கப்பட்டன. பண்டிதமணியின் ஒருமைப்பாடு பற்றிய தீர்க்க தரிசனச் சிந்தையை இதிலிருந்து உணர முடிகிறது. இத்துறைகளில் பாலபண்டித, பண்டித உயர்தகைமைச் சான்றிதழ்கள் பெற்றுக் கொள்வதற்கு மாணவர்கள் ஆயத்தப் படுத்தப்பட்டனர்.

பண்டிதமணியின் தமிழ்மரபுவழிக் கல்விச் சிந்தனையையும், சைவசித்தாந்த மரபுச் சிந்தனையையும் செயற்படுத்துவதற்கும், நாவலரின் சைவத்தமிழ்ப் பேரியக்கத்தை நடத்திச் செல்வதற்கும், இவற்றிலிருந்து பொங்கியெழுந்த புதுமைகளைச் செய்து பார்ப்பதற்கும் சைவ வித்தியாவிருத்திச் சங்கம் அதன் வரலாற்றின் முதற்கால கட்டத்தில் பண்டிதமணிக்கு இடமளித்தது. சைவப்பெரியார் சு. இராசரத்தினம் அதன் முகாமையாளராக அதனை இயக்கி வந்தார். நாவலருக்குப் பின் நமக்கோர் காவலர் திரு. இராசரத்தினம் என்று பண்டிதமணியால் போற்றப்பட்டவர். ஊர்கள் தோறும் சைவப் பாடசாலைகள் நிறுவப்பட்டன. சைவப் பிள்ளைகள் சைவச் சூழலில் கல்வி கற்ற வேண்டும் என்ற கொள்கை ஒரு பேரெழுச்சியாக உருவெடுத்தது. சங்கத்தின் கல்விப்பணி மகத்தான சாதனைகள் ஆகின. திருநெல்வேலியில் சைவ அநாதைசாலை நிறுவி நடாத்தப்பட்டது. மும்மொழிக் காவிய பாடசாலை வீறுநடை போட்டது. இவற்றிற்கெல்லாம் அச்சாணியாகவும், ஆன்மீக மூச்சாகவும் விளங்கியவர் பண்டிதமணி. சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் நோக்கம், “மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்” என்பதே. சைவநீதியும் தமிழ்நீதியும் ஒன்றுதான்: வேறல்ல. இந்த நிலையில், சைவம் எனும் பரந்த, விரிந்த, ஆழ்ந்த பரப்பினை ஓரளவிற்கேனும் அறிந்து கொள்ள வேண்டிய தேவை பண்டிதமணிக்கு ஏற்பட்டது. இத் தேவையை நிறைவு செய்யும் முயற்சியில் அவரின் வாழ்க்கை நோக்கிலும் போக்கிலும் கூடத் திருப்பம் ஏற்பட்டது. நாவலர் காவிய பாடசாலையில் புலவரிடம் கற்ற கல்வி, தமிழ் இலக்கிய இலக்கன நூற் புலமை, இலக்கிய ரசனை, கண்டனக் கலை, அறவொழுக்கம் கந்தபுராண கலாசாரம், ஈழத்தமிழ் புலவர் சரித்திர ஆர்வம் ஆகியவற்றைப் பண்டிதமணியிடம் வளர்த்தது. இதன் பின்னர் பெற்ற மேற்கத்தைய இலக்கிய கலை அனுபவங்கள் பண்டிதமணியைப் புதுமையில் நாட்டங் கொள்ளச் செய்தன.

பண்டிதர்கள் என்றாலே ஒருவகைத் தனிப்போக்கு உள்ளவர்கள், பழைமை வாதிகள், உலகத்துடன் உடன் போக்கு அற்றவர்கள் என்ற எண்ணத்தை மாற்றியமைத்துப் பண்டிதர் குலத்திற்கு ஒரு புதிய நோக்கினையும், புதிய பார்வையையும் ஏற்படுத்தியவர்.

உப அதிபர் பொ. கைலாசபதியின் நேரடி ஆட்கொள்ளலின் கீழ் பண்டிதமணி வந்த பின்னரே, நீண்ட காலத் தேவையாக இருந்து வந்த சைவசித்தாந்தம், சைவ மெய்யியல் பற்றி ஐயம் திரிபர அறிந்து கொள்ளல் நிறைவுபெற கைக்கூடியது. மிக சுருக்கமாகவும் சூசகமாகவும் கைலாசபதி வழங்கிய சைவசித்தாந்தக் கோட்பாடுகளை, ஓரளவிற்கு விளங்கிக்கொண்டு, அவற்றைப் பண்டிதமணி தனது நடையிலே பேச்சுக்களாகவும், கட்டுரைகளாகவும் ஏனையோர் விளங்கிக் கொள்ளுமாறு வெளியிட்டு வந்தார்கள். இப்பணிகளுக்கு இலங்கை வானொலியும், தினகரன் முதலிய பத்திரிக்கைகளும் பண்டிதமணிக்குக் கைக்கொடுத்தன. பின்னர் இவற்றைத் தொகுத்துப் பல நூல்களாக, பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையினர் வெளியிட்டனர். இதற்கு மாபெரும் உந்து சக்தியாக விளங்கியவர் பண்டிதமணியின் உத்தம மாணாக்கரும், பண்டிதமணியின் அருகில் இருந்து எஞ்ஞான்றும் பணிவிடைகள் புரிந்த பெருமைக்குரியவருமான உரும்பராய் ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் அவர்கள் ஆவார்.

*1951*இல் பரமேஸ்வராக் கல்லூரியில் நடைப்பெற்ற தமிழ் விழாவில். இந்திய இலங்கை அறிஞர்கள் மத்தியில் அவர் ஆற்றிய காத்திரமான உரை, அன்னாரின் தமிழ் இலக்கிய அறிவும், சைவசித்தாந்த அறிவும் சங்கமித்த நிலையின் வெளிப்பாடாக அமைந்தது. பண்டிதர் கணபதிபிள்ளை பண்டிதமணி ஆனார். பண்டிதமணி, உப-அதிபர் கைலாசபதியின் ஆட்கொள்ளலின் பின்னர், சமயத்தை இலக்கியமாகவும், இலக்கியத்தைச் சமயமாகவும் நோக்கும் மாற்றத்தினை பெற்றார். அவர் விரும்பி எழுதி வெளியிட்ட நூல் ஆகிய "தக்ஷகாண்ட" உரை பண்டிதமணியின் நிலைப்பாட்டினை வெளிப்படுத்துவதாக விளங்குகின்றது. இலங்கைப் பல்கலைக்கழக மட்டத்தில் பண்டிதமணிக்குப் புகழையும், கணிப்பையும் ஏற்படுத்தித் தந்தது இந்நூல். *1978* ஆம் ஆண்டில் பண்டிதமணிக்கு, இலக்கிய கலாநிதிப்பட்டத்தை வழங்கி கௌரவித்தது. அப்பொழுது

காவிய பாடசாலையில் பண்டிதமணி உடன் மாணாக்கராக இருந்த மட்டக்களப்பு, புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை இதனைப் பெரிதும் வரவேற்று கலாநிதிப்பட்டம் பண்டிதமணியை அடைந்ததால் அது தனக்கே ஒரு மதிப்பைப் பெற்றுள்ளது என்றார்.

இலக்கிய கலாநிதிப் பட்டத்தைப் பண்டிதமணிக்கு வழங்குமாறு கேட்டு அவர் பற்றி ஆற்றிய அறிமுக உரையில் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவரை முழுமையாக படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

எண்பதாறு வருடங்கள் நைட்டிகப்பிரமச்சாரியாக செம்மை வாழ்வு வாழ்ந்து சைவமும் தமிழும் தழைக்கத் தொண்டுகள் பல புரிந்து, 1986 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பதின்மூன்றாம் நாள் ஈசன் எந்தை இணையடி நீழலை அடையும் பேற்றினைப் பண்டிதமணி ஐயா பெற்றார்.

## 3. ஈழத்து தமிழ்க் கல்வி வழியில் பண்டிதமணி

" அரச கேசரியிலிருந்து நமது கண்முன்னிருந்த கணேசையர் பரியந்தம் ஓரிலக்கியவழி தொடர்ந்து வந்திருக்கிறதென்பது ஊகிக்கத்தக்கது. இந்த வழி இடையிடையே செடிகொடிகளில் மறைந்து தொடர்பு புலப்படாது போனாலும், வழியொன்று எவ்வாறோ தொடர்புற்று வந்திருக்கிறதென்பதற்குச் சான்றுகள் உள".

பண்டிதமணி காட்டிய ஈழத்து இலக்கிய வழி இது. இத்தகைய இலக்கிய வழியுடன் இணைந்தே தமிழ்க்கல்வி வழியும் ஈழத்தில், எவ்வாறோ தொடர்ந்து பண்டிதமணி பரியந்தம் வந்துள்ளது. இலக்கியம், கல்வியைப் பரப்பும் சிறந்த ஊடகமாக விளங்கியது. கல்வி இலக்கிய வளர்ச்சிக்கு உதவியது.

தமிழ் மரபு தொன்று தொட்டுக் கல்வியினை ஆத்மீக உணர்வோடு இணைத்தே வளர்த்தது. தமிழர்களின் ஆத்மீக உணர்வுகளே சைவசித்தாந்தம். ஆத்மீகத்தை வலியுறுத்தும் தமிழ்க்கல்வி, உலகியல் வாழ்க்கை நெறியைப் புறக்கணிக்கவில்லை. அறம், பொருள், இன்பம், வீடடைதல் நூற்பயன்" என்று கொள்வது தமிழ்மரபு நூற்பயன் என்பது கல்விப்பயன் ஆகும்.

தமிழ் மக்களின் வாழ்க்கைத் தத்துவங்களே அவர்களின் கல்வித் தத்துவங்களாகவும் விளங்கின. வாழ்க்கைத் தத்துவங்கள் அவர்களின் வாழ்க்கை நிகழ்வுகளிலிருந்தே பிழிந்தெடுக்கப்பட்டன. செயலிலிருந்து தத்துவம் உருவாக்கப்பட்டமையினால், அத்தத்துவம் செயற்படுத்தப்பட முடிந்தது. கல்வித்தத்துவங்கள் அவர்களின் வாழ்க்கையைச் செந்நெறிப்படுத்துவனவாக அமைந்துள்ளன.

கல்வியானது மனிதப்பண்புகள் நிறைந்த சான்றோர்களை உருவாக்கவேண்டும் என்று கொண்டது தமிழ்மரபு அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை எனும் ஐந்து சால்புகளையும் உடையவனே சான்றோன் எனக் கொண்டனர். தமிழ் மக்கள் சான்றோர்கள் மனம், மொழி, மெய்யினால் தூய்மையுடையவர்கள்.

"வாழ்க்கைக்கு உறுதுணையாய் வருவது தூய நற்கல்வி" என்பது திருமூலர் திருவாக்கு.

கல்வி என்பது பண்பாடு எனக் கொண்டு, கல்வியானது நல்லொழுக்கம், நீதி, அறங்கள் நற்பண்புகள் என்பனவற்றை மக்களுக்குப் போதிக்க வேண்டும் என்ற குறிக்கோளையுடைய தாயிருந்தது. கல்வியைக் கற்பதுடன் நின்றுவிடாது கற்றுணர்ந்தபடி ஒழுகவும் வேண்டும் என்று தமிழ்மரபு வற்புறுத்துகிறது.

தமிழ்மக்கள் அழகினை ஆராதிப்பவர்கள். முருகியல் உணர்வுகள் நிரம்பப் பெற்றவர்கள். அத்தகையோர் அழகுகளுக்குளெல்லாம் அழகு வாய்ந்தது. கல்வி என்று அதனைத் தெய்வமாக ஏற்றிப் போற்றியுள்ளார்கள்.

ஒவ்வொரு மகனும் உலகக் குடிமகன் ஆகவேண்டும் என்று கொண்டு "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்ற மகுட வாசகத்தை உருவாக்கி உலகிற்களித்து வான்புகழ்கொண்டது பழந்தமிழ்க் கல்வி மரபு. இது தொடர்பாக ஔவையார் கல்விக்குத் தந்த வரைவிலக்கணமான "உலகை ஒன்றாகக் காண்பதே கல்வி" என்ற வியத்தகு வாசகத்தையும் உளத்திற்கொள்வோமாக.

இத்தமிழ்க் கல்விமரபு, ஈழத்தமிழர்களிடமும் தொன்றுதொட்டுத் தொடர்ச்சியாக வளர்ந்து வருகிறது. இக்கல்விமரபு வளர்ச்சிக்கும், மறுமலர்ச்சிக்கும் ஈழத் தமிழர்களின் பங்களிப்பும் கணிசமான அளவிற்கு இருந்துள்ளது என்பதற்குச் சான்றுகள் உள.

தமிழ் வழங்கும் ஈழமண்டலம் அதன் தாய்நாடாகிய தமிழ்நாட்டுடன் ஏறத்தாழ கி. மு. ஆறாம் நூற்றாண்டிலிருந்தே பண்பாட்டுத் தொடர்பினை ஏற்படுத்தியிருந்தமை பற்றி தற்போதைய அகழ்வாராய்ச்சிகள் புலப்படுத்தியுள்ளன. இந்த வகையில் பண்டைய ஈழத் தமிழர்களின் கல்வி, அதே காலப்பகுதியில் தமிழ் நாட்டில் நிலவிய கல்வி முறையைப் பெரும்பாலும் ஒத்ததாகவே அமைந்திருந்தது எனலாம்.

பண்டிதமணி காட்டிய ஈழத்து இலக்கியவழி அரச கேசரியிலிருந்து தொடங்குகிறது. அரசகேசரி யாழ்ப்பாணத் தமிழ் வேந்தர் காலத்தவர். தமிழ் வேந்தர்காலம் கி.பி. 1216 - 1621 வரை ஆகும். கி. மு. ஆறாம் நூற்றண்டிலிருந்து கி. பி.

பதின்மூன்றாம் நூற்றாண்டுவரை ஒரு நீண்ட இலக்கிய வழி ஈழத் தமிழ்நாட்டில் இருந்திருக்கின்றது. ஆனால் அந்த வழி எமக்குப் புலப்படாதிருக்கின்றது. அரச கேசரியில் தொடங்கும் முறையான இலக்கிய வழி இதன் தொடர்ச்சியே என்று கொள்ள வேண்டும். ஈழத்துப் பூதந்தேவனார் சங்ககாலப்புலவர் வரிசையில் உள்ளார். ஈழம் பற்றிய குறிப்புக்கள் பட்டினப்பாலையிலும், சங்கச் செய்யுட்களிலும் காணப்படுகின்றன. இவற்றை நோக்குமிடத்து ஈழத்துத் தமிழிலக்கிய வழி மிகத் தொன்மையான காலத்திலிருந்து வருகின்றது. என்பதை உணர முடிகின்றது. ஒரு சிறந்த இலக்கியப் பாரம்பரியம் ஒன்று அங்கு நிலவி வந்திருக்க வேண்டும். இந்த வகையிலே யாழ்ப்பாணத்தில் நிலையான ஒரு கல்விப்பாரம்பரியம் ஆதிகாலந் தொட்டு நிலவி வந்துள்ளது. எனக் கூறலாம். இந்தக் கல்வி வழியும் இடையிடையே செடி கொடிகளில் மறைந்தும், மணல் மேடுகளால் மூடப்பட்டும் தொடர்பு புலப்படாது போனாலும் தனித்துவம் மிக்க ஒருவழி கல்வியைப் பொறுத்தளவில் தொடர்புற்று வந்திருக்கிறதென்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஈழத்துக் கல்விவழி சைவநெறியுடன் இணைந்து தொன்று தொட்டு வளர்ந்து வந்துள்ளது. இதனால் இக் கல்விநெறியில் சைவமும் தமிழும் மேலாண்மை கொண்டிருக்கின்றன. இந்நிலை அதன் சிறப்புப் பண்பு.

தமிழ்க் கல்வியை அளித்து வந்த "ஆன்றடங்கு அறிஞர்" பரம்பரை அறிவோடு அறம் பரப்பியவர்கள். மனிதர்களின் உள்ளத்தைப் பக்குவப்படுத்தி அவர்களை உட்புற அழிவு சிதைவுகளிலிருந்து பாதுகாத்தவர்கள். அதேவேளை, உலகியல் தொடர்பான கல்வியையும் அளித்து மக்களின் தேவைகளை நிறைவு செய்து, அவர்களின் வெளிப்புறச் சீரமைப்புக்கு வழிவகுத்தவர்கள். மக்கள் வையத்தில் வாழ்வாங்கு வாழவும், வளமாக வாழவும் தேவையான கல்வியை அவர்களுக்கு வழங்கியவர்கள் முன்னோர் வழி வந்த அறிவுச் செல்வங்களையும் கலைச் செல்வங்களையும் பேணிப் பாதுகாத்து, மேலும் விருத்தி செய்து அடுத்த தலைமுறையினருக்கு அளிக்கும் பொறுப்பையும் கொண்டவர்கள். தமிழ்க் கல்வியை அளித்த ஆசிரியன் "கற்கப்படுவோன்" என்றும், மாணாக்கன், "கற்போன்" என்றும் கொள்ளப்பட்டனர்.

ஆசிரியனே பாடநூலாகவும் விளங்கினான். ஆசிரியன் வாழ்ந்து காட்டியவற்றையே மாணாக்கன் கூர்ந்து அவதானித்துக் கற்று உணர்ந்து தெளிந்தான். தமிழ்க்கல்வி, மனிதர்க்கு மனிதத்தன்மையை அளித்துப் பண்பாட்டை வளர்த்தது.

தமிழ்ப் பண்பாடு பற்றிப் பண்டிதமணி பின்வருமாறு கூறுகிறார்.

"பண்பெனப்படுவது பாடறிந்தொழுதல்,
என்கிறது கற்றறிந்தோர் ஏத்துங் கலித்தொகை இங்கேபாடு என்ற சொல் விசாரஞ் செய்யற்பாலது பாடு - உலகப்பாடு. அஃதாவது உயர்ந்தோர் சென்ற அடிப்பாடு உலகம் - உயர்ந்தோர் "உலகம் என்பது உயர்தோர் மேற்றே", என்பது தொல்காப்பியம்.

உயர்ந்தோர் சென்ற காலடியை இறுகப்பற்றிக்கொண்டு அவர் சென்ற வழியிற் செல்வதே பாடறிந்தொழுதல்

பண்புடையார், சாதாரண உலகியலையும் அறிந்து யாவருக்கும் நன்மைபயக்கத் தக்க வகையில் தாம் மேற்கொண்ட வழியிற் செல்வர்.

அறிவோடு உணர்வுக்கும் முக்கியத்துவம் அளித்தவர்கள் இக் கல்விவழியில் வந்தவர்கள்.

ஈழத்துக் கல்வி வழி கி.பி. பதினாறாம் நூற்றாண்டு வரை தனித்துவம் பெற்றிருந்தது. ஆனால் இந்த நூற்றாண்டிலிருந்து இலங்கை, முறையே போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகிய ஐரோப்பியர்களின் குடியேற்ற ஆதிக்கங்களின் கீழ் வந்தது. இதன் விளைவாகத் தமிழ்க் கல்விப் பாரம்பரியம், பண்பாடு என்பவற்றில் பெருந்தாக்கம் ஏற்பட்டது. ஐரோப்பியர்களின் மேலைக்கல்வி பண்பாடு என்பன. படிப்படியாக இந்நாட்டில் படியத் தொடங்கின. இந்த இரண்டாவது கல்வி வழி யொன்று நம் மக்களிடையே மதிப்பும் செல்வாக்கும் பெற்று வளர்ந்தது ஏகாதிபத்திய அரசின் உதவியும் இதற்கு இருந்தது. பாடசாலைகளை ஊர்கள் தோறும் நிறுவி முறைமைக் கல்வியளிக்கப்பட்டது.

அந்நியர் ஆட்சியின் கீழ் இந்த இரண்டாவது கல்விப் பாரம்பரியம் நிலை பெற்று, உயர்குழாம் எனும் சமூகக் குழுவினரை உருவாக்கியது இவர்களே கற்றவர்கள் எனப்பட்டனர்.

மேல் நாட்டுக் கல்வி பெற்றவர்கள் நாகரீகமானவர்கள் என்று மதிக்கப் பெற்றனர். உலகியல் வாழ்க்கை நிலையில் உயர்ந்தனர் கல்வி அதியுயர்ந்த பணப் பெறுமதியைப் பெற்றது தமிழ்ப் பாரம்பரியக் கல்வி ஊக்குவிப்பாரின்றி மங்கி மறையும் நிலைக்குத் தள்ளப்பட்டது. பொதுவாக மேலைக் கல்விகற்க வாய்ப்பும் வசதியும் இல்லாதவர்களே, தமிழ்க்கல்வியைக் கற்றனர்

மேலைக் கல்வி நம்மக்கள் மத்தியில் இடம்பிடித்துக் கொண்டமை பற்றிப் பின்வருமாறு பண்டிதமணி விமர்சித்து உள்ளார்.

"வேதப்பொருளைத் தெளிவுபடுத்தி வந்தவைகள் குருகுலங்கள். அவை பழைய காலத்திலே காட்டுக்குள் இருந்தவை பிறகு நாட்டுக்கு வந்து திண்ணைப் பள்ளிகளிலிருந்து, இப்பொழுது நகரத்தில் நிமிர்ந்து கல்லூரிகளாய், சர்வகலாசாலை-களாயிருக்கின்றன. காலத்திற்கேற்ற கோலம் பூண்டு விட்டன. வெளித்தோற்றம் மாறுவது குற்றமன்று. ஆனால், குருகுலங்களின் அடிப்படை நோக்கம் இப்பொழுது இருந்த இடமுந் தெரியாமற் குடிபோய்விட்டது. மாங்கல்யத்தை மறந்து வந்து சேர்ந்த மணமகன் நிலையாய் விட்டது. உண்டிருந்து எப்படியோ வயிறு வாழ்வதுதான் உடம்பு எடுத்த நோக்கம் என்று முடிந்தது."

"இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம். "நாம் இந்த உடம்பு எடுத்த நோக்கம் பற்றி தமிழ்க்கல்வி வழியில் நின்று நாவலர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். முத்தி என்றால் விடுதல் என்று பொருள் கொண்டு, விடவேண்டியது அறியாமையை என்றும் அறியாமையினின்றும் விடுபடுதல் வீடு என்றும் பண்டிதமணி வியாக்கியானம் செய்துள்ளார்.

தமிழ்க்கல்வியின் நோக்கமும், அந்நியர் ஆட்சியின் கீழ் அளிக்கப்பட்ட கல்வியின் நோக்கமும் மேலே கூறியவற்றிலிருந்து தெளிவாகின்றன.

ஐரோப்பியர்களுடைய ஆட்சிக்காலத்தில், தமிழ்க் கல்வி வழி, யாழ்ப்பாணத்தில், ஒரு வகை அச்சத்துடன் தலைமறைவாகவே தொடர்ந்து வந்துள்ளது. அந்நிய ஏகாதிபத்திய ஆட்சியும் ஆட்சியாளர்களின் பேராதரவைப் பெற்ற மேலை நாட்டுக்கல்வி

நிலை பெற்றமையும், நம்மவரின் மேல் நாட்டு நாகரீக மோகமும், மரபுவழி வந்த தமிழ்க் கல்விப் பாரம்பரியத்தை வலுவிழக்கச் செய்தன.

இன்றைக்கு 240 வருடங்களுக்கு முன் தக்கதொரு இலக்கண இலக்கிய வழியிலே, புலமை கனிந்த பரம்பரையைச் சேர்ந்தவர் சின்னத்தம்பி புலவர் என்கிறார் பண்டிதமணி. இதே காலத்தில் வாழ்ந்த சுன்னாகம் வரதபண்டிதர், மாதகல் மயில்வாகனப்புலவர் ஆகியோர் தலைமறைவிலிருந்த தமிழ்க் கல்விவழியினர் இவர்கள் போன்று இன்னும் பலர் கிராமங்கள் தோறும், தமிழ்க்கல்வி வழியைத் தொடரச் செய்திருப்பர். ஆனால் அவர்களைப் பற்றி எதுவுமே தெரியாத நிலையில் உள்ளோம்.

ஒல்லாந்தர் கால முடிவிலும், ஆங்கிலேயர் காலத் தொடக்கத்திலும், வாழ்ந்து இக்கல்வி வழியைத் தொடர வைத்தவர்கள் முத்துக்குமாரக் கவிராயர், இருபாலை சேனாதிராய முதலியார் போன்ற பெரும் ஆசான்கள் ஆவர். முத்துக்குமார கவிராயர், சி. வை. தாமோதரப் பிள்ளையின் ஆசிரியராக விளங்கியவர் சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர். கவிராயரின் உதிர பரம்பரையினர், தமிழையும் சைவத்தையும் மறுமலர்ச்சியடையச் செய்வதற்காக, ஏனையோர் போல் தலைமறைவாக இருக்காது, கிளர்ந்தெழுந்து வெளிவந்து யாழ்ப்பாணத்திலும், தமிழ்நாட்டிலும் அஞ்சாது பணிபுரிந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்,

இக்கல்வி வழியில் வந்தவர். சேனாதிராய முதலியாரின் நன்மாணாக்கர்.

உடுப்பிட்டி சிவசம்புப் புலவர், முருகேச பண்டித நீர்வேலி சிவசங்கரபண்டிதர், கோப்பாய் சபாபதி நாவலர் காசிவாசி செந்திநாதையர், நா. கதிரவேற்பிள்ளை சாவகச்சேரி பொன்னம்பலபிள்ளை, வித்துவசிரோன்மணி பொன்னம்பலம்பிள்ளை, சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர், மட்டுவில் ம. க. வேற்பிள்ளை, மகாலிங்க சிவம், வித்துவான் சுப்பையாபிள்ளை, பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஆகியோர் இக்கல்வி வழித் தோன்றல்கள்.

ஆங்கிலேயர் காலத்தில் வட்டுக்கோட்டையில் செமினரி என்று வழங்கிய கல்லூரியிலும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும் மற்றும் ஆங்கிலக் கல்லூரிகளிலும் மேலை நாட்டு ஆங்கிலக் கல்வியைக் கற்கப்புகுந்தவர்களுல் சிலர், ஆங்காங்கு கிராமங்களில் தலைமறைவிலிருந்து தமிழ்ப் புலவர்களிடம் தமிழ் இலக்கண இலக்கியங்கள், புராண இதிகாசங்கள், சைவசித்தாந்த நூல்கள், அறநூல்கள் என்பவற்றை உள்ளடக்கிய த்மிழ்மரபுக்கல்வியையும் கற்றுத்தேர்ந்தனர். நாவலர், சி. வை. தாமேதரம்பிள்ளை, கனகசபைப்பிள்ளை ஆகியோர் இத்தகையோராவர். இவர்கள் சைவத்தமிழ் மரபு மறுமலர்ச்சிப்பணிகளில் ஈடுபடுவதற்கு இக்கல்வி உறுதுணையாக இருந்தன.

“பொய்யும் வழுவுந்” தோன்றிய இக் காலகட்டத்தில் இத்தகைய ஒரு சிலர் “களவு நிலை”யில் இருந்தனர். “களவுநிலை என்றால் பிரபஞ்ச பந்தங்களை விடவும் முடியாமல், கண்ட உண்மையைத் தொடராமலிருக்கவும் முடியாமல் அன்பு அங்கும் இங்கும் பிரிநிலைப்பட்டு நிற்கும் நிலை” என்று பண்டிதமணி விளக்கியுள்ளார். ஆங்கிலக் கல்வி, அதனால் கிடைக்கும் உலகியல் சார்ந்த அநுகூலங்கள் ஒரு புறம், சைவத்தமிழ்க்கல்வியும் அதனைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற உள்ளுணர்வு உந்தல்கள் மறுபுறம். இருதயம் ஊசலாடியது. ஆயினும் ஈற்றில் பொய்கெட்டு மெய்யானார்கள். மேலைநாட்டுக் கல்வி தந்த உயர் பதவிகள், வேதனம், புகழ் என்பவற்றை உதறித் தள்ளிவிட்டு, தமிழுக்கு மறுமலர்ச்சி செய்யப் புறப்பட்டனர். இவர்கள் தம் முன்னையோரை போல தலைமறைவாக இருந்து கொண்டு தமிழ்க் கல்வியைப் பரப்ப விரும்பவில்லை. நாவலர் கிளர்ந்தெழுந்தார். வெளிப்படையாகவே சைவத் தமிழ் மறுமலர்ச்சிப்பணிகளில் ஈடுபட்டார். தனியொரு இயக்கமாகவே செயற்பட்டார்.

“தமிழ்” என்பது வெறும் மொழி மாத்திரமே என்று நாவலர் கொள்ளவில்லை. கருத்துப்பரிமாற்றஞ் செய்யும் சாதனமே மொழி என்பது பொதுக்கருத்து “தமிழ்” என்னும் போது பரந்த, விரிந்த, ஆழமான விடயங்களை உள்ளடக்குகின்றது. தமிழரின் கருத்தை விசாரித்து உணர்ந்து தமிழ் செய்தவர்கள் அதாவது நாவலர் போன்றவர்கள் தமிழ்க் கல்வி வழித்தோன்றல்கள். இவர்களையே பண்டிதமணி இலக்கிய வழியிலும், கல்வி வழியிலும்

வெளிப்படுத்தியுள்ளார். தமிழரின் கருத்தை அறியாமல் தம் கருத்தை தமிழ் செய்தவர்களைப் பண்டிதமணி இவ்வரிசையில் சேர்த்துக் கொள்ளவில்லை.

நாவலர் நீதிமான் "பங்கயத்தயனுமாலறியா நீதியே" என்பது மணிவாசகம். அதுவே "மேன்மைகொள் சைவநீதி" நாவலர் நீதியை உபாசித்தவர் அதற்குத் தம்மை அர்ப்பணம் செய்தவர். தமிழ்க் கல்வி வழி நீதி வழுவா நெறிமுறையில் வந்துள்ளது. நிதி பொருளன்று, நீதியே பொருள்வாய்ந்தது எனக்கொண்டது. இக் கல்விவழியில் வந்தவர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள். நாவலரின் கல்வி வழித்தோன்றலாக வந்த பண்டிதமணி, நாவலரின் கல்விச் சிந்தனைகளையும், கோட்பாடுகளையும் செயற்படுத்தியவர். மேலை நாட்டுக்கல்வியில் தம்மை ஈடுபடுத்தாது, நேரடியாகவே தமிழ்க்கல்விக்குத் தம்மை அர்ப்பணித்தவர் நாவலரின் ஐந்தாண்டுத்திட்டம், சைவத் தமிழ்க்கல்வி அபிவிருத்திக்குரியது. இதனைப் பொன்போல் போற்றியவர் பண்டிதமணி.

நாவலர் பாடசாலையில் உள்ள காவிய வகுப்பில் சுன்னாகம் அ. குமாரசுவாமிப்புலவர் அவர்களிடம் தமிழ்க் கல்வி கற்ற பண்டிதமணி, நாவலரின் கல்வித்திட்டத்தை நன்கு உணர்ந்தார். அதற்கு முன்னர் மட்டுவிலில் வாழ்ந்த காலத்தில் மகாலிங்க சிவத்தின் கல்விச் செல்வாக்குக்கும் உட்பட்டிருந்தார். நாவலர்காவிய பாடசாலையில் கற்ற காலத்தில் திருநெல்வேலியில் அமைந்த "ஈரப்பலாச் சங்கம்" புதியனவற்றை இவருக்களித்தது. நடராசா கைலாசபதி, டாக்டர். சிவப்பிரகாசம் போன்றோர் இச் சங்கத்தில் இருந்தனர்.

சமுதாயத்தின் பண்டைய மரபுகள், பண்பாடுகள் என்பனவற்றை ஆராய்ந்து, தெளிந்து அவற்றிற்கு விமர்சனம் தந்து அவற்றிலிருந்து எழுகின்ற சிறந்த கருத்துக்களை, வளர்ச்சிபெற்று வருகின்ற சமகாலச் சமுதாயத்தின் தேவைகள், பண்புகள், நோக்கங்கள் என்பனவற்றிற்கு ஏற்ப உருவாக்கி இணைக்கும் முயற்சிகளில் பண்டிதமணி ஈடுபாடு கொண்டார். பழைமையில் பற்றுவைக்கும் பண்பையும், புதுமையில் கருத்தைச் செலுத்தும் பாங்கினையும் அவர் பெற்றிருந்தார். பழைமையின்

அடித்தளத்திலிருந்து புதுமை பொங்கியெழ வேண்டும் என்பர் கல்வி மூலம் பழைமையையும் புதுமையையும் ஒன்றிக்க செய்ய விழைந்தார்.

பண்டிதர்கள் என்றால் தனிப்போக்குடையவர்கள், பண்டிதத்தமிழில் பேசுபவர்கள், பழைமையில் ஊறியவர்கள், சாதாரண மக்களோடு உடன்போக்கு அற்றவர்கள் என்று மாற்றியமைத்தவர் பண்டிதமணி. தமிழ்ப் பண்டிதர்கள் பற்றிக்கொண்டிருந்த படத்தை அவரின் பேச்சிலோ, எழுத்திலோ பண்டித நடையைக் காணமுடிவதில்லை புதுமையான முறையில் யாவரும் எளிதில் விளங்கிக் கொள்ளும்படி பேசினார், எழுதினார்.

தமது கல்வி நோக்கங்கள் இரண்டினை நாவலர் பாடசாலை முகாமையாளராவிருந்த த. கைலாசப்பிள்ளைக்குப் பண்டிதமணி எழுதிய கடிதம் ஒன்றில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

1. உண்மையான தமிழ்க் கல்வியை இலவசமாக எங்கும் அபிவிருத்தி செய்வது.
2. நாவலர் ஐயாவின் தர்மாபிவிருத்திக்கு இயன்ற உதவி புரிவது.

நாவலர் வழியில், அவரின் கொள்கைகள் சிலவற்றையேனும் பரப்ப வேண்டும் என்ற குறிக்கோளுடன் பணியாற்றினார் பண்டிதமணி. யாழ்ப்பாணத்தின் பழைமையான சைவத் தமிழ்ப்பண்பாட்டினைக் கல்வி மூலம் காப்பற்ற வேண்டுமென எண்ணினார், இதற்காகவே திருநெல்வேலி சைவாசிரிய கலாசலையில் பேராசிரியரானார், காவிய பாடசாலை நடாத்தினார், எழுதினார், பேசினார், இறுதிவரை நைட்டிகப் பிரமசரியத்தைக் கடைப்பிடித்தார்.

சைவாசிரிய கலாசாலையில் 30 ஆண்டுகளுக்கு மேல் ஆசிரியர்களுக்கு ஆசிரியனாய் விளங்கினார். கல்வி என்பது விளக்கேற்றல் என நாவலர் கூறுவார். பண்டிதமணி என்னும் கல்வி விளக்கிலிருந்து ஆயிரக்கணக்கான நல்லாசிரியர்கள் ஒளிபெற்று ஈழம் முழுவதிலும் கல்வி விளக்கேற்றினார்கள்.

பண்டிதமணி திருநெல்வேலியில் நிறுவிய காவிய பாடசாலை ஈழத்துத் தமிழ்க்கல்வி வழியைத் தொடரவைக்கும்

தொண்டாக விளங்கியது. சைவத் தமிழ்க் கல்வி புத்துயிர்ப் பெற்றது.

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷபிவிருத்திச் சங்கம், சைவபரிபாலன சபை, சைவ வித்தியா விருத்திச் சங்கம் என்பன இந்நூற்றாண்டின் முன்னரைப் பகுதிகாலத்தில் சைவத் தமிழ்க் கல்வியைப் பேணவும், பரப்பவும் முன்னின்றவை. இவற்றுடன் தொடர்பு கொண்டு இந்த இலட்சியங்களை அடைவதற்குப் பல திட்டங்களையும், அறிக்கைகளையும் பண்டிதமணி வழங்கினார்.

ஈழத்துக் கல்வி, இலக்கியவழித் தோன்றல்களின் பெருமையைப் பேணி உலகறியச் செய்தவர் பண்டிதமணி இவர்களைப் பற்றி எவராதல் இகழ்ந்தால், தக்க கண்டனம் செய்யவும் தயங்காதவர். நமது மொழி, சமயம், கல்விமரபு, பண்பாடு என்பன மங்கி மறைந்தபின் பெறும் அரசியல் சுதந்திரத்தால் யாது பயனும் இல்லை என்று கூறுவார். ஆத்மீக உணர்வு விடுதலை, பண்பாட்டுவிடுதலை என்பன அரசியல் விடுதலைக்கு முன்னோடியாக விளங்கவேண்டும்.

பண்டிதமணி, ஈழத்துத் தமிழ்க்கல்வி வழியைத் தொடரவைக்க ஆற்றிய பணிகள் அளப்பரியன.

இது தொடர்பாக அவர்கள் தந்த ஆலோசனைகள் இரண்டு ஆகும். அவையாவன

1. நாவலரின் ஐந்தாண்டுத் திட்டத்தை இக்காலநிலையை யோசித்துப் பயன்படுத்த வேண்டும்.
2. மற்றச் சமயத்து இளைஞர்களை தத்தம் சமயத்தில் நிற்க சைவ இளைஞர்க்கு அ:.தில்லாமை சிந்திக்கற்பாலது.

நாவலர் இக்கைங்கரியத்திற்கென விட்டுச் சென்ற தர்ம சொத்துக்கள் அவரின் நோக்கங்களுக்கே பயன்படுத்தவேண்டும் என்று பண்டிதமணி வலியுறுத்தி வந்தார்.

இவை பண்டிதமணியின் கல்விக் கருத்தைச் சிந்திப்பார்க்கு உபகாரமாகும் சில குறிப்புக்கள் ஆகும்.

# 4. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை தரும் மனித விழுமியச் சிந்தனைகள்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் சைவசித்தாந்தம், தமிழ் இலக்கிய இலக்கணம், புராண இதிகாசங்கள் என்பவற்றில் ஆழ்ந்த புலமையும் ஆட்சியும் பெற்றிருந்ததோடு, அவற்றில் புதைந்துள்ள "மானுடம்", மனிததர்மம், மனித பண்பாட்டு விழுமியங்கள் தொடர்பான கருத்துக்களை மிகத்துல்லியமாக வெளிப்படுத்தியுள்ளார். அவருடைய நூல்களைப் படிக்கும் போது இவ்வுண்மை புலப்படும். மேலும் அவருடைய, ஆசிரிய கலாசாலை விரிவுரைகளிலும் மற்றும் சொற்பொழிவுகளிலும், இரசனையைத் தூண்டுதல், விழுமியங்களை எடுத்துக் காட்டி வாழ்க்கையை நெறிப்படுத்துதல் ஆகிய அம்சங்களில் பண்டிதமணி கூடிய கவனம் செலுத்துபவர் என அவரின் மாணாக்கர் கூறுவர்.

தமிழ், சமயம், தத்துவம் ஆகியவற்றை ஆராய்ந்தார். அவற்றில் என்ன ஆராய்ந்தார்? எவ்வெவற்றைக் கண்டுபிடித்தார்? எதற்கு முக்கியத்துவம் கொடுத்தார்? என்பவற்றை நாம் கூர்ந்து நோக்க வேண்டும்.

பண்டிதமணி நுண்ணிய ஆராய்ச்சி மூலம் கண்டவற்றைத் தமது மாணாக்கருக்குப் போதிப்பதையும், பொது மக்களுக்கு அவற்றைக் கொண்டு நல்லறிவுச் சுடர் கொளுத்துவதையும் தமது வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தார். தமது பேச்சுக்கள் மூலமும் எழுத்துக்கள் மூலமும் அப்பணியைச் செய்து தமது குறிக்கோளை நிறைவேற்றினார்.

தமிழ் இலக்கியம், சைவ சித்தாந்த தத்துவம் ஆகியவற்றை அலசி ஆராய்ந்து கண்டெடுத்த முத்துக்கள் எவையெனில் வாழ்க்கை உண்மைகள் ஆகும். அவையே வாழ்க்கை விழுமியங்கள்.

"கற்றதனா லாய பயன் வாழ்க்கை வழி. அறம், பொருள், இன்பம், வீடு, இவை புருடார்த்தங்கள், அரும்பு, மலர், காய், கனிகள் ஒன்றிலிருந்து ஒன்று முதிர்ந்து நடப்பவைகள், மனிதன் அடைய வேண்டியவைகள்" பண்டிதமணியின் இவ் வாசகங்கள் பொருள் பொதிந்தவை.

கல்வி என்பது ஆய்வு, கற்றல் என்றால் ஆய்தல் எனக்கொண்டு, பண்டிதமணியின் தமிழ், சமய தத்துவ ஆய்வின் பயன் வாழ்க்கை வழி, வாழ்க்கை நெறி என்பதை அவரே கூறுகின்றார். ஆய்வின் பயனாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட விழுமிய அறிவு, வாழ்க்கையை நெறிப்படுத்தி வளம்படுத்துகிறது. ஆய்விற்குப் பயன் உண்மை அறிவு, அறிவிற்குப் பயன் ஒழுக்கம் என்பது தெளிவாகிறது.

பண்டிதமணி, இலக்கிய, இதிகாச, புராணங்களை ஆய்வு செய்யும் போது அவை தோன்றிய காலம், சரித்திரம், புலவர்களின் பிறந்ததிகதி, இறந்ததிகதி, தமிழில் தோன்றினவையா? வடமொழியிலிருந்து வந்தவையா? போன்றவற்றில் கருத்துச் செலுத்தியதாகத் தெரியவில்லை.

பொருளுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஆராய்ந்தார். பொருளல்லவற்றை ஆராயத்தலைப்படவில்லை. இது பற்றிப் பண்டிதமணி பின்வருமாறு கூறுகிறார்.

“வெறுஞ் சரித்திரக் கதைகள் அவகதைகள். அவைகளுக்கு மேற்பட்டவைகள் தவ கதைகள். தவ கதைகளை இதிகாசக் கதைகள் என்று சொல்லலாம். இதிகாசத்திலே பிறந்த தேதி, இறந்த தேதி, கி.பி., கி.மு. ஆகிய இவைகளுக்குப் பிரதானங் கொடுப்பதில்லை. பாத்திரங்களின் விசேஷ சந்தர்ப்பமே அங்கே பிரதானம். ஒவ்வொரு சந்தர்ப்பமும் தர்மத்தின் ஒவ்வோரம்சத்தைப் புலப்படுத்துவதாயிருக்கும்.”

“வெறுஞ் சரித்திரம் அவகமை. இதிகாசம் தவ கதை. புராணம் சிவகதை.”

பண்டிதமணியின் ஆராய்ச்சியின் நோக்கும் போக்கும் அவரின் இக் கருத்துக்களிலிருந்து தெளிவாகிறது. அவருக்கு “பணியாரம்” தான் முக்கியம், “சிலுசிலிர்ப்பு” அன்று பொருளை ஆராய்ந்து தெளிந்தார். பொருளல்லவற்றைப் பொருள் என்றுணரும் மருள் நீக்கி, உண்மைப் பொருள் கண்டுபிடித்தல் அவரின் ஆய்வில் முக்கியத்துவம் பெற்றுள்ளதைக் காணலாம்.

பொருள் என்று எவ்வெவற்றைக் கொண்டாரோ அவை மனித வாழ்க்கையை வாழ்வாங்கு வாழ்வதற்கு உறுதுணையாக வருபவை. சரியான வாழ்க்கை வழியை நெறிப்படுத்துபவை. மனித வாழ்க்கை வழி, அறம், பொருள், இன்பம், வீடு என்று செல்கின்றது. வாழ்வில் அறமும் பொருளும் சித்தித்தால், இன்பமும் வீடும். தாமே சித்திக்கும் என்பது பண்டிதமணியின் கருத்து.

புலன் பொறிகள் மற்றும் மனம் முதலிய உட்கரணங்கள் தூய்மைப்படவர்களுக்கு அறம் கைவரும் அவ்வாறு அறங் கைவந்தவர்களுக்குப் பொருள் கைவரலாம். இதுவரையில் உண்மைக்கும் பொய்க்கும் வேறுபாடு தெரியாமல் இருந்தவர்களுக்கு, இந்த நிலையில் பொய் இது, மெய் இது என்று பகுத்து, நிச்சயித்துக் கொள்ளும் திறன் வந்து விடுகிறது. அதாவது, பொருள் அல்லவற்றைப் பொருள் என்றுணரும் மருள் நீங்கப் பெற்றுவிடும். புன்னெறி, நன்னெறி என்பவற்றின் பொருள் தெரிந்து இருப்பினும், புன்னெறிப்பக்கம் சாய்வதா, நன்னெறிப்பக்கம் சேர்வதா என்ற தீர்மானத்தை நிச்சயப்படுத்திக் கொள்ள முடியாமை தோன்றல் இந்நிலையில் எற்படுகின்றது. பொய் மெய் தெரிகிறது, ஆனால் பொய்யென்றறிந்ததை விடவும், மெய்யைத் தொடரவும் முடிகிறதில்லை. இதனைப் பண்டிதமணி களவு நிலை என்கிறார்.

இனி அறம், பொருள் என்பன கைவந்தநிலை தொடரப் பட்டால், பொய்யை நீக்கி, மெய்யைத் தொடரும் நிலை சித்திக்கும். அதனால் என்றுமே தித்திக்கும் இன்பம் கிடைக்கப்பெறும் இன்பத்தில் முழ்கி வீடு பெறலாம். வீடு என்றால் அறியாமைகளை, பிழைகளை விட்டு விடுதல். மெய்யோடு உடனுறைதல். இந்த நிலைக்குக் கற்புநிலை அல்லது இன்பநிலை என்று பண்டிதமணி கூறுவார்.

மனித வாழ்க்கைவழி அல்லது பாதை, அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் என்னும் படிமுறையில் செல்கின்றது என்பது பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் ஆய்வுப் பேறு. வாழ்க்கைப் பாதையில் அறமும் பொருளும் கைவரப் பெற்றநிலை களவு நிலை. இக்களவு நிலையை ஒருவர் முதலில் அடைய

வேண்டும். அதாவது, ஒருவரின் நெஞ்சில் இருந்து அழுக்காறு, அவா, வெகுளி, வெளியேற்றப்பட வேண்டும். நெஞ்சம் தூய்மை பெற்று நன்னெஞ்சம் ஆதல் வேண்டும். மனத்துக்கண் மாசிலன் ஆதல் வேண்டும் அப்பொழுது அறம் கைவரும். அறம், வாழ்க்கைப் பாதையில், முதல் அடைய வேண்டியது. அறம் தெளிந்தவன் தனது வாழ்க்கையைச் செவ்வையாக நடத்திச் செல்வான். பிறருக்கு இடையூறாக இருக்கமாட்டான். தருமவழி தவறான். மனித விழுமியங்களைக் கடைப்பிடித்து ஒழுகுவான். தமக்கும் பிறர்க்கும் நன்மை விளைவிக்கக்கூடிய கருமங்களிலேயே ஈடுபடுவான். மனித வாழ்க்கைக்கு முதல் நிபந்தனை அறம் ஆகும். என்பது வலியுறுத்தப்படுகிறது. அறத்தால் வருவது இன்பம் அது வாழ்வின் தொடக்க நிலையில் உலகியல் இன்பமாக அமையும் அறம் கைவந்த மனிதன் தன் வாழ்க்கைப் பாதையில் மேலும் நடக்கத்தான் செய்வான். அறவழியில் செல்ல செல்ல, வையத்து வாழ்வாங்கு வாழும் மனித வாழ்க்கை நெறியை உணர்ந்து, நீதி வழுவா நெறி முறையில் தொடர்ந்து செல்கிறான். உலக இன்பங்களை அறவழியில் அடைகிறான். அனுபவிக்கிறான். மேலும் அவன் வாழ்க்கைப் பாதையில் நடக்க நடக்க, இதுவரை அனுபவித்து வந்த உலக இன்பங்கள், பொருள், பண்டங்கள், புகழ், பதவி, அந்தஸ்து என்பனதான். பொருளா அல்லது அவையாவும் பொருளற்றனவா என்னும் ஆதங்கம் தோன்றி ஆராயப்படும். அந்த ஆய்வின் பெறுபேறாக, மனிதவாழ்க்கையின் பொருள் உணர்தல் கைவரப் பெறுகிறான். "பொருள் அல்லவற்றைப் பொருள் என்றுணரும் மருள்". அவனை விட்டு நீங்குகிறது மெய்ப் பொருள் எது, பொய்ப்பொருள் எது என்று வேறுபடுத்தி உணரும் திறன் வாய்க்கப் பெற்றவனாகின்றான். இதனையே பொருள் கைவரப் பெற்றவனாய் விடுகின்றான் என்கிறார் பண்டிதமணி. அறம் கைவரப்பெற்று அதன் வழி தொடரும் போதுதான் பொருள் கைவரப் பெறுகிறது என்பதும் உணர்த்தப்படுகிறது. மனித வாழ்க்கையில் அறம் எத்துணை முக்கியத்துவம் பெறுகிறது என்பது நோக்கற்பாலது. அறமும் பொருளும் மனிதரின் புறவாழ்வை மேம்படுத்துகின்றன. மனித வாழக்கைக்கு நீதிவழுவா நெறிமுறை அறத்தின் அடிப்படையில் வகுக்கப்படுகிறது. அந்த வழியில் வாழ்க்கையைச் செலுத்தும் போது மெய்ப்பொருள் தெரியவருகிறது. பொய்ப்பொருளை கைவிட நேரிடுகிறது அறமும் பொருளும் முதலில் அடையப்படவேண்டியன.

அறமும் பொருளும் உணர்ந்தால் இன்பமும் வீடும். விரைவில் கிட்டிவிடுகின்றன. பொய்கெட்டு மெய்யாதல் வீடு பேறு இதுவே வாழ்க்கையின் அதி உயர் குறிக்கோள்.

"அறமும் பொருளும் கைவந்து விட்டால் இன்பத்தை அடைவதில், வீடு சேர்வதில் சந்தேகமே இல்லை" என்பது பண்டிதமணியின் நிலைப்பாடு.

உலக மாந்தர்கள் அறம், பொருள் என்பவற்றை முதலில் அடைய முயலவேண்டும். தமிழ் காட்டும் நெறி இதுவாகும்.

"தமிழ் இரண்டு வகை அகத் தமிழ், புறத் தமிழ் ....களவை நோக்குந் தமிழ் புறத்தமிழ். களவிலிருந்து அப்பால் நோக்குந் தமிழ், அகத் தமிழ்..... களவு தமிழின் புற இதழ், அறம், பொருள், அக இதழ் இன்பம், வீடு" என்று தமிழை ஆராய்ந்த பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, தம் ஆய்வின் பெறுபேற்றினைக் குறிப்பிடுகிறார்.

தமிழ் இலக்கியம், புறத்திணை, அகத்திணை என்னும் பாகுபாட்டை அமைத்துக் கொண்டமை நன்கு புலப்படுகின்றது.

"அறம், பொருள், இன்பம், வீடடைதல் நூற் பயனே", என்பது தமிழர்தம் கல்விக் கொள்கையும், வாழ்க்கைக் கொள்கையும் ஆகும். வாழ்க்கையையும் கல்வியையும் வேறுபடுத்தாமல் ஒன்றாக நோக்கியவர்கள் நம் முன்னோர். இன்றைய நவீன கல்விக் கருத்து இதைத்தான் கூறுகின்றது.

"அறம், பொருள், இன்பம், வீடு அடைதல்" என்பதை பயனாகக் கொண்டிராத இலக்கியம், இலக்கியமாகாது, கல்வி, கல்வியாகாது, வாழ்க்கை வாழ்க்கையாகாது. இந்த அடிப்படையில் இன்றைய இலக்கியம், கல்வி, வாழ்வு என்பன ஆராயப்பட்டு, அவற்றுள் ஏற்க வேண்டியனவற்றை ஏற்று, தள்ள வேண்டியவற்றை நீக்க வேண்டும். என்பது பண்டிதமணியின் நிலைப்பாடு. அல்லாவிட்டால் மனித வாழ்வின் தரம் கெட்டுவிடும். மனிதர்கள் விலங்கு நிலைக்குத் தள்ளப்பட்டு விடுவர்.

இற்றைவரை உள்ள தமிழ் இலக்கியம் நன்கு பரிசோதனைக்கு உட்படுத்தபடவேண்டும். அவை விழுமிய வாழ்க்கைக்கு ஏற்றனவா என ஆராய்தல் அவசியம். "இரண்டாயிரம் வருடம் வயசுள்ள

தமிழ் தீதும் ஆகலாம், இன்றைக்குப் பிறந்த தமிழ் நன்றுமாகலாம்" என்கிறார் பண்டிதமணி.

இலக்கியம், விழுமிய நல் வாழ்க்கைகுக் கருவியாகவும், உதவியாகவும் இருத்தல் வேண்டும். தமிழ் நுதலியது களவு என்பது பண்டிதமணியின் கோட்பாடு. களவு என்றால் உலகபந்தங்களிலிருந்து கொண்டே தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாதல் என்று அவர் கூறுவர். வாழ்க்கையை அறவழியில் நீதி தவறாது நடத்த வேண்டும். என்பது இதன் தாற்பரியம். இலக்கியம், கல்வி இரண்டும் மனித வாழ்க்கையை மேம்படுத்தும் கருவிகளும் சாதகங்களும். அவை மனித வாழ்க்கையை அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் என்னும் குறிக்கோளை நோக்கிய பாதையில் அல்லது நெறியில் இட்டுச் செல்லும். அவ்வாறான வாழ்க்கைப் பயன்களைக் கொண்டிராத இலக்கியமோ, கல்வியோ அபாயகரமானவை, நம் வாழ்க்கையைத் திசை திருப்பி புன்னெறியில் செலுத்துபவை. அவற்றை இனங்கண்டு மக்களிடையே பரவாமல் தடுத்தல் அறப்பணியாகும். அந்த வகையில் மனித இனம் காப்பாற்றப்பட வேண்டும்.

"களவில்லாத தமிழ் களவாகச் சங்கத் தமிழோடு கலந்து பசுந்தோல் போர்த்திக் கொண்டுமிருக்கலாம். அப்படிப்பட்ட பகட்டுத் தமிழை - காக்காய்ப் பொன்னை - ஆராய்ந்து கண்டுபிடித்து அதற்குரிய தானத்தில் வைக்கவேண்டும்" - என்பது பண்டிதமணியின் கூற்று.

பண்டிதமணியின் தலையை நெரித்த இந்தச்சுமையுடன், கனதியான மற்றொரு சுமையை பின்வருமாறு வெளிப் படுத்துகிறார்.

"இனி இக்கால உலகை நடத்துகின்ற சினிமாக்கள், பத்திரிகைகள், கதைகள், புத்தகங்கள், பாடல்கள், மேடைப் பேச்சுக்கள், கலைகள், தலைவாலற்ற அரசியல்கள், கத்திடுமான் மாக்களின் கட்டுக்களான சமயங்கள், எழுதிக் குவித்த சரித்திரங்கள், அணுக்குண்டு விஞ்ஞானங்கள் என்றிங்ஙனம் புதுப்புது வடிவில் பெருகி வருபவைகள் எப்படிப்பட்ட நோக்கம் உடையனவாதல் வேண்டும் என்பது. இவைகள் களவுக்கு வழி செய்யாது போனாலும் இருக்கிற அறிவையாவது பழுதுபண்ணாமல், இருந்தபடி இருக்க வைக்குமோ விட்டு வைக்குமோ என்று அறிஞர்கள்

தீர ஆலோசித்துத் தீர்க்க வேண்டியவைகள். நூற்றுக்கு நூறு சரியென்று ஆராய்ந்து தீர்மானித்தவைகளே பொதுசனங்களுக்குப் பகிரங்கம் பண்ணத்தக்கவைகள், அல்லாதவைகள் அபாயங்கள்". பண்டிதமணி சுட்டிய இந்தச்சுமை, வர வரக் கனத்தில் அதிகரித்து, பருமனில் விம்மிப் புடைத்து எல்லோர் தலைகளையும் அழுத்தி நெரிக்கின்றது. மனிதர்கள் இவற்றை இன்று இன்பச் சுமையாக ஏற்றுக்கொண்டு விட்டார்களோ என்ற சந்தேகம், கூடவே மேலேழுகின்றது. அவற்றைத் தேடி, நாடிச் சுவைக்காதவர்களை இன்று காண்பதரிது. புன்னெறியில் புலனைச் செலுத்துவதில் இன்பம் துய்க்கும் மனிதர்கள் வீட்டில் பூச்சிகளாக மாறி வருகின்றனர். முடிவில் யார் அக்கறை கொள்கிறார்கள். "கெடுகுடி சொற்கேளாது, சாகிறவன் மருந்து குடியான்" என்ற பழமொழியில் தஞ்சம் காணவேண்டியது தான்.

இக்கால உலகை நடத்துகின்ற சினிமாக்கள், சின்னத்திரைகள், கதைகள், நாவல்கள், பத்திரிகைகள், நூல்கள், கலைகள் முதலியனவற்றின் கர்த்தாக்கள், தத்தம் நேயர்கள், வாசகர்கள், வாடிக்கையாளர்கள், இரசிகர்கள் ஆகியோரின் விருப்பங்கள், வேண்டுதல்களுக்கு இயைபவே, தங்கள் உற்பத்திகளையும், வெளியீடுகளையும், ஆக்கங்களையும் வடிவமைத்துக் கொள்வதாகக் கூறித் தங்களை நியாயப்படுத்திக் கொள்கிறார்கள். உண்மையில் நேயர்களினதும், வாசகர்களினதும் விருப்பங்கள் இவைதானா அல்லது அவர்கள் மீது திணிக்கப்டுகின்றனவா என்பதுதான் கேள்வி. மனிதர்கள் இவ்வளவு தூரம் தாழ்ந்து விட்டார்களா அல்லது தாழ்த்தப்பட்டுவிட்டார்களா? என்பது மற்றொரு கேள்வி. நிலைமை மோசமடைவதற்கு முதல், யார் குற்றவாளி என்ற வாதப்பிரதி வாதங்கள் அல்ல முக்கியம் குற்றங்களை உடனடியாக நிறுத்துவதுதான் முக்கியம் என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். உற்பத்தியாளர்கள் ஆபாசமானவற்றை, அனர்த்தம் விளைவிப்பவற்றை உற்பத்தி செய்வதை நிறுத்த வேண்டும். நுகர்வோர், விருப்பத்துடனோ, விருப்பத்திற்கு மாறாகவோ, ஆபாசங்களை நுகர்வதையும் சுவைப்பதையும் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

புலால் உண்பவர்கள் இல்லையென்றால், கொன்று விற்பவர்களும் இல்லாமல் போய்விடுவர் என்பது வள்ளுவர் கருத்து.

எனினும், இரு தரப்பினரும் தத்தம் தவறுகளை உணர்ந்து, உற்பத்தி செய்யாமலும், நுகராமலும் விட்டு விடுதலே மேலான அறம். உலகம் அவர்களை வாழ்த்தும் இதைத் தான் வள்ளுவரும் தீர்வாக மற்றொருகுறளில் காட்டுகிறார்.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்."

என்பதே அக்குறள்.

புலால் ஆக விற்பதற்காக உயிர்களைக் கொல்லாதவன், புலாலை உண்ணாதவன் ஆகிய இருதரப்பாரையும் அவர்களின் கருணை நிறைந்த நற்செய்கைகளுக்காக உலகில் உள்ள எல்லா உயிரினங்களும் தொழுது வாழ்த்தும்.

இந்தவகையில் மனிதர்களுக்குத் தீங்குகள் விளைவிக்கும் ஆபாசங்கள், மனிதர்களின் உயர்குறிக்கோள்களை அடைய விடாமல் தடுக்கும் வக்கிரங்கள் என்பன இலக்கியங்கள் மற்றும் எந்த வடிவங்களில் இருப்பினும் அவற்றை உற்பத்தி செய்யாதவர்களையும், நுகர மறுப்பவர்களையும் மானுடம் வாழ்த்தும், காக்கும் என்பது உறுதி.

பண்டிதமணி குறிப்பிடும் கனத்த சுமைகளை அகற்றி தடைகளை நீக்கி, மனிதப் பிறவியின் உயர் வாழ்க்கைக் குறிக்கோள்களை மனிதர் அடைவதற்குப் பண்டிதமணி கூறும் விழுமியக் கருத்துக்களைச் சிந்தித்துச் செயல்படுவோமாக.

# 5. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் இளமைக்கால அனுபவங்கள்.

திருக்கயிலாய பரம்பரை போன்று நாவலர் ஞான பரம்பரை ஒன்றும் உள்ளது. முன்னையது மிகத் தொண்மையானது. அதற்கு ஊறு நேர்ந்த போது நிவர்த்தி செய்து, மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கெனத் தோன்றியது நாவலர் ஞானபரம்பரை.

"சென்ற நூற்றாண்டில் நமது சமயத்தின் ஏகப்பிரதி நிதியாய் விளங்கினார் நாவலர். அவருக்குப் பின் நமது சமயத்துக்கு ஒப்புக்கொள்ளக்கூடிய ஒரு தலைவரில்லை". இது, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை தரும் நாவலர் பற்றிய மதிப்பீடு.

ஒரு ஞானபரம்பரையைத் தோற்றுவிப்பதற்கு நாவலர் முற்றிலும் தகுதி பெற்றிருந்தார். என்பதை இக்கூற்று எடுத்துக் காட்டுகிறது.

நாவலர் பரம்பரையை விளங்கச் செய்த பெருமகன் பண்டிதமணி ஆவர். நாவலர் அணியின் விசுவாசம் மிக்க தளபதியாகவும். நாவலரின் நோக்கினையும் போக்கினையும், உள்ளபடி அறிந்து உலகிற்குணர்த்திய தலைமகனாகவும் அவர் விளங்கினார்.

நாவலர் மற்றும் ஞானபரம்பரையினர் ஆகியோரின் உண்மைச் சரித்திரங்களைக் கண்டுபிடித்து நிலை நாட்டியவர் பண்டிதமணி. அவரின் ஆளுமை வளர்ச்சியில் அவர் நாவலர் பரம்பரையினர் என்னும் அம்சம் கணிசமான பங்கினைச் செலுத்தியுள்ளது.

நாவலர் எவ்வாறு ஆட்கொண்டார் என்பது பற்றிப் பண்டதமணி கூறும் விடயம் மிகச் சுவையானது.

மட்டுவிலில் 1899 ஆம் ஆண்டு (யூன்) ஆனிமாதம் இருபத்தேழாந்திகதி, சின்னத்தம்பி, வள்ளியம்மை தம்பதிகளுக்கு புதல்வனாகப் பிறந்தார் நமது பண்டிதமணி கணபதிப்பிள்ளை. தமது மூன்று வயதில் தாயை இழந்தார். தந்தையே தாயும் ஆனார்.

1912 ஆம் ஆண்டில், சின்னத்தம்பியார் மகனையும் அழைத்துக் கொண்டு, தனங்கிளப்புக் கிராமத்தில் குடியேறினார்.

மட்டுவில் அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் கற்ற கல்வியுடன் முறைசார்ந்த கல்விக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. ஆனால் முறைசாரா மரபு வழிக்கல்வி தொடர்ந்தது. உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளையின் மகன் பண்டிதர் மகாலிங்கசிவம் சின்னஞ்சிறு இலக்கியக் கதைகளையும், கவிகளையும் கணபதிப்பிள்ளைக்குச் சொல்லிக்கொடுத்து சிறுவயதிலேயே இலக்கிய ஆர்வத்தை ஏற்படுத்தியிருந்தார். ஆளுமை வளர்ச்சியின் ஆரம்பம் இவ்வாறு நன்கு அமைந்திருந்தது.

கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும் என்பர். உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளையுடனும், அவர் குடும்பத்தினருடனும், கணபதிப்பிள்ளை சிறுபராயத்தில் கொண்டிருந்த தொடர்பு அவரின் ஆளுமை வளர்ச்சிக்கு அத்திவாரம் இட்டது.

அக்காலத்தில் புராணப்படிப்பு ஒரு கலையாக விளங்கியது. ஊர்கள் தோறும், கோயில்களில் கந்தபுராணம், திருவிளையாடல் புராணம், திருவாதவூரர் புராணம் என்பன படித்துப் பயன் சொல்லும் வழக்கம், யாழ்ப்பாணத்தில் மரபு ஆக இருந்தகாலம். புராணபடனம், சைவசமய எழுச்சியை மக்களிடையே ஏற்படுத்திய அதேவேளை முறைசாராக் கல்வியாகவும் அமைந்தமை குறிப்பிடத்தக்கது. மக்கள் வாழ்வாங்கு வாழ அவர்களை நெறிப்படுத்திய கல்வி, புராணப்படனக் கல்வியாகும்.

இந்த வகையில் கந்தபுராண கலாசாரம் யாழ்ப்பாணத்தில் தழைத்து ஓங்கியது. மனிதரை மனிதராக மனிதத்தன்மைகளுடன் வாழ வைத்த பெருமை இக்கலாசாரத்திற்கே உரியது.

மட்டுவில் அம்மன் கோயில் மடத்தில் இவ்வாறான புராணப்படிப்பு ஒவ்வொரு வருடமும் நடைபெறும் பண்டிதர் மகாலிங்கசிவம் புராணத்திற்குப் பயன் சொல்கிறார். என்றால் கேட்டு இரசிப்பதற்கு அயற் கிராமங்களிலிருந்தும் சனங்கள் வந்து கூடுவர். அவர் செய்யுள்களுக்கு வெறும் கருத்தை மாத்திரம் சொல்லி அமைவதில்லை அவர் கூறுவது பயன் ஆகும். அதைக்கேட்டு எல்லோரும் பயன் பெறுவர். வாழ்விலும் கேட்டவற்றைப் பயனுள்ளதாக்குவர். புராணத்திற்குச் சொல்லும்

பயன் வாழ்க்கைப் பயனாகும். நிலைமை யாழ்ப்பாணத்தில் அக்காலத்தில் இருந்தது.

மகாலிங்கசிவத்தின் புதுமை நிறைந்த விசேடவுரை வியாக்கியானங்கள், கணபதிப்பிள்ளைக்குப் பெருவிருந்தாக அமைந்தன. அவரின் உள்ளத்திலே பேரெழுச்சியை உண்டு பண்ணும். அவ்வாறு கழிந்த பொழுதுகள் அவமாகப் போகவில்லை, தவம் ஆகின என்பது பின்னர் தெரியவந்தது. "கற்றலில் கேட்டல் நன்று" என்ற முதுமொழி, கணபதிப்பிள்ளையைப் பொறுத்தமட்டில் நிரூபணமாகியது.

இரவில் உரையாசிரியர் மாணவரிடமும் மகாலிங்க சிவத்திடமும் புராணங்கள் இதிகாசங்கள் பாடங்கேட்பது படிக்கிறதுமுண்டு. இவ்வாறான ஆசிரம வாழ்வு பதின்மூன்று வயதுவரை தொடர்ந்தது.

*1912* ஆம் ஆண்டளவில் கணபதிப்பிள்ளையின் மட்டுவில் வாசம் முடிவுற்று, தனங்கிளப்பு வாழ்வு ஆரம்பித்தது.

தனங்கிளப்பு, மட்டுவிலிருந்து மூன்று மைல் தூரத்தில் அமைந்துள்ள ஊர். வயல்வெளிகள் சூழ்ந்த பிரதேசம். மட்டுவிலிருந்து வேறுபட்ட சூழல். அங்கு படிப்பினைத் தொடர்வதற்கு ஏற்ற நிலைமை இல்லை. தினமும் மூன்று மைல்வரை நடந்து சென்று சங்கத்தானையில் கல்விகற்க வேண்டியிருந்தது.

சாவகச்சேரியில், வித்துவசிரோமணி பொன்னம்பலம் பிள்ளை, அக்காலத்தில் புகழ்பெற்ற புலவர். அவரின் மாணாக்கர்களான பொன்னையா உபாத்தியாயர், பொன்னம்பலப் புலவர், பொன்னப்பாபிள்ளை என்னும் மூவரிடமும் இரவு வேளைகளில் பாரதம், நிகண்டு நூல்களைக் கணபதிப்பிள்ளை பாடங்கேட்டுவந்தார்.

பொன்னம்பலப்புலவர், "இலங்கைமான்மியம்," "இராம நாத மான்மியம்", "அருணாசல மான்மியம்" என்னும் நூல்களை இயற்றிய பெருமைக்குரியவர். இலங்கை மான்மியம் அச்சேறவில்லை. மற்றைய இரண்டும் அச்சில் வெளிவந்தன. இலங்கை மான்மியம் என்ற நூலைக் கணபதிப்பிள்ளைக்குப் பாடம் சொல்லியும் கொடுத்தார்.

கணபதிப்பிள்ளையின் துரதிர்ஷ்டம், பொன்னம்பலப்புலவர் வேற்றூர் போகவேண்டி வந்தமை கணபதிப்பிள்ளையில் கொண்ட விருப்பினால் அவனையும் தம்முடன் அழைத்துச் செல்லப் புலவர் முயன்றார். ஆனால் அது நிறைவேறவில்லை.

புலவரின் பிரிவு, கணபதிப்பிள்ளையை வாட்டியது. படிப்பிலும் மனந்தளர்ந்தார். ஓரளவு நிறுத்தியும் விட்டார். இப்பொழுது வயல் வேலைதான் தஞ்சம். தந்தைக்கு உதவியாகக் கமவேலைகளில் ஈடுபடுவதும். மிகுதியாகக் கிடைத்த ஓய்வு நேரங்களில், தாயம் உருட்டுதல், சீட்டாடுதல் போன்ற கிராமியப் பொழுது போக்குக்களில் காலத்தைக் கழிப்பதும், கணபதிப்பிள்ளையின் விதியாகிவிட்டன. இந்த வகையில் ஐந்து ஆண்டுகள் கழிக்கப்பட்டன.

கணபதிப்பிள்ளைக்குப் பதினெட்டு வயது ஆகிவிட்து. *1917* ஆம் ஆண்டு அவரின் வாழ்வில் ஒரு புதிய திருப்பம் உதயமானது. எதிர்பாராது நிகழ்வதைத்தான் அதிர்ஷ்டம் என்பர். கணபதிப்பிள்ளைக்குக் கிடைத்த இந்த அதிர்ஷ்டம் தமிழ் கூறும் நல்லுலகிற்குக் கிடைத்த அதிர்ஷடம். என்பது பின்னர்தான் தெரியவந்தது.

*1917* இல் நடைபெற்ற நல்லூர் கந்தசுவாமிகோயில் திருவிழாக்களில் சப்பரம், தேர், தீர்த்தம் ஆகிய மூன்றையும் ஆதல் தரிசிக்க வேண்டும் எனக் கணபதிப்பிள்ளை எண்ணினார். அப்பொழுது தம்பிமுத்துப்பிள்ளை என்பவர் நல்லூரில் புத்தக வியாபாரம் செய்து கொண்டிருந்தார். திருவிழாக்கள் நடைபெறும் கோயில்களுக்கெல்லாம் சென்று புத்தகங்கள் விற்பனை செய்வதுதான் அவருடைய தொழில். தம்பிமுத்துப்பிள்ளை மட்டுவிலைச் சேர்ந்தவர். கணபதிப்பிள்ளைக்கு நன்கு தெரிந்தவர்.

கணபதிப்பிள்ளை நல்லூருக்குச் சென்றார். தம்பிமுத்துப் பிள்ளையுடன் தங்கியிருந்து சப்பரம், தேர், தீர்த்தம் ஆகிய மூன்று திருவிழாக்களையும் கண்குளிரப்பார்த்து மகிழ்ந்தார். நான்காம் நாள், தம்பிமுத்துப்பிள்ளை, கணபதிப்பிள்ளையை அழைத்துக்கொண்டு நாவலர் சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள நாடகக் கொட்டகைக்குப் போனார். அன்று நடந்து பாஞ்சாலிசபதம் நாடகம். கிட்டப்பா, கோவிந்தசாமி போன்ற இந்திய நடிகர்கள் நடித்தார்கள். கணபதிப்பிள்ளைக்கு இது புது

அனுபவம். அவரின் முதற்பட்டணப் பிரவேசமும் அதுவேயாகும் என்று பண்டிதமணி பின்னர் கூறுவார்.

அக்காலத்தில் நாடகம் விடிய விடிய நடக்கும் அன்றைய நாடகம் பின்னிரவு மூன்று மணிக்கே முடிந்தது. அதன்பின், கொஞ்ச நேரமாதல் படுத்து உறங்கலாம் என்று எண்ணிய இருவரும் நாடகக் கொட்டகையின் முன் முகப்பில் உள்ள கட்டிடம் ஒன்றின் விறாந்தையில் போய்த் தங்கினார்கள்.

"இதென்ன கட்டடம்" என்று கணபதிப்பிள்ளை வினவ, "இது நாவலர் பாடசாலை", என்று தம்பிமுத்துப்பிள்ளை பதிலலித்தார். அடுத்த கேள்வி "நாவலர் இப்பவும் இருக்கிறாரா?", என்பதாகும். கணபதிப்பிள்ளையின் இந்தக் கேள்வி தம்பிமுத்துப்பிள்ளையைத் திகைக்க வைத்ததோ என்னவோ, நம்மைத் திகைக்க வைக்கிறதல்வா? பதினெட்டு வயதுவரை, கணபதிப்பிள்ளைக்கு நாவலர் உயிரோடு இருக்கிறாரா இல்லையா என்பதைக் கூடத் தெரியாதிருந்தார் என்பதை அறியும் போது இப்போது யாருக்குதான் வியப்பு ஏற்படாது. அன்றைய யாழ்ப்பாணத்து நிலை அவ்வாறு இருந்தது. "நாவலர் இப்பவும் இருக்கின்றாரா என்றகேள்வி கிறீஸ்தவப் பாடசாலைப் படிப்பின் பயன்" என்று பண்டிதமணி பிற்காலத்தில் கூறிச்சிரிப்பார்.

கணபதிப்பிள்ளை நாவலரால் ஆட்கொள்ளப்பட்ட விதம் இவ்வாறுதான் அமைந்தது. வேடிக்கையாக இருப்பினும் அது ஆன்மார்த்தமானது.

அன்றுதான் கணபதிப்பிள்ளைக்கு நாவலர் பாடசாலையில் படிக்க வேண்டும் என்ற தீவிர ஆசைபிறந்தது. அந்த நேரம் நல்லூர் மணியும் அடித்தது. இருவரும் வீடு திரும்பினார்கள்.

மட்டுவில் கணபதிப்பிள்ளைக்கு நாவலர் காவிய பாடசலையில் படிக்கவேண்டும் என்ற பேரவா தோன்றுவதற்குக் காரணர் ஆகப் பாத்திரமேந்திய தம்பிமுத்துப்பிள்ளை தான், மட்டக்களப்பு ஏ. பெரியதம்பிப்பிள்ளை நாவலர் பாடசாலையில் கல்வி கற்பதற்கும் காரணகர்த்தாவாக இருந்தவர் என்பது நோக்கற்பாலது. தமிழ் செய்த தவம் தம்பிமுத்தர் வடிவில் வந்தது. பண்டிதமணியும் புலவர்மணியும் மலர்ச்சிபெற வழிசெய்தது.

மட்டுவில் உரையாசிரியர் வேற்பிள்ளை உபாத்தியாயரின் கடைசி மகன் நடராசா. இவர் பின்னர் விஞ்ஞானப் பட்டதாரியாக விளங்கினார். ஆங்கிலப் புலமையும் உண்டு. பண்டிதமணியின் உருவாக்கத்தில் பெரும்பங்கு கொண்டவர் நடராசா. சாவகச்சேரியிலும் பின்னர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் படித்த காலங்களில் அடிக்கடி தனங்கிளப்புக்கு வந்து கணபதிப்பிள்ளையுடன் தங்கிப் போவாராம். கணபதிப்பிள்ளையை எவ்வாறு படிப்பில் தொடரவைக்கலாம் என்பதுதான் நடராசாவின் சிந்தனையாக இருக்குமாம்.

ஒருநாள் நடராசா ஓர் இந்துசாதனப் பத்திரிகையுடன் கணபதிப்பிள்ளையிடம் வந்தார். அதில் ஒரு விளம்பரம் காணப்பட்டது. வண்ணார்ப்பண்ணை நாவலர் பாடசாலையில் காவிய வகுப்பு ஆரம்பிக்க இருப்பதாகவும் அதிற் படிப்பதற்குக் குறித்த தினத்தில் பிள்ளைகள் தெரிவு செய்யப்படவுள்ளார்கள் என்றும், உணவு, புத்தகம், இருப்பிட வசதி இலவசம் என்றும் அந்த விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

கணபதிப்பிள்ளையின் மகிழ்ச்சி கரைபுரண்டது. தந்தையாரும் உடன்பட்டார். நடராசா முடித்து வைத்தார். 1917 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் கணபதிப்பிள்ளை காவிய பாடசாலையின் மாணவர் ஆனார். சில மாதங்கள் கழித்து மட்டக்களப்பிலிருந்து பெரியதம்பிப்பிள்ளையும் வந்து வகுப்பில் சேர்ந்து விட்டார். வகுப்பில் பன்னிருவர் கற்றனர்.

காவிய பாடசாலையில் தமிழ் இலக்கியம் இலக்கனம் தர்க்கம் என்பன போதிக்கப்பட்டன. அவற்றை முறையாகக் கற்றுத் தேறி வித்துவசபையினர் நடத்திய பரீட்சைகளில் முதல் மாணாக்கனாகத் தேறிப் பரிசில்களையும் பாராட்டையும் பெற்றவர் கணபதிப்பிள்ளை.

ஆனால் கணபதிப்பிள்ளை பாடநூல்களைக் கற்றதிலும் பார்க்கத் தமது ஆசான்களையே அதிகம் கற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. சுன்னாகம் குமாரசாமிப்புலவர் அவரின் தலைமை ஆசான். பாடசாலை மானேஜராக கைலாய பிள்ளை, வித்துவான் சுப்பையாபிள்ளை ஆகியோர் ஏனைய ஆசிரியர்கள். இலக்கண

இலக்கியங்களை கற்றதனால் பண்டிதர் ஆன கணபதிப்பிள்ளை, ஆசான்களைக் கற்றதனாலேயே பண்டிதமணி ஆனார்.

ஆசான்களைக் கற்றல் என்பது அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அப் பெருமக்களின் ஆசார ஒழுக்க சீலங்கள், மனிதப் பண்புகள் பெரியவர்களோடு பேசும்போது அனுட்டிக்க வேண்டிய மரபுமுறைகள், பிறரோடு பழகும் முறைகள், உயர்வான குணநலங்கள், தூய ஒழுக்கம் என்பனவற்றைக் கற்றலும் ஒழுகுதலும் ஆகும். புலவரும் மனேச்சரும் கணபதிப்பிள்ளையை தமது சொந்தப்பிள்ளையைப் போலப் பரிவும் பாசமும் காட்டிப் பேணிவந்தனர். கணபதிப்பிள்ளைக்கு இப் பெரியவர்களின் தொடர்பினால் மேலும் கற்றுப் புலமை பெறவேண்டும் என்ற ஆர்வமும் ஊக்கமும் பல்கிப் பெருகின.

இந்த வகையில் நாவலர் காவிய பாடசாலையில் பெற்ற கல்வி, வாழ்க்கை அனுபவங்களின் பேறாகவே நாவலரின் சைவத் தமிழ்ப் பேரியக்கத்தின் இருபதாம் நூற்றாண்டுக் காவலராகவும் அவரின் ஞானபரம்பரையைப் படரவைப்பதில் முக்கிய இயக்குனராகவும் செயலராகவும் விளங்குவதற்குத் தேவையான முழுத்தகைமைகளையும் பண்டிதமணி பெற்றார்.

நாவலர் காலச் சூழ்நிலை வேறு பண்டிதமணி பணியாற்ற எதிர்நோக்கிய காலச்சூழ்நிலை வேறு. பண்டிதமணி வளர்ந்து வரும் கால உணர்வையும், பெருகி வரும் அறிவு வளத்தையும் நவீன இலக்கியக் கோட்பாடுகளையும் புறக்கணித்து விட முடியாது என்பதையும் உணர்ந்து கொண்டார்.

காவிய பாடசாலையில் சைவத் தமிழ்மரபுக் கல்வியை ஓதி உணர்ந்து கொண்டிருந்த காலத்தில், பண்டிதமணியும் ஆங்கிலக் கல்விமுறையில் கற்று வந்த அதேவேளை தமிழ் ஆர்வலர்களாகவும் அஞ்ஞான்று விளங்கிய புத்தி ஜீவிகள் சிலரும் திருநெல்வேலியில் உள்ள ஒரு வளவில் ஈரப்பலா மரம் ஒன்றின் கீழ் அமர்ந்து கருத்துப்பரிவர்த்தனை செய்து வந்தனர். ஆங்கிலக் கல்லூரி அனுபவங்கள், சைவமும் தமிழும், ஆங்கில இலக்கியம், மேலைத்தேய கீழைத்தேயத் தத்துவம் என்பனபற்றிய விவாதங்களும் விமர்சனங்களும் இடம்பெறும். இச்சந்திப்பை "ஈரப்பலாச் சங்கம்" என்று அழைத்தனர்.

இந்த முறைசார் அமைப்பில் கலாநிதி கு. சிவப்பிரகாசம், பட்டதாரிகளான மட்டுவில் வே. நடராசா பொ. கைலாசபதி, தென்மராட்சி நடராசா, வைத்தியலிங்கம் போன்றோருடன் பண்டிதமணியும் இடம் பெற்றுருந்தார் பண்டிதமணி பழமையில் பற்று வைக்கும் அதே வேளை புதியனவற்றில் நாட்டம் செலுத்தவும், தமது அறிவு எல்லையை தமிழ் சுற்று வட்டத்திற்கப்பாலும் நீடித்துக் கொள்வதற்கும் ஈரப்பலாச்சங்கம் தகுந்த களம் ஒன்றினை அமைத்துக் கொடுத்தது பண்டிதமணியின் ஆளுமை வளர்ச்சிக்கு இது பேருதவியாயிருந்தது.

பண்டிதமணியில் சங்கமித்த பழமையும் புதுமையும் அவரது ஆளுமையிலும், பேச்சுக்கள், எழுத்துக்களிலும் வெளிப்பாடாயின. நாவலர் ஞானப்பரம்பரை என்ற வட்டத்திற்குள் மாத்திரம் தன்னை அடக்கிக் கொள்ளாது அப்பரம்பரையின் தனித்துவத்தை நுட்பமாகப் பேணிய அதே வேளை தமது தனித்துவமான ஆளுமையையும் இணைத்துக் கொண்டவர், பண்டிதமணி தாம் வாழ்ந்த காலத்து உணர்வுகளையும், சமகாலத் தேவைகளையும் அவர்கருத்தில் கொள்ளத் தவறியதில்லை. அவர் நாவலர் பரம்பரையில் முற்போக்கு வாதியாகவே திகழ்ந்தார். சமூக அரசியலில் கூட சமதர்மம் பக்கம் நின்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. காலத்திற்கு ஒவ்வாதவற்றை கழிக்கவும் தேவையானவற்றை ஏற்கவும் அவை பழமையாகவும் இருக்கலாம் இன்று பிறந்த புதுமையாகவும் இருக்கலாம். அவர் தயங்கியதில்லை. அதுவே பண்டிதமணியின் ஆளுமையின் சிறப்பு.

(பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை பிறந்து தொண்ணூற்றொன்பது. ஆண்டுகள் நிறைவெய்துவதையும் 27-06-98 அன்று நூறாவது ஆண்டு தொடங்குவதையும் குறிக்குமுகமாக இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.)

# 6. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

## ஆளுமை வளர்ச்சி

சைவமும் தமிழும் பிரிக்கமுடியாதன. சைவம் சிவசம்பந்தமுடையது. சிவம் என்றால் அன்பு. அவ்வாறே தமிழ் என்பதற்கும் அன்பு என்ற பொருள் உள்ளது. எனவே, அன்பிலிருந்து அன்பை எவ்வாறு பிரிப்பது? அது முடியாத காரியம். ஆகையால் சைவமும் தமிழும் இணைந்தே வாழ்கின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் சைவத்திற்கும் தமிழுக்கும் பெரும் சோதனை. இலங்கையில் மட்டுமல்ல, தமிழ் நாட்டிலும் தான். அப்பொழுது ஆங்கிலேய ஏகாதிபத்தியம் கொலுவோச்சிய காலம். எங்கே, காலம் காலமாகக் கைக் கொள்ளப்படடு வந்த, சைவத்தமிழ் பண்பாடு அந்நியர் ஆதிக்கத்தில் நிலை குலைந்து போகுமோ என்று அஞ்சிய காலம். அத்தகைய ஓர் இக்கட்டான சூழலில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தோன்றி, சைவத்தமிழ்ப்பண்பாட்டு மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். நாவலருக்குப்பின் அவரின் ஞானபரம்பரையினரால், மறுமலர்ச்சிப் பணிகள் தொடரப்பட்டன. மறுமலர்ச்சிப் பணிகளுக்குக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டது. சைவத்தமிழ்க் கல்வி.

நாவலரும், அவர் பரம்பரையினரும் வளர்த்த சைவத் தமிழ்க் கல்விமரபை, இந்த நூற்றாண்டில் வாழுகின்ற எமக்கு, அதனைப் பேணிக் கையளித்த பெருமை பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களுக்கே உரியது. அந்த வகையில் பண்டிதமணி ஒரு வரலாற்று புருஷர் ஆகின்றார். நாவலரின் நேர் மாணாக்கர்களாகிய சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர், த. கைலாசபிள்ளை ஆகியோரிடம் குரு சீடமுறையில் பாடங்கேட்ட பாக்கியம் பெற்றவர். அதனால் பண்டிதமணி நாவலர் பரம்பரையின் உறுப்பினராகவும் விளங்குகின்றார். சாதாரண உறுப்பினர் அன்று, மிக்க தகுதிவாய்ந்த உறுப்பினர். நாவலரின் உள்ளக்கிடக்கையை உள்ளபடி உணர்ந்த பெருமகன், பண்டிதமணி என்றால் அது உண்மையான கூற்று.

யாழ்ப்பாண மாவட்டம், தென்மராட்சிப் பிரிவு, மட்டுவில் கிராமத்திலே, 1899 ஆம் ஆண்டு ஆனி மாதம் 27 ஆந் திகதி சின்னத்தம்பி - வள்ளியம்மை தம்பதிகளுக்கு மகவாகப் பிறந்தார்.

(பண்டிதமணி அவர்கள் இன்று அவரின் 95 ஆவது பிறந்த தினம்)

மட்டுவிலில் பிறந்து, தனங்கிளப்பில் வளர்ந்து, திருநெல்வேலியில் வாழ்ந்த, பண்டிதமணி, நாவலருக்குப் பின், நாவலர் கருத்தைப் பரப்பும் பணியே தமது பணியாகக் கொண்டிருந்தவர்.

நாவலர் கருத்தை சரியான முறையில் அறிந்து கொள்வதற்குப் பண்டிதமணி தம்மைத் தகுதியாக்கிக் கொண்டமைபற்றி நாம் அறிந்து கொள்ளவேண்டும்.

1917 ஆம் ஆண்டு கார்த்திகையில், வண்ணார் பண்ணையில் அமைந்திருந்த காவிய பாடசாலையில் மாணவராகும் வாய்ப்பை பெற்றார். சைவத்தமிழ் மரபுக் கல்வியை அளிப்பதற்கென்றே நாவலரால் நிறுவப்பட்டது இக்காவிய பாடசாலை. கணபதிப்பிள்ளை சேர்ந்த பொழுது பேரறிஞர் சுன்னாகம் அ. குமாரசாமிப்புலவர் பேராசனாக விளங்கினார். நாவலர் தமையனார் மகன். த. கைலாசபிள்ளை காவிய பாடசாலை மனேஜராக இருந்தார். இவ்விருவரின் செல்வாக்கு கணபதிப்பிள்ளையில் நன்கு செறிந்தது. குமாரசாமிப் புலவரின் புலமை ஈடு இணையற்றது. தமிழ்த் தாத்தா உ. வே. சாமிநாத ஐயர் பதிப்பித்த சீவகசிந்தாமணி முதற்பதிப்பில் பல பிழைகளைக் கண்டுபடித்து நிறுவியவர் குமாரசுவாமிப்புலவர். நாற்பதுக்கும் மேற்பட்ட தமிழ் நூல்களைப் பரிசோதித்துப் பிழையின்றிப் பதிப்பித்தவர். அப்புலவர் பெருமான், நாவலரையும் அவர்பரம்பரையினரையும் நம் நாட்டுத் தமிழ்ப்புலவர்களின் சரித்திரங்களையும் கணபதிப்பிள்ளைக்கு எடுத்துரைத்து வந்தார். அவையாவும் பசுமரத்தாணிபோல கணபதிப்பிள்ளையின் மனதில் ஆழப்பதிந்தன. நாவலரையோ, நம் நாட்டுத் தமிழ்ப் புலவர்களையோ இழித்துரைத்த எவரும் பண்டிதமணியின் கண்டனத்திற்குத் தப்பிவிடமுடியாது. பண்டிதமணியின் கண்டனத்தின் வெம்மை தாங்கமுடியாதது.

காவிய பாடசாலையில் கற்றதன் விளைவாகப் பழமையில் பற்றுவைக்கும் பண்பினைப் பெற்ற பண்டிதமணி, புதுமையில் நாட்டங்கொண்டு அதனையும் அறியவிழைந்தார். அந்த முயற்சிக்கு உதவியது "ஈரப்பலாச் சங்கம்".

திருநெல்வேலிச் சிவன் கோவிலுக்கு அருகே ஒரு தோட்டம் அங்கு செழித்து வளர்ந்த ஓர் ஈரப்பலா அதன் கீழ் சங்கம் கூடும். ஆங்கிலக் கல்வி கற்றோர், விஞ்ஞானம், தத்துவம், ஆங்கில இலக்கியம், கணிதம் ஆகியவற்றில் புலமை பெற்றோர் அங்கு அடிக்கடி கூடி தத்தம் துறை சார்ந்த விடயங்களைப்பற்றிய கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வர். கலாநிதி. சிவப்பிரகாசம், பொ. கயிலாயபதி, மட்டுவில் வே. நடராசா போன்ற பல்துறை அறிஞர்கள் அவர்களில் அடங்குவர். பண்டிதமணியும் அங்கு சென்று தமது அறிவைச் செழுமைப்படுத்திக் கொண்டார். அத்தோடு ஆங்கிலம் தெரிந்து கொள்ளாத அவர், இவர்களின் கூட்டுறவால், மேற்கத்தைய புதுமைகளையும் அறிந்து, ஆராய்ந்து பார்க்கச் சந்தர்ப்பம் கிடைத்தது.

கலைப்புலவர் நவரத்தினம் 1931இல் ஆரம்பித்த கலாநிலையத்தின் மதிப்புக்குரிய உறுப்பினராகப் பண்டிதமணி விளங்கினார். இக்கலாநிலையத்தின் நோக்கம், இலக்கியம், இலக்கணம், தத்துவஞானம், பௌதிக சாஸ்திரம், ஓவியம், நாகரீகம், சரித்திரம் ஆகிய துறைகளில் பாரத நாடும் இலங்கையும் அடைந்த பேறுகளை ஆராய்தல். இந்த ஆய்வு முயற்சிகளிலும், கலை ஆக்கங்களிலும் உயிர்ப்புடன் பங்கு கொண்டவர் பண்டிதமணி. இதனால் பண்டிதமணியின் பல்துறை அனுபவங்கள் பெருகின. இக்கலாநிலையத்தில் தான் பண்டிதர் பட்டமும் பெற்ற கணபதிப்பிள்ளை முதலில் விரிவுரைகள் ஆற்றத் தொடங்கினார். அதன் பின் பண்டிதமணியின் விரிவுரைகள் பிரபல்யம் பெறத்தொடங்கின.

பண்டிதமணி மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் பண்டிதர் பட்டமும். கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பயிற்றப்பட்ட ஆசிரியர் சான்றிதழும் பெற்றவர். திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் தமிழ் விரிவுரையாளராகப் பதவி பெறுவதற்கு இச் சான்றிதழ்கள் உதவின. அங்கு பண்டிதமணி பெற்ற பெரும் பேறு, உப-அதிபர் பொ. கைலாசபதியின் ஆட்கொள்ளலின் கீழ் வளர்த்தமையே ஆகும்.

பண்டிதமணி, தமிழ் இலக்கிய இலக்கணத்துடன் மேனாட்டு இலக்கிய ஈடுபாடும், ஆக்க இலக்கியத் தொடர்பும், திறனாய்வும், முறைசார்ந்த கல்விப்பயிற்சியும் கொண்டிருந்தமையால், நாவலர் ஞானபரம்பரையிலே தனித்துவம் மிக்கவராய் விளங்குகின்றார்.

பழைமைக்குப் பழைமையாய், புதுமைக்குப் புதுமையாய், அதேவேளை பழைமைக்கும் புதுமைக்கும் இணக்கம் கண்டவராய் மிளிர்கின்றார். இவற்றிற் கெல்லாம் காரணம், பண்டிதமணியின் பல்துறை ஈடுபாடு எனலாம்.

1951 ஆம் ஆண்டு, யாழ்ப்பாணத்திலே தமிழ்வளர்ச்சிக் கழகம், தமிழ் விழாவை நடத்தியது. பண்டிதர் கணபதிப்பிள்ளை "தமிழ்" என்னும் தலைப்பில் அங்கு ஆற்றிய உரை சர்ச்சையை ஏற்படுத்திய போதும், அதன் பேறாகப் பண்டிதமணி என்ற பட்டம், "தினகரன்" பத்திரிகை ஆசிரியராலும், "கல்கி" பத்திரிகை ஆசிரியராலும் தத்தம் வெளியீடுகளில் பொறிக்கப்பெற்றமைக்குத் கால்கோள் ஆகியது. அதற்குப்பின் பண்டிதமணி என்றாலே இவரை மட்டும் இலங்கையிலே குறிப்பதாயிற்று.

1978இல் இலங்கைப் பல்கலைக்கழகம் (D.Litt.) எனும் இலக்கிய கலாநிதிப்பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. "பண்டிதமணி" கணபதிப்பிள்ளையை இலக்கிய கலாநிதிப்பட்டம் வழங்கிக் கௌரவித்ததன் மூலம் இலங்கைப் பல்கலைக்கழக் தமிழ் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய, சைவர்களின் சீர்திருத்த வீரர் ஆகிய ஆறுமுகநாவலரால் உருவாக்கப்பட்ட தமிழ்க்கல்வி, இலக்கியத் திறனாய்வு, சைவசித்தாந்தம் ஆகியவற்றின் புகழ்பூத்தமரபைக் கௌரவிக்கிறது எனலாம். என அந்நாள் "ஈழநாடு" பத்திரிகை ஆசிரியர், என் சபாரத்தினம் கூறுவது மிகப்பொருத்தமானது. நாவலர் பரம்பரையில், தமிழ்க்கல்வி, இலக்கியத் திறனாய்வு, சைவசித்தாந்தம் ஆகிய மூன்றையும் ஒருங்கே பேணிக் காத்த பெருமை பண்டிதமணி ஒருவருக்கே உரியது என்று துணிந்து கூறலாம்.

பண்டிதமணி, தாம் பேசியவற்றை, எழுதியவற்றை தம் வாழ்க்கையிலும் கடைப்பிடித்து வாழ்ந்து காட்டிய பெருமையும் கொண்டவர்கள். நாவலரைப் போல நைட்டிகப் பிரமச்சாரியாகவே வாழ்ந்துள்ளார். கற்றல், கற்பித்தல், உண்மைப் பொருளைச் சிந்தித்தல், பேசுதல், எழுதுதல் என்பனவற்றிலேயே ஈடுபட்டிருந்தார். கந்தபுராண கலாசாரம், இலங்கைத் தமிழ்மக்கள் உடையது. "ஒரு காலத்திலே இந்த யாழ்ப்பாணத்திலுள்ள ஆடவர்கள், மகளிர்கள், முதியவர்கள், இளையவர்கள் ஆகிய எல்லோருடைய இரத்தத்திலும்

கலந்து நரம்புத்துய்கள் தோறும் ஊறிச் சுரந்து கொண்டு இருந்தது. கந்தபுராணம்". எனப் பண்டிதமணி கூறுகிறார். இந்தக் கந்தபுராண கலாசாரம் தான் நம்மிடையே, அந்நிய கலாசாரங்கள், மிலேச்ச கலாசாரங்கள். புகுந்து கொள்ளாமல் தடுத்தது. தமிழ் மக்களை மனிதர்களாக வாழவைத்தது. கந்தபுராண கலாசாரம் எம்மால் கைவிடப்படத் தொடங்கிய அன்று நம்வாழ்வில் கலி புகுந்து விட்டது. இன்னல்களும் இழப்புக்களும் தொடர்கின்றன. இதுபற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய காலம் இது. நாவலரும், பண்டிதமணியும் இன்று எமக்குத் தேவைப்படுகின்றனர் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். நமது பாரம்பரியச் சிறப்புக்குக் கந்தபுராணத்துடனான தொடர்புதான் காரணம். இன்றைய அவலநிலைக்கும் கந்தபுராணத்துடனான தொடர்பு அறுந்தமைதான் காரணம். கந்தபுராணம் வெறுமனே சமய நூல் அன்று, அது ஒரு வாழ்வியல் நூல் ஆகும்.

பண்டிதமணி, இலக்கிய கலாநிதி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் 86 வருடங்கள் 08 மாதங்கள் 16 நாட்கள் இப்பூவுலகில் வாழ்ந்துள்ளார்கள். அவர்கள் சிந்தனைச் செல்வராக விளங்கி தமது எழுத்தாலும், பேச்சாலும், சாதனையினாலும் நம் எல்லோரது உள்ளங்களிலும் நிறைந்துள்ளார்கள். 13-03-1986 அன்று அன்னாரது பூதவுடல் மறைந்தாலும் கூட, அவரது புகழ் என்றும் ஒலித்துக் கொண்டே இருக்கும். என்பது உறுதி. பண்டிதமணியை ஞானகுருவாகக் கொள்வோருக்கு வாழ்க்கையில் எதுவித கேடும் இல்லை.

திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் பயின்ற ஆசிரியர்கள், பண்டிதமணியின் கருத்துக்களையும் அவரிடம் பெற்ற நடைமுறைப் பண்பாடுகளையும் இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் செறியச் செய்திருக்கின்றனர். ஆனால் அவற்றைத் தொடர்ந்தும் பின்பற்றும் நிலை இப்போது அருகிவருவதையும் காண்கின்றோம். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலங்களிலும் பார்க்க, தற்காலத்தில் சைவத்தமிழ்ப் பண்பாட்டிற்குக் கூடிய அவலம் வந்துள்ளது. பண்டிதமணியின் கருத்துக்கள் மீண்டும் பரவவேண்டும். அவர் எழுதிய நூல்கள் தமிழ் மக்களுக்குக் கிடைக்கச் செய்யவேண்டும். தமிழ் மக்கள் அந்நூல்களைப் படித்து, பாரம்பரியத்தை உணர்ந்து மீண்டும்

தமது உரியநிலையை அடைய வேண்டும். பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை இக்கைங்கரியத்தைத் தொடர்ந்து செய்வது மிகவும் இன்றியமையாதது. பெரியவர்களின் பிறந்ததினம், மறைவுதினம் இரண்டும் நினைவு கூரப்படுகின்றன? ஏன், அவ்வாறு செய்கின்றோம். அப்பெரியார்களுக்காக அன்று. நாம் அவர்களைப் பற்றியும், அவர்களின் செயற்கரிய செயல்கள் பற்றியும், இப்புண்ணிய தினங்களில் சிந்திப்பதால் நாம் ஈடேற்றம் அடைகின்றோம். எமது வாழ்வு புனிதமாகின்றது. பண்டிதமணியின் பரந்துபட்ட பணிகள் நமக்கெல்லாம் கலங்கரை விளக்கம் ஆகும்.

# 7. நாவலருக்குப் பின் நமக்கொரு சைவக்காவலர் பண்டிதமணி, இலக்கிய கலாநிதி சி. கணபதிப்பிள்ளை

பண்பாடு, பாரம்பரியம், மரபு, கலாசாரம், பழைமை என்பன பல நூற்றாண்டுக் காலமாக நமது முன்னோரினால் தேடப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு, பேணி வளர்க்கப்பட்டு நம்மிடம் கையளிப்பட்டுள்ள அரும்பெரும் செல்வங்கள். இவையனைத்தும் காலந்தோறும் மக்களின் வாழ்க்கையிலிருந்து மலர்ந்தவைகளே. இவை வாழ்க்கையை மேம்படுத்த உதவுகின்றன. காலந்தேறும் இவை பரிசோதனைகளுக்குட்படுத்தப்பட்டு, வாழ்க்கைக்குப் பொருந்தாதன கழிக்கப்பட்டு, வேண்டுவன பேணப்பட்டு, மேலும் தேவையானவை புதிதாகச் சேர்க்கப்பட்டு இத்தலைமுறையினருக்கு நம் மூதாதைகளால் வழங்கப்பட்ட முதுசொத்துக்கள். ஓர் இனத்தின் பெருமை, சீர், சிறப்பு, செழுமை, உயர்வு என்பன இவற்றில் அவ்வினம் அடைந்துள்ள அடைவுகளைக் கொண்டே மதிப்பீடு செய்யப்படுகிறது. விஞ்ஞான மேதை ஐசாக் நியூட்டன் இது தொடர்பாகத் தரும் கருத்து மனதில் கொள்ளத்தகுந்தது.

"எனது முன்னோர்களைக் காட்டிலும் என்னால் அதிக தொலைவு காணமுடிந்தமைக்குக் காரணம் அவர்களின் தோள்களின் மீது ஏறி நின்று நான் பார்த்ததே". இங்கு முன்னோர்களின் தோள்கள் என்று குறிப்பிடப்படுபவை நம்முன்னோர்கள் எமக்களித்த அறிவுச் செல்வத்தையும் பண்பாட்டு மரபுகளையும் என்று உணர்ந்து கொள்ள வேண்டும். மனிதனின் நாகரீக வரலாறு என்பது இவ் அரும் பெருஞ் செல்வங்கள் தோன்றி வளர்ந்து வந்த வரலாறுதான். இவையில்லாத மனித சமுதாயத்தை ஒருதரம் கற்பனை செய்துபார்த்தால், அச்சமுதாயத்தின் வெறுமை, வறுமை, சிறுமை என்பன துலங்கக் காணலாம்.

மரபு, பழைமை என்பன பண்பும், பயனும், பலமும் கொண்டன. இவை பிற்போக்கு அன்று, பின்னோக்கேயாகும். மனித சமுதாய வளர்ச்சிக்குப் பழைமையும் புதுமையும் இணைதல் நன்மை தரும். இப்பின்னோக்கும், மரபுகளில் பற்று வைக்கும் நிலையும் புதுமைக்கு அடித்தளமாக அமைகின்றன. புதுமை

பழைமையில் இருந்து பிரவாகித்து எழவேண்டும். இவ்வாறு பழைமை, மரபு, பாரம்பரியங்களில் பற்றும், உணர்வுகளையும் அரவணைத்து, இரண்டிற்கும் பாலம் அமைத்துச் சைவத் தமிழ் மறுமலர்ச்சிக்குப் பெரும் பணிகள் ஆற்றிய இந்த நூற்றாண்டின் சைவத் தமிழின் தலைமகன் பண்டிதமணி, இலக்கிய கலாநிதி சி. கணபதிப்பிள்ளை ஆவர்.

சென்ற நூற்றாண்டில், சைவமும் தமிழும், சைவத் தமிழ்மக்களின் பண்பாடும், மரபுகளும் அந்நியரின் ஆக்கிரமிப்புக்குள்ளாகி இருந்தபோது, இவற்றை மீட்டு, பாதுகாத்து, இவற்றின் மறுமலர்ச்சிக்காக அல்லும் பகலும் உணர்வோடு உழைத்துப் பெரும் பணியாற்றியவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள், நாவலருக்குப் பின் இவற்றின் காவலராக நாவலர் ஞானபரம்பரையைத் துலங்க வைக்க எழுந்த ஞானபானுவாக இந்த நூற்றாண்டில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை விளங்கினார்.

கல்வி என்பது விளக்கேற்றல் என்று நாவலர் கூறியுள்ளார். ஒரு விளக்கில் இருந்து பல விளக்குகளை ஏற்றிவைக்க முடியும். நாவலர் ஒரு ஞானவிளக்கு. இந்த ஞானவிளக்கிலிருந்து பல ஞானவிளக்குகள் ஏற்றப்பட்டன. நாவலர் ஞானபரம்பரையினர், இந்த ஞானச் சுடர்களாக விளங்கினர். இந்த ஞானச்சுடர்களுள் மிகப் பிரகாசமான சுடராகப் பரிணமித்தவர் பண்டிதமணி.

யாழ்ப்பாணக்குடாநாட்டில், தென்மராட்சிப் பிரிவில், மட்டுவில் எனும் கிராமத்தில் 1899 ஆம் ஆண்டு ஆனி மாதம் இருபத்தேழாந்திகதி சின்னத்தம்பி, வள்ளியம்மை தம்பதிகளுக்குக் குழந்தையாகப் பிறந்தவர். நமது பண்டிதமணி. தனங்கிளப்பு இவரின் தாயாரின் ஊர். இங்கு எழுந்தருளியிருக்கின்ற காரைத்தூ விநாயகரைத் தொழுது தவமிருந்து வேண்டிப் பெற்ற பிள்ளையாகையினால் இவருக்குக் கணபதிப்பிள்ளை என்று திருநாமம் சூட்டினர்.

தெய்வநம்பிக்கை, சைவ அநுட்டானங்கள், புராணபடனம், தமிழ் இலக்கிய இலக்கண அறிவு, தமிழர் சால்பு ஆகியன நிரம்பப் பெற்ற குடும்பம், உறவினர்கள், சமூகச் சூழல்,

கணபதிப்பிள்ளையின் பிள்ளைப் பராய வளர்ச்சிக்கும் செம்மைச் செழிப்புக்கும் உரமும் வலுவும் அளித்தன. அவரின் ஆளுமை உருவாக்கத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பது உணரற்பாலது.

மட்டுவிலில் தமது ஆரம்பக்கல்வியைத் தன்னும் முறை சார்ந்த பாடசாலையில் முழுமையாகத் தொடரமுடியாத நிலையில் *1912* ஆம் ஆண்டில் இவரின் தந்தை சின்னத்தம்பியார், கணபதிப்பிள்ளையையும் அழைத்துக் கொண்டு சென்று தனங்கிளப்புக் கிராமத்தில் குடியேறினார்.

மட்டுவில், தனங்கிளப்பு உள்ளிட்ட பல கிராமங்களைக் கொண்டது தென்மராட்சி. இங்கு மருத நிலப் பாண்புகளும், எழில் நிறைந்த இயற்கை வளங்களும், நோக்குமிடமெங்கணும் நீக்கமற நிறைந்து காணும் சைவத் திருக்கோயில்களும், எளிமையும், உயர் தமிழ்ப்பண்புகளும் ஒன்று சேர வாழ்வாங்கு வாழும் சான்றோர்களும், பசுமையும், வந்தாரை வரவேற்று விருந்தோம்பும் பண்பும் நிறை இருந்தன. முறை சார்ந்த பாடசாலைகளிற்றான் கல்வியை கற்க வேண்டும் என்ற நிலைபாடு அன்று அவ்வளவு தூரம் இப்பகுதிகளில் நிலை கொள்ளவில்லை. முறை சார்ந்த பாடசாலை படிப்பின் எதிர்பார்ப்பு, சான்றிதழ் பெற்று உத்தியோகம் பெறுதல் இக் கிராமங்களில், மக்களின் சுயதேவைகளை பூர்த்தி செய்து, திருப்தியான வாழ்வினை நடாத்துவதற்கு வேண்டிய பொருளாதார வளங்களும், வாய்ப்புக்களும் இருந்தமையினால் உத்தியோகங்களில் அமர்ந்தால் தான் வாழ்வு என்ற மன அங்கலாய்ப்பு மக்களில் அவ்வளவு தொற்றிகொள்ளாத காலம் அது. எனவே, கணபதிபிள்ளையும் உத்தியோகப்பற்றுள்ள பாடசாலைக் கல்விக்கு முற்றுப்புள்ளியிட்டமை பற்றி அவரின் குடும்பத்தவரோ, உறவினரோ கவலைபடவில்லை. எனினும், இயற்கையோடிணைந்த வாழ்வுச் சூழலிருந்து அனுபவம், கேள்வி, ஒழுக்கம் என்பவற்றின் மூலம் கணபதிபிள்ளை கற்க வேண்டியவற்றைக் கற்றுக் கொண்டுதான் இருந்தார். திண்ணைப்பள்ளிகூடங்களிலும், இராப்பள்ளிகூடங்களிலும் அறநூல்கள்,சமயநூல்கள், புராண இதிகாசங்கள், தமிழ் இலக்கிய இலக்கணம் என்பவற்றையும் கற்றுக் கொள்ளத் தந்தையார் ஏற்பாடு

செய்திருந்தார். இதனால் இவரின் உறவினர், உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை, சாவகச்சேரி பொன்னம்பலபிள்ளை, பொன்னையா உபாத்தியாயர் பொன்னப்பாபிள்ளை ஆகியோருடனான குரு-சீட உறவும், குருகுல வாசமும், வாசனையும் கணபதிபிள்ளைக்கு கிடைத்தன. உத்தியோகபற்றற்ற, முறைசாராத, இயற்கையான இக் கல்விமுறை, கற்போரை மக்கட் பண்புடையோராக்கின்றது: அங்கலாய்ப்புக்கள், ஏக்கங்கள், சஞ்சலங்கள் இல்லாத சாந்தியும், சமாதானமும், தன்னம்பிக்கையும் நிறைந்த நல் வாழ்விற்கு இட்டு செல்கின்றது. உடல், உள, ஆத்மீக வளர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய தூய்மையான கிராமியச் சூழலில் கணபதிபிள்ளை தமது இளமைப்பருவத்தில் பதினெட்டு ஆண்டுகளை கழித்தார். "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பதற்கிணங்க இப் பருவத்தில் கணபதிபிள்ளை இயற்கையோடிணைந்து தன்னிச்சையாக கற்ற கல்வியும் பெற்ற அனுபவங்களும் அவரின் வாழ்வு முழுவதும் ஊடுருவிச் செறிந்து நிலைப்பெற்றன. மனிதனுக்கு இயல்பானவற்றை இயற்கை வழி நின்று கற்றார். மனிதனுக்கு இயல்பானவை அன்பு, மானிட நேயம், உண்மை, கருணை, நீதி, நல்லொழுக்கம் என்பன. மனிதனுக்கு அந்நியமானவற்றைக் கற்காது விட்டார். மக்களின் வாழ்க்கைத் தேவைகள் வேறு வாழ்க்கை ஆசைகள் வேறு. வாழ்க்கை ஆசைகள் குறைந்ததும் ஆனால் வாழ்க்கைத் தேவைகளை ஓரளவேனும் பூர்த்தி செய்யக் கூடியதுமான கிராமியச் சூழல் கணபதிபிள்ளைக்கு இளமை பருவத்தைச் செம்மைப் படுத்தியிருந்தது.

இத்தகைய கிராமியச், சைவத் தமிழ்ப் பண்பாட்டுச் சூழலில் பதினெட்டு ஆண்டு முன்பள்ளிப் படிப்பின் பின்னர் 1917 ஆம் ஆண்டு கார்த்திகை மாதத்திலிருந்து வண்ணார்பண்ணை நாவலர் காவிய பாடசாலையில் மாணவனாகச் சேர்ந்து சைவத் தமிழ் மரபுக் கல்வியைக் கற்கும் மாணவனாகச் சேர்ந்து சைவத் தமிழ் மரபுக் கல்வியைக் கற்கும் வாய்ப்பு கணபதிப்பிள்ளைக்கு கிடைத்தது. நாவலர் ஞானபரம்பரையின் ஞானக்கொழுந்தாக உருவாவதற்குக் கால்கோள் இடப்பட்டது. சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர், நாவலரின் தமையனார் மகன் ஸ்ரீமத். த. கைலாசப்பிள்ளை, வித்துவான் சுப்பையாபிள்ளை ஆகியோரிடம் கற்கவேண்டியவற்றைக் கசடறக் கற்றார். சுன்னாகம் குமாரசுவாமிப்

புலவர் நாவலரின் நேரடிக் செல்வாக்கிற்கு உட்பட்டு நாவலரின் கொள்கைகளை நன்கு உணர்ந்து கொண்டவர். அத்துடன் சி. வை. தாமோதரம்பிள்ளை, வித்துவசிரோமணி பொன்னம்பலம்பிள்ளை ஆகியோருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர். வித்துவ சிரோன்மணி பொன்னம்பலம்பிள்ளை இலக்கியரசனையிலே மிக்க புலமைபெற்று விளங்கினார். இவர்கள் யாபேரினதும் செல்வாக்கிற்குட்பட்ட கணபதிப்பிள்ளை, காவிய பாடசாலையில் பெற்ற கல்வி அனுபவங்களால் நாவலரின் சைவத் தமிழ்ப் பேரியக்கத்தின் இருபதாம் நூற்றாண்டுக் காவலராகவும், அவரின் ஞானபரம்பரையைத் தொடரவைப்பதில் முக்கிய இயக்குனராகவும் விளங்குவதற்கு வேண்டிய தகைமைகளைப் பெற்றார்.

1926 ஆம் ஆண்டு. மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் பரீட்சைக்குத் தோற்றிச் சித்திபெற்று பண்டிதர் பட்டத்தையும் பெற்றார் கணபதிப்பிள்ளை.

இவையனைத்தும் செந்தமிழின் மரபினையும் பழைமையினையும், இலக்கண இலக்கிய வளத்தையும் அறிந்துகொள்ளக் கணபதிப்பிள்ளைக்கு உதவியது. இலக்கிய இரசனையையும் நன்கு வளர்த்துக் கொண்டார். அத்தோடு ஈழமண்டலத்துப் புலவர்கள் சரித்திரங்களையும் பேராசான் குமாரசுவாமிப்புலவர் அவர்களிடம் பாடங் கேட்கும் போதெல்லாம் அவர் சொல்லக் கேட்டறிந்து அவர்கள் மீது பற்றும் பாசமும் கொள்ளத் தொடங்கினார். இதனால் பின்னர் பல தடவைகள் இவர்களின் உண்மை வரலாறுகளை நிலைநாட்டும் பொருட்டு அவற்றை இருட்டடித்தவர்களுக்கு எதிராகப் போர்க் கொடி தூக்கவும், கண்டனக்குரல் எழுப்பவும் நேர்ந்தது.

காவிய பாடசாலையில் கற்ற காலத்தில் இலங்கையில் ஆங்கிலக் கல்விமுறை நன்கு வேரூன்றி விட்டது. இந்துக் கல்லூரிச் சபை போன்ற சைவக் கல்வி நிறுவனங்களும், பாடசாலைகளை நிறுவி ஆங்கிலக் கல்விமுறையை ஒட்டிய கல்வியையே அளித்து வந்தன. இந்தநிலையில் இக்கல்வியைக் கற்றவர்களே நாகரீகமானவர்கள். என்றும் கற்றறிந்தோர் என்றும், சமூகத்தின் உயர் குழாத்தினர் என்றும் கொள்ளப்பட்டனர்.

கல்வி அதியுயர்ந்த பணப்பெறுமதியைப் பெற்ற காலம் அது. இந்நிலையில் பண்புப் பெறுமதியும், மனித விழுமியங்களையும் வழங்கிவந்த தமிழ்ப் பாரம்பரியக் கல்வி புறக்கணிப்புக்குள்ளானது. நாவலர் பெருமான் கல்வி மறுமலர்ச்சி வேண்டிச் செய்த தவமும் தானமும் எங்கே அவமாகி விடுமோ என்று அஞ்சப்பட்ட காலம். எனவே பண்டிதமணிக்கு நன்கு சிந்தித்துச் செயற்படவேண்டிய நிலை ஏற்பட்டது.

நாவலர் பணியாற்றிய காலச் சூழ்நிலை வேறு, பண்டிதமணி பணியாற்றிய எதிர்நோக்கிய காலச்சூழ்நிலை வேறு. கால உணர்வையும், பெருகிவரும் அறிவு வளத்தையும் கருத்திற் கொள்ளாமல் இருக்க முடியாது. அதே வேளை நாவலரின் சைவத் தமிழ் மறுமலர்ச்சிப் பணிகளையும், புதிய உத்திகளையும் கையாளும் திறன்களைப் பெற்றுக் கொள்ளத் தன்னைத் தயார் செய்யும் காலமாக அவர் வாழ்வின் அடுத்த கட்டம் ஒன்று உருவாயிற்று.

நாவலர் காவிய பாடசாலையில் பண்டிதமணி கற்றுக் கொண்டிருந்த காலத்திலும். அதற்குப் பின்னரும், ஆங்கிலக் கல்விமுறையில் அறிவியல் நூல்களும், இலக்கிய நூல்களும் கற்றவர்கள், அதேவேளை தமிழ் ஆர்வலர்களாகவும் விளங்கியவர்கள் சிலரும் பண்டிதமணியும் திருநெல்வேலியில் உள்ள வளவில் ஈரப்பலா மரம் ஒன்றின் கீழ் அவ்வப்போது கூடி சைவமும் தமிழும் பற்றியும், ஆங்கிலக் கல்லூரி அனுபவங்கள், அறிவியல் தொடர்பாகவும், மேலைத்தேய கீழைத்தேய தத்துவம் இலக்கியம் பற்றியும் ஆழமான கருத்துப் பரிவர்த்தனைகள் நடாத்தி வந்தார்கள். இதனை "ஈரப்பலா சங்கம்" என்றழைத்தனர். இந்த முறைசாராத அமைப்பில் கலாநிதி கு. சிவப்பிரகாசம், பட்டதாரிகளான மட்டுவில் வே. நடராசா, பொ. கைலாசபதி, தென்மராட்சி நடராசா, வைத்தியலிங்கம் போன்றோருடன் பண்டிதமணியும் இடம் பெற்றிருந்தார். பண்டிதமணி புதியனவற்றில் நாட்டம் செலுத்தும் பண்பினைப் பெறுவதற்கும், தனது அறிவு எல்லையை தமிழ் வட்டத்திற்கு அப்பாலும் நீடித்துக்கொள்வதற்கும் ஈரப்பலாச் சங்கம் தகுந்த களம் ஒன்றினை அமைத்துக்கொடுத்தது,

பண்டிதமணி தனது கேள்வி ஞானத்தை விருத்தி செய்து கொண்டார். செல்வத்துள் எல்லாம் தலையாயது செவிச்செல்வம். பண்டிதமணியின் புலமைக்கும் புகழுக்கும் இது பேருதவியாக இருந்தது.

பண்டிதராக இருந்தால் மட்டும் ஆசிரியர் வேலை கிடைத்துவிடாது, எனவே ஆசிரிய பயிற்சித்தராதரப் பத்திரம் பண்டிதமணிக்கு ஆசிரியத் தொழில் பெறுவதற்குக் தேவைப்பட்டது. கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலையில் 1927 ஆம் ஆண்டிற் சேர்ந்து இரண்டு ஆண்டுகள் பயிற்சி பெற்றார். ஆசிரிய பயிற்சித் தராதரப்பத்திரம் கறிக்குத் தாளிதம் போல, பண்டிதர், புலவர், வித்துவான் என்றிருந்தவர்களுக்குச் சிறப்புச் செய்தது என்று பண்டிதமணி நகைச்சுவையுடன் கூறுவார்.

1929 ஆண்டு பண்டிதமணி அவர்கள் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் தமிழ் விரிவுரையாளர் ஆனார். தொடர்ந்து முப்பது ஆண்டுக்காலம் இப்பதவியை அலங்கரித்தார். இக்கலாசாலையில் ஆசிரியப் பயிற்சி பெற்ற ஆயிரக்கணக்கானோர்க்கு இவர் "குருமணி" யாக அமர்ந்து அவர்களினால் அன்பாகப் "பண்டிதரையா" என அழைக்கப்பட்டு வந்தார். பண்டிதரையா சைவத்தமிழ்ப் பேரியக்கத்தின் காவலராகத் திருநெல்வேலியில் வீற்றிருந்து உருவாக்கிய சைவத் தமிழ் ஆசிரியச் செம்மல்கள் இலங்கையின் பல பாகங்களிலும் உள்ள சைவப் பாடசாலைகளிலும், இந்துக் கல்லூரிகளிலும் நல்லாசிரியர்களாக அமர்ந்து அறிவோடு, சைவத்தமிழ்ப் பண்பபாட்டையும், அறங்களையும் பரப்பினார்கள். நாவலர் ஞானப்பரம்பரை பண்டிதமணியின் தலைமையில், பண்புரீதியாகவும், தொகைரீதியாகவும் பெருவளர்ச்சி கண்டது.

சைவாசிரிய கலாசாலையில் பண்டிதமணி பணியாற்றிய காலத்தில் மூவருடன் மிக நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்தார். பண்டிதமணியின் இலட்சியப்பணிகளுக்கு இத்தொடர்புகள் வலுவையும் வனப்பையும் தந்தன. இக்கூட்டு அணி நீண்டதொரு காலப்பகுதிக்கு நிலைபெற்றிருந்திருக்குமேயானால், அதன் சாதனைகள் பலவற்றின் காத்திரமான நிலைகளைத்

தமிழ்மக்கள் கண்டும், அவற்றின் பயன்களை அநுபவித்தும் கொண்டிருப்பார்கள். ஆனால் காத்திராபிரகாரமாகக் குறிப்பிட்ட குறுகிய காலத்தின் பின்னர் அது தளர்ச்சி கண்டது தமிழ் மக்களின் துர்ப்பாக்கியம் போலும். சைவாசிரிய கலாசாலை அதிபர் மயிலிட்டி சி. சுவாமிநாதன், உப அதிபர் பொ. கைலாசபதி, சைவாசிரிய கலாசாலையையும் அநேக சைவப் பாடசாலைகளையும் நிறுவி நிர்வாகித்து வந்த சைவவித்தியா விருத்திச் சங்க முகாமையாளர் சு. இராசரத்தினம் ஆகியோர் இந்த மூவரும் ஆவார். பண்டிதமணி சைவாசிரியர் கலாசாலையில் பணிபுரிந்த தொடக்க காலங்களில் இலக்கியரசனையில் கூடிய ஈடுபாடு கொண்டிருந்தார். கம்பராமாயண அவரைப் பெரிதும் கவர்ந்திருந்தது. தனது இரசனையை கட்டுரைகள், உரைகள் வாயிலாக வெளியுலகிற்கு வெளிப்படுத்தினார். இலக்கியச் சர்ச்சைகள் பலவும் நடைபெற்றன. நாவலர் பரம்பரைக்கு ஏற்ப இலக்கியத்தின் அற அடிப்படையை மிகவும் அழுத்தி வந்தார் பண்டிதமணி. இந்த அடிப்படையில் “நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்” பண்டிதமணியின் நெஞ்சத்தைத் தொட்டுக் கொள்ள முடியவில்லை.

இந்தக் காலப்பகுதியில் பண்டிதமணி பங்கேற்றுப் பணியாற்றிய மூன்று அமைப்புக்கள் அவரின் பங்களிப்பினால் பரிமளிப்புப் பெற்றன. இவற்றுள் ஒன்ற 1931 ஆம் ஆண்டளவில், அறிஞர்களும், கல்விமான்களும், கலைஞர்களும் ஒன்றிணைந்து வண்ணார்பண்ணையில் நிறுவிய கலாநிலையம் இதனை ஆரம்பிப்பதில் கலைப்புலவர் க. நவரத்தினம் முன்னோடியாக இருந்து அதன் செயலாளராகவும் விளங்கினார். கலையாக்கங்கருதி ஆரம்பித்த இக்கற்றோர் பேரவையில் இலக்கியம், இலக்கணம், தத்துவம், பௌதிகவிஞ்ஞானம், வரலாறு, ஓவியம், நாகரீகம் ஆகிய துறைகளில் பாரதமும், இலங்கையும் அடைந்த பேறுகள் தொடர்பான ஆய்வுகள், விளக்கங்கள், விரிவுரைகள் நடைபெற்றன. திரு. சு. நடேசன் சுவாமி விபுலானந்தர் உள்ளிட்ட பல பெரியார்கள் அங்கம்வகித்தனர். பண்டிதமணி கலாநிலையத் தொடர்பினால் இலக்கியதுறையிலும் கலைத்துறையிலும் பல புதிய அனுபவங்களைப் பெற்றுக்கொண்டார்.

பண்டிதமணி, யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கச் செயற்பாடுகளிலும் முன்னின்று உழைத்தவர். கல்வித்திணைக்களத்தின் அநுசரணையுடன் இயங்கிய இச்சங்கம் வடமொழி, தமிழ் மொழி ஆகியவற்றின் விருத்தியின் பொருட்டுப் பணியாற்றியது. பிரவேச பண்டிதர், பாலபண்டிதர், பண்டிதர். பரீட்சைகளை நடாத்திப் பட்டங்கள் வழங்கி வந்தது. இதன் தொடர்பாகப்பண்டிதமணி திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை வளாகத்தில் காவிய பாடசாலையொன்றைப் பன்னிரெண்டாண்டுகள் 1935 ஆம் ஆண்டிலிருந்து நடாத்தி வந்தார். தமிழ், சமஸ்கிருதம், சிங்களம் ஆகிய மும்மொழிகளும் போதிக்கப்பட்டன. பண்டிதமணியின் ஒருமைப்பாடு பற்றிய தீர்க்கதரிசனச் சிந்தையை இதிலிருந்து உணரமுடிகின்றது. இத்துறைகளில் பாலபண்டித, பண்டித உயர்தகைமைச் சான்றிதழ்கள் பெற்றுக் கொள்வதற்கு மாணவர்கள் ஆயத்தப்படுத்தப்பட்டனர்.

பண்டிதமணியின் தமிழ்மரபு வழிக் கல்விச் சிந்தனையையும், சைவசித்தாந்த மரபுச் சிந்தனையையும் செயற்படுத்துவதற்கும், நாவலரின் சைவத்தமிழ்ப் பேரியக்கத்தை நடத்திச் செல்வதற்கும், இவற்றிலிருந்து பொங்கி யெழுந்த புதுமைகளைச் செய்து பார்ப்பதற்கும் சைவவித்தியா விருத்திச் சங்கம் அதன் வரலாற்றின் முதற்காலகட்டத்தில் பண்டிதமணிக்கு இடமளித்தது. சைவப் பெரியார் சு. இராசரத்தினம் அதன் முகாமையாளராகி நாவலருக்குப்பின் நமக்கொரு காவலர் அதனை இயக்கிவந்தார். திரு. இராசரத்தினம் என்று பண்டிதமணியால் போற்றப்பட்டவர். ஊர்கள் தோறும் சைவப்பாடசாலைகள் நிறுவப்பட்டன. சைவப் பிள்ளைகள் சைவச் சூழலில் கல்விகற்கவேண்டும் என்ற கொள்கை ஒரு பேரெழுச்சியாக உருவெடுத்தது. சங்கத்தின் கல்விப்பணி மகத்தான சாதனைகள் ஆகின. திருநெல்வேலியில் சைவ அநாதைசாலை நிறுவி நடாத்தப்பட்டது. மும்மொழிக் காவிய பாடசாலை வீறு நடைபோட்டது. இவற்றிற்கெல்லாம் அச்சாணியாகவும், ஆன்மீக மூச்சாகாவும் விளங்கியவர் பண்டிதமணி. சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் நோக்கம், “மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்” என்பதே. சைவநீதியும் தமிழ்நீதியும் ஒன்றுதான், வேறல்ல இந்த நிலையில் சைவம் எனும் பரந்த, விரிந்த, ஆழ்ந்த பரப்பினை ஓரளவிற்கேனும்

அறிந்து கொள்ள வேண்டிய தேவை பண்டிதமணிக்கு ஏற்பட்டது. இத்தேவை நிறைவு செய்யும் முயற்சியில் அவரின் வாழ்க்கை நோக்கிலும் போக்கிலும் கூடத் திருப்பம் ஏற்பட்டது. நாவலர் காவிய பாடசாலையில் புலவரிடம் கற்ற கல்வி, தமிழ் இலக்கிய இலக்கணநூற்புலமை, இலக்கியரசனை, கண்டனக்கலை, அறவொழுக்கம், கந்தபுராண கலாசாரம், ஈழத்தமிழ்ப் புலவர் சரித்திர ஆர்வம் ஆகியவற்றைப் பண்டிதமணியிடம் வளர்த்தது. அதன் பின்னர் பெற்ற மேற்கத்தைய இலக்கிய, கலை அனுபவங்கள் பண்டிதமணியைப் புதுமையில் நாட்டங்கொள்ளச் செய்தன. பண்டிதர்கள் என்றாலே ஒருவகைத் தனிப்போக்கு உள்ளவர்கள், பழைமைவாதிகள், உலகத்துடன் உடன் போக்கு அற்றவர்கள் என்ற எண்ணத்தை மாற்றியமைத்துப் பண்டிதர் குலத்திற்கு ஒரு புதிய நோக்கினையும், புதிய பார்வையையும் ஏற்படுத்தியவர்.

உப அதிபர் பொ. கைலாசபதியின் நேரடி ஆட்கொள்ளலின் கீழ் பண்டிதமணி வந்தபின்னரே, நீண்டகாலத் தேவையாக இருந்து வந்த சைவசித்தாந்தம், சைவ மெய்யியல் பற்றி ஐயம் திரிபற அறிந்து கொள்ளல் நிறைவு பெறக் கைகூடியது. மிகச் சுருக்கமாகவும் சூசகமாகவும் கைலாசபதி வழங்கிய சைவசித்தாந்த கோட்பாடுகளை, ஓரளவிற்கு விளங்கிக் கொண்டு, அவற்றைப் பண்டிதமணி தனது நடையிலே பேச்சுக்களாகவும், கட்டுரைகளாகவும் ஏனையோர் விளங்கிக் கொள்ளுமாறு வெளியிட்டு வந்தார்கள். இப்பணிகளுக்கு இலங்கை வானொலியும், தினகரன் முதலிய பத்திரிகைகளும் பண்டிதமணிக்குக் கைகொடுத்தன. பின்னர் இவற்றைத் தொகுத்துப் பல நூல்களாக பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையினர் வெளியிட்டனர். இதற்கு மாபெரும் உந்து சக்தியாக விளங்கியவர் பண்டிதமணியின் உத்தம மாணாக்கர், பண்டிதமணியின் அருகிலிருந்து எஞ்ஞான்றும் பணி விடைகள் புரிந்த பெருமைக்குரியவருமான உரும்பராய் ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் அவர்கள் ஆவர்.

1951 இல் பரமேஸ்வரக் கல்லூரியில் நடைபெற்ற தமிழ் விழாவில் இந்திய இலங்கை அறிஞர்கள் மத்தியில் அவர் ஆற்றிய காத்திரமான உரை, அன்னாரின் தமிழ் இலக்கிய அறிவும், சைவசித்தாந்த அறிவும் சங்கமித்த நிலையின் வெளிப்படாக

அமைந்தது. பண்டிதர் கணபதிப்பிள்ளை, பண்டிதமணி ஆனார். பண்டிதமணி, உப-அதிபர் கைலாசபதியின் ஆட்கொள்ளலின் பின்னர், சமயத்தை இலக்கியமாகவும், இலக்கியத்தைச் சமயமாகவும் நோக்கும் மாற்றத்தினைப் பெற்றார். அவர் விரும்பி எழுதி வெளியிட்ட நூல் ஆகிய "தக்ஷகாண்ட உரை" பண்டிதமணியின் நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதாக விளங்குகிறது. இலங்கைப் பல்கலைக்கழகமட்டத்தில் பண்டிதமணிக்குப் புகழையும், கணிப்பையும் ஏற்படுத்தித் தந்தது இந்நூல். *1978* ஆம் ஆண்டில் பண்டிதமணிக்கு இலக்கிய கலாநிதிப்பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. அப்பொழுது காவிய பாடசாலையில் பண்டிதமணியுடன் உடன் மாணாக்கராயிருந்த மட்டக்களப்புப் புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை, இதனைப் பெரிதும் வரவேற்று, கலாநிதிப்பட்டம் பண்டிதமணியை அடைந்ததால் அது தனக்கே ஒரு மதிப்பைப் பெற்றுள்ளது என்றார்.

இலக்கிய கலாநிதிப்பட்டத்தைப் பண்டிதமணிக்கு வழங்குமாறு கேட்டு, அவர்பற்றி ஆற்றிய அறிமுக உரையில் பேராசிரியர் சு. வித்தியானந்தன், அவரை முழுமையாகப் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

எண்பத்தாறு வருடங்கள் நைட்டிகப் பிரமச்சாரியாக செம்மை வாழ்வு வாழ்ந்து சைவமும் தமிழும் தழைக்கத் தொண்டுகள் பல புரிந்து, *1986* ஆம் ஆண்டு மார்ச் மாதம் பதின்மூன்றாம் நாள் ஈசன் எந்தை இணையடி நிழலை அடையும் பேற்றினைப் பண்டிதமணி ஐயா பெற்றார்.

# 8. பண்டிதமணி, இலக்கிய கலாநிதி
# சி. கணபதிபிள்ளை

சற்று ஏறக்குறைய ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையைப் போர்த்துக்கேயர் என்னும் பறங்கியர் அரசாண்ட காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து பறங்கித் தலைவன் தானும், தனது பரிவாரமும் உண்ணுவதற்கு ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வீட்டாரும், ஒவ்வொரு பசுவை முறை தவறாது கொண்டு வந்து கொடுக்க வேண்டுமென கட்டளை பிறப்பித்தான். பசுவை கோமாதா என அழைத்துத் தெய்வமாகப் போற்றுபவர்கள் சைவமக்கள். படைத்தலைவனின் கட்டளைக்கு எப்படி ஒருப்படுவர். என்ன கொடுமை என்று மனம் வருந்தினர். பசுவை கொல்லுதல், அதிமகா பாதகம் என்று எடுத்துரைத்தனர். கட்டளை கட்டளைதான் என்று கூறிவிட்டார்கள். இக் கொடுங்கோன்மைக்குத் தீர்வு காண பசுக்கொலைக்கஞ்சிப் பாரததேசம் போனவர் தான் யாழ்ப்பாணம் திருநெல்வேலி ஞானப்பிரகாசர். சிதம்பரம் சென்ற ஞானப்பிரகாசர் தேவிசந்நிதியிலே நாற்பது நாள் உபவாசமிருந்து கடும் தவம் புரிந்தார். தேவியின் அனுக்கிரகம் கிடைத்தது. வடதேசம் சென்று தக்க குருவிடம் வேதாகமம் சாஸ்திரங்களை கற்றார். பின்னர் திருவண்ணாமலை ஆதீனத்தில் காஷாயம் பெற்று முற்றும் துறந்த முனிவராயினார். ஞானப்பிரகாசரின் தவ வலிமையால் போர்த்துக்கேயரதும் ஒல்லாந்தரதும் ஆட்சிகள் ஒடுங்கின. ஆங்கிலேய அரசு இலங்கையில் நிலவிய காலத்தில் ஞானப்பிரகாச முனிவர் மரபில், முனிவரின் தவம் முழுவதும் திரண்டு உதயம் செய்தது போல் ஞானபானுவாக, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் யாழ்ப்பாணத்து நல்லூரில் 1822ஆம் ஆண்டு உதயமாயினர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சைவத்தமிழ் இயக்கத்திற்குத் தலைமை தாங்கி சென்ற நூற்றாண்டிலே தமிழ் நாட்டிலும், இலங்கையிலும் நமது சமயத்தின் ஏகப்பிரதிநிதியாய் விளங்கினார். தனிமனித இயக்கமாகச் செயற்பட்டு, சைவத்திற்கும், தமிழுக்கும் மரபு தமிழ்க் கல்விக்கும் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். நாவலருக்கு பின் நாவலர் ஞானப்பரம்பரை தோன்றியது. நாவலரின் பணிகளை அப்பரம்பரையினர் பதிவிரதா தர்மத்துடன் தொடர்ந்தனர். இலக்கிய இலக்கண நூற்புலமை, சைவசித்தாந்த சாத்திரப்புலமை, மரபுத் தமிழ் கல்விப்பணி, சைவசமய பிரசாரம், நூல் வெளியீடு, அருட்பாக்

கோட்பாடு, ஈழத்துத் தமிழ்புலவர்களை வெளிச்சத்திற்கு கொண்டு வருதல் என்பன நாவலர் ஞானப்பரம்பரையின் இலட்சணங்கள். நாவலர் பரம்பரையில் வந்தவர்களென இனங்கண்டு கொள்ளப்பட்டவர்களுள் பின்வருவோர் குறிப்பிடத்தக்கவர்கள். நல்லூர் க. சதாசிவம்பிள்ளை - இவரே அவரின் முதற் மாணாக்கர், த. கைலாசப்பிள்ளை - நாவலரின் தமையனார் தம்பு என்பவரின் மகன், வித்துவசிரோமணி ச. பொன்னம்பலபிள்ளை - நாவலரின் மருகர், வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை முதலுபாத்தியர் மா. வைத்தியலிங்கம், நாவலர் காவிய பாடசாலை முதலுபாத்தியாயர், சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர், மாதகல் ஏரம்பையர், மு. தில்லைநாதபிள்ளை, மட்டுவில் க. வேற்பிள்ளை - இவர் சிதம்பரம் சைவப்பிரகாசவித்தியாசாலைத் தலைமை உபாத்தியாயரும் உரையாசிரியரும் ஆவார். புலோலி வ. குமாரசுவாமிப்புலவர், நீர்வேலி ச. சிவப்பிரகாச பண்டிதர்: இணுவில் நடராசையர், வேலணை வி. கந்தப்பிள்ளை, குப்பிழான் சி. செந்திசாதையர், கொக்குவில் ச. சபாரத்தினமுதலியார், நல்லூர் வை. திருஞானசம்பந்தப்பிள்ளை, ஆவரங்கால் சு. நமசிவாயப்புலவர். நாவலர் பரம்பரையிலே இருபதாம் நூற்றாண்டில் சிறப்பிடம் பெறுபவர்களாக மேலைப்புலோலி நா. கதிரவேற்பிள்ளை, காரைத்தீவு ச. அருணாசல உபாத்தியாயர், சித்தங்கேணி ஆ. அம்பலவாண நாவலர், வண்ணை சி. சுவாமிநாத பண்டிதர்: உப-அதிபர் பொ. கைலாசபதி, புலோலி சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம்பிள்ளை, பண்டிதமணி சி. கணபதிபிள்ளை முதலியோர் குறிப்பிடப்பட வேண்டியவர்கள்.

பண்டிதமணி சி. கணபதிபிள்ளை வரை நாவலர் ஞானபரம்பரை தளம்பலில்லாமல் தொடர்ந்து வந்துள்ளது.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்."

என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. நாவலர் தக்கார் என்பதை அவரது எச்சம் ஆகிய ஞானப்பரம்பரையினர் எடுத்துக் காட்டியுள்ளனரன்றோ.

சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர் மறைந்ததும் நாவலர் பரம்பரை அவருடன் மறைந்து விடுமோ என அஞ்சினர் பலர்.

பண்டிதமணி சி.கணபதிபிள்ளை அவர்கள் அந்த அச்சத்தை போக்கி விட்டார். பண்டிதமணி அவர்கள் நாவலர் பரம்பரையைத் தொடர வைத்தார். அப்பரம்பரையின் இருபதாம் நூற்றாண்டுக் காவலராக பண்டிதமணி விளங்கினார் என்றால் அது மிகையாகாது. பண்டிதமணி ஈழத்து இலக்கிய வழி தொடர்பாகவும், நாவலர் பரம்பரையினர் சார்பாகவும் பலமுறை போர்க்கொடி தூக்கிய பெருமைக்கு உரியவர்.

நாவலர் பரம்பரையில் வந்த வித்துவசிரோன்மணி பொன்னம்பலபிள்ளை இலக்கிய இரசனையியல் மிக்க வித்துவமுடையவராகத் திகழ்ந்தார். அவரையே பண்டிதமணி இலக்கிய இரசனைத்துறையில் இலட்சிய புருடராகக் கொண்டார். சுன்னை குமாரசுவாமிப்புலவர், மானேஜர் த.கைலாசபிள்ளை ஆகிய இருநாவலர் பரம்பரைப் பிரதானிகளின் செல்வாக்கிற்குள் புடம் போடப்பட்டு, நாவலர் பரம்பரையின் உறுப்பினர் ஆவதற்கு முழுத்தகைமையையும் தகுதிப்பாட்டையும் பெற்றுக் கொண்டவர் பண்டிதமணி.

பண்டிதமணி அவர்கள், நாவலர் பரம்பரையை ஆல்போல் தழைத்து,அறுகுபோல் வேரூன்றி, மேலும் தழைத்தோங்க செய்தார். அதற்குத் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை களமாக விளங்கிற்று. அவரால் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக உருவாக்கப் பெற்ற ஆயிரக்கணக்கான ஆசிரியமணிகள் நாவலர் பரம்பரை தொடர்வதற்கு அச்சாணியாக விளங்கினர். பண்டிதமணியின் மாணவரும், மாணவரின் மாணவரும் நாவலர் பரம்பரையைத் தொடர்வார்கள் என்பதில் ஐயமில்லை.

பண்டிதமணி, இலக்கிய கலாநிதி, நாவலர் ஞானபரம்பரையின் காவலர் என்றெல்லாம் போற்றிப் புகழப்படுகின்ற சி. கணபதிபிள்ளையின் வரலாற்றையும் அவர் ஆற்றிய பணிகளையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டாமா? ஆம். இலங்கையின் திலகமாக விளங்குகின்ற யாழ்ப்பாணம் செந்தமிழ் வழங்கும் சிவபூமி. யாழ்ப்பாணத்தில் நிலவளம், கல்வி வளம், பண்பாட்டு வளம், பக்தி வளம், அன்பு வளம், அற வளம் என்பன மிகுந்த பகுதி தென்மராட்சிப் பிரிவு. மட்டுவில், தனங்கிளப்பு எனும் சான்றோர் வாழும் ஊர்கள் இரண்டு தென்மராட்சிப் பகுதியில் உள்ளன. மட்டுவிலைச் சேர்ந்த, தருமர் என்று அன்போடு

அழைக்கப்பட்ட சின்னத்தம்பியார், தனங்கிளப்பு முருகர் மகளான வள்ளியம்மையை மணந்து இல்லறமாம் நல்லறத்தை நடத்தி வந்தார். எனினும் புத்திர பாக்கியம் இல்லையே என்ற குறை அவர்களைப் பெரிதும் வாட்டியது. தனங்கிளப்பில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள குலதெய்வமாகிய காரைத்தூ விநாயகரிடம் தம் குறையை முறையிட்டு விரதம் அனுட்டித்தனர். விநாயகர் அருளால் 1899ஆம் ஆண்டு யூன் மாதம் இருபத்தேழாந் திகதி - ஆனி 14ம் நாள் - செவ்வாய்கிழமை இரவு 11மணியளவில், சதய நட்சத்திரத்தில் வள்ளியம்மையார் ஓர் ஆண் மகவைப் பெற்றெடுத்தார். கணபதியின் திருவருளால் பிறந்த பிள்ளைக்கு கணபதிபிள்ளை என்று பெற்றோர் பெயரிட்டழைத்தனர். அவரே சைவமும் தமிழும் தழைக்கவும், நாவலர் ஞானப்பரம்பரையைத் தொடரவும் அவதரித்த பண்டிதமணி இலக்கிய கலாநிதி சி.கணபதிபிள்ளை ஆவர்.

1902ஆம் ஆண்டு ஒருநாள், குழந்தை கணபதிபிள்ளையின் தாயார் காலமானார். தாய்க்கு முப்பது வயது, தந்தைக்கு முப்பத்தேழு வயது. குழந்தைக்கோ மூன்று வயது கூட நிரம்பவில்லை. அறியாப் பருவம். சின்னத்தம்பியே குழந்தைக்குத் தந்தையும் தாயுமானார். கணபதிபிள்ளைக்குப் பள்ளி செல்லும் பராயம் வந்ததும் தற்போது மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாசாலை என வழங்கும் அப்போதைய அமெரிக்கன்மிசன் பாடசாலையில் வித்தியாரம்பம் செய்யப்பட்டது. இக்காலப்பகுதியில் அவரின் உறவினரான உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளையின் குடும்பத்தினருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பேற்பட்டது. ம.க.வேற்பிள்ளையின் மகன் மகாலிங்கசிவம் சின்னஞ்சிறு இலக்கியக்கதை, கவிதை என இனிக்க இனிக்க சொல்லிக் கொடுப்பார்.

1912ஆம் ஆண்டில் தந்தையார் சின்னத்தம்பியார் கணபதிபிள்ளையையும் அழைத்துக் கொண்டு மட்டுவிலை விட்டு நீங்கி தனங்கிளப்பிள் குடியேறி அங்கு வாழ்ந்தார். அத்துடன் முறைசார்ந்த பாடசாலைப்படிப்பு ஐந்தாந் தரத்தோடு கணபதிபிள்ளைக்கு நிறைவு பெற்றது. எனினும் முறைசாராக் கல்வி தொடர்ந்தது. சாவகச்சேரியில் வாழ்ந்த பொன்னம்பல புலவர், பொன்னையா உபாத்தியாயர், பொன்னப்பாபிள்ளை ஆகிய மூவரிடமும் தமிழிலக்கிய, இலக்கண பாடங் கேட்டார். இதற்கிடையில் தந்தைக்கு உதவியாக தனங்கிளப்பு வெளியில்

வயல்வேலை செய்வதிலும், மாட்டு வண்டிச் சவாரியிலும் மற்றைய நேரங்களில் தாயம் உருட்டுதல், சீட்டாடுவதிலும் கணபதிபிள்ளையின் காலம் கழிந்தது.

1917ஆம் ஆண்டு. இப்பொழுது கணபதிபிள்ளைக்கு வயது பதினெட்டு. தம்பிமுத்துப்பிள்ளை என்பவர் நல்லூரில் வியாபாரம் செய்து வந்தார். மட்டுவில் இவரது சொந்த ஊர். கணபதிபிள்ளை, தம்பிமுத்துப்பிள்ளையுடன் சென்று நல்லூரில் சப்பரம், தேர், தீர்த்தத் திருவிழாக்களைப் பார்த்து விட்டு வண்ணார்பண்ணை நாவலர் சந்திக்கருகாமையில் அமைந்த நாடகக் கொட்டகையில் இருவரும் நாடகம் பார்த்தார்கள். நாடகம் முடிய இரவு மூன்று மணியாயிற்று பக்கத்தில் ஒரு கட்டடம் இருந்தது. கொஞ்ச நேரம் படுத்துறங்கலாம் என அங்கு இருவரும் போய் தங்கினர். அப்பொழுது இதென்ன கட்டடம் என்று கணபதிபிள்ளை கேட்க, தம்பிமுத்துப்பிள்ளை "நாவலர் பாடசாலை" என்று பதிலளித்தார். அடுத்து நாவலர் இப்பவும் இருக்கிறாரா? என்று கணபதிபிள்ளை கேட்டார்.

ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? இது கணபதிபிள்ளைக்கு இப்பொழுதுதான் முதல் பட்டண பிரவேசம். பதினெட்டு வயது வரை கணபதிபிள்ளை நாவலரை பற்றிக் கேள்வி பட்டதேயில்லை. ஆச்சரியந்தான். நாவலர் பரம்பரையின் கொழுந்து எனப் போற்றப்படும் பண்டிதமணி கணபதிபிள்ளை தனது பதினெட்டாவது வயதிலேயே நாவலர் யாரென்பதை அறிந்து கொண்டார். நாவலர் இப்பவும் இருக்கிறாரா? என்ற தனது கேள்வி, கிறீஸ்தவ பாடசாலைப் பயன் என்று பண்டிதமணியே பின்னர் காலத்தில் சொல்லிச் சிரிப்பாராம். அன்று தான் தனக்கு ஒரு காலமும் இல்லாத ஆசை வந்தது என்று பண்டிதமணி கூறுவார். நாவலர் பாடசாலையில் தானுஞ் சேர்ந்து படிக்க வேண்டுமென்பதே அந்த ஆசை. பதினெட்டு வயதில் படிக்க வேண்டுமென்ற ஆசை பண்டிதமணிக்கு ஏற்பட்டது , தமிழ் மக்கள் செய்த தவப்பயனேயாகும்.

மட்டுவில் க. வேற்பிள்ளை உபாத்தியாயரின் மகன் வே.நடராசா என்பவரின் உதவியினால், நாவலர் காவிய பாடசாலையில் சேர்வதற்கான நேர்முகப் பரீட்சைக்கு கணபதிபிள்ளை தோன்றினார். அது நடந்தது 1917 கார்த்திகையில்

சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர் நேர்முகப் பரீட்சையை நடத்தினார். கணபதிபிள்ளை சேர்க்கப்பட்டார். நாவலர் காவிய பாடசாலையில், கணபதிபிள்ளையுடன் குருகுலவாசம் செய்து கற்றவர்கள் பலர். அவர்களுள் ஒருவர் தான் மட்டக்களப்பு புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை ஆவர். புகழேந்திக்கு பின்னர் வெண்பாவில் பெரியதம்பிப்பிள்ளை என்ற பெயர் நிலைத்தது.

நாவலர் காவிய பாடசாலையில் அறிஞர் திலகமாக அஞ்ஞான்று விளங்கிய சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவர் அவர்களே முதன்மை உபாத்தியாயர். ஸ்ரீமத் த.கைலாசபிள்ளை, பாடசாலையின் மானேஜர். கணபதிபிள்ளை நூல்களைக் கற்பதுடன் தமது ஆசிரியர், மற்றும் மானேஜர் ஆகியோரது ஆசாரசீலங்கள், பண்பாடுகள், பெரியவர்களோடு பேசும் மரபுகள், மற்றவர்களோடு பழகும் உத்திகள் , உயர்ந்த குணநலன்கள் என்பவற்றையும் கற்று அறிந்து கொண்டார்.

1922ஆம் ஆண்டில் புலவர் சிவபதம் எய்தினார். அந்த ஆண்டிலே, வித்துவான் ந.சுப்பையாபிள்ளை காவிய பாடசாலையில் ஆசிரியராக அமர்த்தப்பட்டார். அவர் இலக்கண, இலக்கியங்களில் மிகுந்த புலமை பெற்றிருந்தார். அவரிடம் கற்கும் வாய்ப்புக் கணபதிபிள்ளைக்குக் கிடைத்தது. வித்துவான் அவர்களின் உதவியால், கணபதிபிள்ளை 1926ஆம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் ஆனார். காவியப் பாடசாலையில் ஆசிரியராகவும் அமர்த்தப்பட்டார்.

1927இல் ஆசிரிய பயிற்சி பெறுவதற்காக கோப்பாய் ஆசிரிய பயிற்சி கல்லூரியில் கணபதிபிள்ளை சேர்ந்தார். பண்டிதராகி விட்டால் மட்டும் ஆசிரியர் வேலை கிடைத்து விடாது. ஆசிரியர் பயிற்சியும் பெற வேண்டும். ஆசிரிய பயிற்சித் தராதரப்பத்திரம், கறிக்கு தாளிதம் போல, பண்டிதர், வித்துவான் என்றிருந்தவர்களுக்குச் சிறப்புச் செய்தது. என்று பண்டிதமணி நகைச்சுவையுடன் கூறுவார்.

1929ஆம் ஆண்டு, சைவ வித்தியா விருத்திச் சங்கம், திருநெல்வேலியில் நடத்தி வந்த சைவாசிரியர் பயிற்சிக் கலாசாலையில், பண்டிதர் கணபதிபிள்ளை தமிழ் விரிவுரையாளராக நியமனம் பெற்றார். முப்பது ஆண்டுக்காலம் அங்கு சைவப்பணியும்,

தமிழ்ப் பணியும் ஆற்றினார். இக்கலாசாலையில் ஆசிரிய பயிற்சி பெற்ற ஆயிரக்கணக்கானோர் சைவத்தையும், தமிழ் இலக்கிய, இலக்கணங்களையும் முறையாகக் கற்றுத் தேறி நாடெங்கிலும் பரப்பினார்கள். நாவலர் ஞானபரம்பரை தொடர்ந்தது. சைவப் பண்பாடு மிளிர்ந்தது.

சைவாசிரிய கலாசாலையில் பண்டிதமணி பணியாற்றிய தொடக்க காலங்களில் மூவருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். கலாசாலையின் அதிபர் மயிலிட்டி சி. சுவாமிநாதன், உப-அதிபர் பொ. கைலாசபதி, சைவவித்தியா விருத்திச் சங்க முகாமையாளர் சு. இராசரத்தினம் என்பவர்களே அம்மூவரும்.

திரு. சு. இராசரத்தினம், "இந்து போர்ட்" இராசரத்தினம் எனச் சிறப்பாக அழைக்கப்பட்டவர். சைவத்தமிழ்க் கல்வி விருத்திக்கு அவர் ஆற்றிய சேவை அளப்பரியது. "நாவலருக்குப் பின் நமக்கோர் காவலர்" என இராசரத்தினம் அவர்கள், பண்டிதமணியால் பாராட்டப் பெற்றவர். உண்மையில் அவர் ஒரு செயல்வீரர் - கர்ம வீரர். பிள்ளைகள் சைவச் சூழலில் கல்வி கற்க வேண்டும் என்ற உந்துதலால் ஊர்கள் தோறும் சைவப் பாடசாலைகள் நிறுவப்பட்டன. ஒரு பேரெழுச்சி ஏற்பட்டது. திருநெல்வேலியில், சைவாசிரிய கலாசாலைக்குப் பக்கத்தில் சைவ அநாதை விடுதிச் சாலை நிறுவப்பட்டது. மும்மொழிக் காவிய பாடசாலையும் நடாத்தப்பட்டது. இவற்றிற்கெல்லாம் அச்சாணியாகவும், ஆன்மிக மூச்சாகவும் விளங்கினார் பண்டிதமணி.

பண்டிதமணி, முற்பகுதியில் இலக்கிய இரசனையில் அதிக அளவில் ஈடுபாடு கொண்டிருந்தார். கம்பராமாயணம் அவரைப் பெரிதுங்கவர்ந்த நூல். வித்துவசிரோமணி ச. பொன்னம்பலம்பிள்ளையின் செல்வாக்கே இதற்குக் காரணம். பண்டிதமணி தமது இரசனையை கட்டுரைகள், சொற்பொழிவுகள் வாயிலாக வெளியுலகிற்கு வெளிப்படுத்தி வந்தார். தினகரன் பத்திரிகையும் இலங்கை வானொலியும் களம் அமைத்துக் கொடுத்தன. சேக்கிழார் பெரியபுராணம், கம்பராமாயணம் என்றால் உயிர். அதே வேளை, சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி என்றால் வெறுப்பு. நாவலர் வழிக்கு ஏற்ப,

இலக்கியங்களை சமயம், அறம், ஆன்மிக அடிப்படையில் நின்று உரைத்துப் பார்ப்பவர் பண்டிதமணி.

உப அதிபர் கைலாசபதியின் நேரடி ஆட்கொள்ளலின் கீழ் பண்டிதமணி வந்த போதுதான், அவரின் நீண்ட காலத் தேவையாக இருந்து வந்த சைவ சித்தாந்தம் தொடர்பான ஐயங்கள், தீர்த்து கொள்ளப்பட ஏதுவாயிற்று. உப அதிபர் ஒரு சித்தர், மகா ஞானி, அதிஅற்புத விவேகி, மௌனத்தில் திளைத்தவர். அவர் கருவறையில் மூல மூர்த்தியாக வீற்றிருக்க, பண்டிதமணி எழுந்தருளியாக விளங்கித் திருவருளை எடுத்துச் சென்று பாலித்தவர். மிகச் சுருக்கமாகவும், சூசகமாகவும் கைலாசபதி வழங்கிய சைவசித்தாந்தக் கருத்துக்கள் பண்டிதமணியின் பார்வையில் புடம் போடப்பட்டு, எளிதில் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் வெளிப்படுத்தப்பட்டன.

பண்டிதமணியின் கருத்தும் நோக்கும் பின்னடியில் சமயத்தின்பால் ஈர்க்கப் பெற்றன. குறிப்பாகச் சைவசித்தாந்ததின் பால் ஆகும். கந்தபுராணம் தக்ஷகாண்டத்திற்கு உரையெழுத வேண்டுமென்ற பெருவிருப்பு ஏற்பட்டமை அதனாற்போலும்.

பண்டிதமணி பழைமையில் பற்றுவைக்கும் பண்பினையும், புதுமையில் நாட்டங்கொள்ளும் பாங்கினையும் ஒருங்கே பெற்றிருந்தார். நாவலர் பரம்பரையினருள் தனித்துவம் மிக்கவராக விளங்கியமைக்கு இதுவே காரணம்.

திருநெல்வேலிச் சிவன் கோயிலுக்கு அருகில் ஒரு தோட்டம். அங்கு ஓர் ஈரப்பலா மரம். அதன் கீழ், ஆங்கிலக் கல்விகற்றோர், விஞ்ஞானம், கணிதம், தத்துவம், ஆங்கில இலக்கியம் போன்ற துறைகளில் புலமை பெற்றோர், அடிக்கடி சந்தித்துத் தமது கருத்துக்களை பகிர்ந்து கொள்வர். கலாநிதி சிவப்பிரகாசம், பொ. கையிலாயபதி, மட்டுவில் வே. நடராசா போன்ற பல அறிஞர்கள் கலந்து கொள்வர். பண்டிதமணியும் அங்கு சென்று தமது அறிவைப் பெருக்கிக் கொண்டார். ஆங்கிலந் தெரியாத பண்டிதமணி, இவர்களின் கூட்டுறவால், கேள்விஞானம் மூலம் மேற்கத்தைய புதுமைகளையும் அறிந்து, ஆராய்ந்து பார்க்கவும், தமிழ்ப்பண்பாடு கலாசாரங்களுடன் ஒப்பிட்டு நோக்கவும் சந்தர்ப்பங்கள் அவருக்குக் கிடைத்தன.

கலைப்புலவர் நவரத்தினம், *1931* இல் ஆரம்பித்த கலாநிலையத்தின் மதிப்பிற்குரிய உறுப்பினராகப் பண்டிதமணி விளங்கினார். இலக்கியம், கலை, தத்துவஞானம், பௌதிக சாஸ்திரம், ஓவியம் ஆகிய துறைகளில் பாரமும் இலங்கையும் அடைந்த பேறுகளை ஆராய்தல். இந்நிலையத்தின் நோக்கம். பண்டிதமணி இவற்றில் உயிர்ப்புடன் பங்கு கொண்டு தனது பல்துறை அனுபவங்களைப் பெருக்கிக் கொண்டார். திரு. சு. நடேசன், சுவாமி விபுலாநந்தர் உட்படக் காத்திரம் கொண்ட பல அறிஞர்கள் அங்கம் வகித்தனர்.

பண்டிதமணி, யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கச் செயற்பாடுகளுடனும் சிரத்தையுடன் பங்குபற்றியவர். தமிழ்மொழி, வடமொழி விருத்தியை ஊக்குவித்து. பரீட்சைகளை நடத்திப் பிரவேச பண்டிதர், பாலபண்டிதர், பண்டிதர் பட்டங்களை வழங்கிவந்தது. இது தொடர்பாக, *1935* ஆம் ஆண்டிலிருந்து சைவாசிரிய கலாசாலை வளாகத்தில் காவிய பாடசாலை ஒன்றையும் நடத்தலானார். தமிழ், சமஸ்கிருதம், சிங்களம் ஆகிய மும்மொழிகளும் போதிக்கப்பட்டன. தேசிய ஒருமைப்பாடு பற்றிய பண்டிதமணியின் தீர்க்கதரிசனத்தை இதிலிருந்து உணரமுடிகின்றது. காலஞ்சென்ற கலாநிதி என். எம். பெரேரா அவர்களும். அவரது சகாக்களும் *1935* ஆம் ஆண்டில் ஒரு நாள் இக்காவிய பாடசாலையைத் தரிசித்து அங்கு நடைபெறும் இம்மும்மொழிப் போதனையை பெரிதும் பாராட்டினர், என்று பண்டிதமணி குறிப்பிட்டுள்ளார்.

மொழி, இலக்கியம், சமயம் என்பவற்றுடன் தொழிற்கல்வியையும் ஊக்குவித்தவர் பண்டிதமணி. இக்காவிய பாடசாலையில் நூல் நூற்றல், நெசவு, தோட்டச் செய்கைத் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டன.

*1951*இல் யாழ்ப்பாணம் பரமேஸ்வராக்கல்லூரியில் நடைபெற்ற தமிழ் விழாவில், இந்திய இலங்கை அறிஞர்கள் மத்தியில் அவர் ஆற்றிய உரை மிகவும் காத்திரமானது. தமிழறிவும், சைவசித்தாந்த அறிவும் சங்கமித்த நிலையின் வெளிப்பாடாக இருந்தது. பல சர்ச்சைகள் எழுந்தன. எனினும் பண்டிதர் கணபதிப்பிள்ளை பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஆயினமைக்கு இத்தமிழ் விழா கால்கோள் ஆயிற்று. தினகரன் ஆசிரியரும்

கல்கிப் பத்திரிகை ஆசிரியரும், ஏக காலத்தில் பண்டிதமணிப் பட்டத்தை வழங்கினர். அதுவே இன்றுவரை நிலைத்து விட்டது. தொடர்ந்தும் நிலைக்கும்.

பண்டிதமணி மிகச்சிறந்த சொற்பொழிவாளர். அவ்வாறே மிகச்சிறந்த கட்டுரை எழுத்தாளர் ஆகவும் மிளிர்ந்தவர். சமயம், இலக்கியம், தத்துவம் என்பன அவரது துறைகள். கட்டுரைகள் இருவகையாக அமைந்தன. பத்திரிகைகள், சஞ்சிகைகள், மலர்கள் என்பவற்றிற்கு எழுதியவை ஒரு வகை. பேச்சுக் கெனத் தயாரிக்கப்பட்டவை இன்னொரு வகை. பண்டிதமணியின் மொழிநடை எளிமையும் இனிமையும் நிறைந்த அழகிய நடை. அவரது எழுத்துக்கள் நூல்களாகத் தொகுக்கப் பெற்று வெளிவந்துள்ளன. பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை, நூல்களை வெளியிடும் பணியில் சிரத்தையோடு ஈடுபட்டது. அதன் செயலாளராக விளங்கும் ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் எமது பாராட்டுக்குரியவர்.

பண்டிதமணியின் இலக்கியப் பணிகளைக் கௌரவித்து 1978 இல் இலங்கைப் பல்கலைக்கழகம், அவருக்கு இலக்கிய கலாநிதிப்பட்டத்தை வழங்கிப் பெருமைகொண்டது.

எண்பத்தாறு வருடங்கள் இப்பூவுலகில் நைட்டிகப் பிரம்மச்சாரியாகச் செம்மை வாழ்வு வாழ்ந்து சைவமும் தமிழும் தழைக்கத் தொண்டுகள் பல புரிந்து, 1986 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பதின்மூன்றாந் திகதி ஈசன் எந்தை இணையடி நிழலை அடையும் பேற்றினைப் பண்டிதமணி ஐயா பெற்றார்.

# 9. நாவலர் வழியில் பண்டிதமணி போற்றிய கந்தபுராண கலாசாரம்: ஒரு கண்ணோட்டம்

அறிமுகம்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், பத்தொன்பதாம் நூற்றாண்டில் சைவ சமய மறுமலர்ச்சிக்கு அரும்பணியாற்றிய பெருமகனார் ஆவார். மூன்று நூற்றாண்டுக்கால அந்நிய ஏகாதிபத்திய ஆட்சிக் காலத்தில், நமது தாய்மொழி, சைவசமயம், கலாசாரம், பண்பாடு என்பன மங்கி மறைந்து போகும் நிலையில் இருந்த வேளை தக்க தருணத்தில் தோன்றி அவற்றை மீட்டு நமக்களித்தவர் நாவலர் பெருமான். அந்த வகையில் புராண படனம், எனும் அரும் பெரும் சைவக் கல்விக் கலையைத், "தனித்ததொரு முறையில் யௌவன தசையை அடையச் செய்து, உச்ச நிலையில் விளக்கமுறச் செய்தவர் நாவலர் பெருமான்" என்கிறார், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை. புராணங்கள் பதினெட்டு ஆகும். அவற்றுள் சிவபுராணம் பத்து. கந்தபுராணம் அவற்றுள் தலை சிறந்தது என்பது பெரியோர் கருத்து. தமிழில் கந்தபுராணம் பாடி அருளியவர் காஞ்சிபுர கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் ஆவார். "தருமம் என்றொரு பொருள் உளது", என்னும் விழுமிய உண்மையை மையப் பொருளாகக் கொண்ட கந்தபுராணம் யாழ்ப்பாண மக்களிடையே, கந்தபுராண கலாசாரமாகப் பரிணமித்து, அவர்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ, வழிப்படுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது.

## பண்டிதமணியின் ஆளுமை

பண்டிதமணி, இலக்கிய கலாநிதி சி. கணபதிப்பிள்ளை தமது புலமைத்திறன்களைப், பிரதானமாகச் சைவம், சைவசித்தாந்தம், தமிழர் சமூகமும் பண்பாடும், தமிழ் இலக்கிய இரசனை ஆகிய மூன்று துறைகளை மையப்படுத்தி வெளிப்படுத்தியுள்ளமை பற்றி அறிஞர்கள் கோடிட்டுக் காட்டியுள்ளனர்.

அவற்றுள் சைவசித்தாந்த உண்மைகளையும், பொருள் நுட்பங்களையும், சைவ தோத்திர, சாத்திர, புராண, இலக்கிய நூல்களை ஆராய்ந்து பெற்று' அவற்றில் மூழ்கித் திளைத்து, சமகால வாழ்வியலுடன் அக்கருத்துக்களைப் பொருத்திப் பார்த்து நலம், தீது ஆராய்ந்து, தமக்கேயுரிய எளிமை கொண்ட தமிழ்

நடையில், கற்றோரும் மற்றோரும் விளங்கி கொள்ளும் வகையில் தமது கருத்துக்களை ஆணித்தரமாகக் கேட்போர் வியக்கும் தகையவாய் கேளாரும் வேட்பமொழியும் சொல்லாற்றலும் கட்டுரை வன்மையும் கைவரப் பெற்றவர், பண்டிதமணி அவர்கள். மரபு வழமையில் பற்று வைக்கும் பண்பையும் அதேவேளை புதுமையில் நாட்டம் செலுத்தும் பாங்கையும் ஒருங்கே கொண்ட புலமையாளர், பண்டிதமணி.

### "கந்தபுராணம், வைதிக சைவ பொக்கிஷம்"

புராணம் என்பதன் பொருள் பழமை என்பதாகும். சைவத்தின் பொதுநூல் வேதம் என்றும், சிவாகமங்கள் சிறப்பு நூல்கள் என்றும் கொள்வது மரபு. அதனால் எமது சமயம், வைதிக சைவம் எனப் பண்டிதமணி கூறுவார். வேத, ஆகமங்களில் விரவியுள்ள மெய்ப்பொருள் மற்றும் நுண்பொருட்களை விரித்தும் விளக்கியும் தெளிவுபடுத்துவது புராணம். "கந்தபுராணம், வைதிக சைவ பொக்கிஷம்" என்பார் பண்டிதமணி.

"முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே" எனச் சிவபெருமானை வாழ்த்துவது சைவசமய மரபு. இவ்வாறே புராணக்கல்விக்கும் வரைவிலக்கணம் கூறலாம். பழமைக்குப் பழமையாய், புதுமைக்ப் புதுமையாய் விளங்குவது, புராணம் கட்டியெழுப்பும் கலாசாரம். வாழ்க்கையிலே பழமையில் பற்று வைக்கும் பண்பையும், புதுமையில் நாட்டம் கொள்ளும் பாண்மையையும் ஏற்படுத்தும் தன்மையுடையன புராணங்கள். குறிப்பாகக் கந்தபுராணம் அத்தகைய சிறப்பினைக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. பழமை என்பது பின்னோக்கேயன்றி, பிற்போக்கன்று என்பது அறிஞர்கள் கருத்து. பழமை என்று புராணங்களை மேல் வாரியாக ஒதுக்கித்தள்ளிவிட முடியாது. "வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கும்", "மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கும்", ஈற்றிய மனிதப் பிறவிப் பயனாகிய முத்தியின்பத்தை அடைவதற்கும், மனிதரை நெறிப்படுத்தி, வழிப்படுத்தும் ஆன்மிக, வாழ்வியல் விழுமியங்கள் கொண்ட சைவக் கலாசாரம் ஒன்றினைக் கட்டியெழுப்ப உறுதுணையாக விளங்குவன, புராணங்கள்.

ஆன்மிகம் ஆனது சமயம், உலகியல் இரண்டையும் சார்ந்து, மனித வாழ்க்கையை மேம்படுத்தி வளப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தது. அந்த வகையில், கந்தபுராண கலாசாரம், மனிதரைச் சமூகமயமாக்கல், கலாசாரமயமாக்கல், ஆன்மிகமயமாக்கல் ஆகிய முத்திறன்களைக் கொண்டு விளங்குகிறது. கந்தபுராணம் அந்த வகையில் சிறந்த கல்வியின் நோக்கங்களை நிறைவேற்றுகின்றது. யாழ்ப்பாணத்தில் நெடுங்ககாலமாகக் கந்தபுராண படனம் முறைசாராக் கல்வி முறைமையாக வளர்ச்சி பெற்று வந்தமையும், இடைக்காலத்தில் அந்நியர் ஆட்சிக் காலத்தில் தளர்ச்சி பெற்றிருந்தமையும், பின்னர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் முயற்சியால் மீண்டும் மலர்ச்சி பெற்றமையும் வரலாறு ஆகும். தற்காலத்தில் கந்தபுராண கலாசாரம், மற்றும் அதனைச் சார்ந்த கல்வி முறைமை வக்கிர திசையை நோக்கியதாக வந்து விட்டதோ, என ஐயுறத் தோன்றுகிறது.

காரியத்தைக் கொண்டு காரணத்தை உய்த்தறிந்து கொள்ளலாம். "கைப்பூணுக்குக் கண்ணாடி தேவையில்லை" என்பது பழமொழி.

## தற்பற்றும் பொருட்பற்றும்

மனிதரிடையே இன்று அதிகரித்து வரும் தற்பற்றும், பொருள் பற்றும், மனிதசமுதாயத்தில் எதிர்மறைச் சக்திகளின் செல்வாக்கும் ஆதிக்கமும் மேலோங்கவும், ஆன்மிகம் மனிதரிடமிருந்து விடைபெற்று வெகுதூரம் விலகிச் செல்லவும் வழிவகுப்பதாக உள்ளன. பேராசை, கடும்பற்று, சினம், ஏற்றத்தாழ்வு மனப்பான்மை, முறையற்ற பால் கவர்ச்சி, வஞ்சம் ஆகிய ஆறு தீய குணங்கள் வயப்பட்டு, மனிதர்கள் தம்முடைய அடிப்படை உரிமைகளான மனிதம், மனிததர்மம், மனிதாபிமானம், மனிதவிழுமியங்கள், மனிதப் பண்புகள், மனிதத் தன்மைகள் என்பவற்றை இழந்து வருகின்றனர். விளைவுகள் பாரதூரமானவையாகவே அமையும் என்பதை மறுப்பதற்கில்லை. ஒவ்வொரு செயலுக்கும் அதற்கேற்ற விளைவு உண்டு. அதுவே இயற்கை நியதி. மெய்ஞ்ஞானம், விஞ்ஞானம் இரண்டிற்கும் இதில் உடன்பாடு உள்ளது.

இதனைக் கந்தபுராண பரிபாஷையில் கூறுவதானால், சூரபன்மன், சிங்கமுகாசுரன், தாரகாசுரன் ஆகியோரின் அசுர சக்திகள் வயப்பட்டுவிட்டனரோ, தற்கால மனிதர்கள் என எண்ணத்

தோன்றுகிறது. கந்தபுராண கலாசாரம் மீண்டும் மலர்ச்சி பெறுவதன் மூலமே, அசுர சக்திகளின் கோரப்பிடியிலிருந்து, மனிதகுலம் மீட்சி பெறச் செய்ய முடியும் என்பது உணரப்பட வேண்டிய உண்மை. தாமதித்தால் தவிக்க நேரிடும் என்பது உறுதி.

## கந்தபுராண கலாசாரம் – அனைத்துலக விழுமியம்

புராணம் என்பது பழமைதான், அதன் பொருளே அதனைச் சுட்டி நிற்கிறது. பழமை பயனுள்ளதாயின், அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். அது பயனற்றதாயின் அது தாமாவே கழிந்து விடும். "பழையன கழிதல் வழுவல", என்கிறார் நன்னூல் ஆசிரியர் பவணந்தி முனிவர். பழையன எல்லாம் பிற்போக்கானவையல்ல. புதியன யாவுமே நல்லன என்று கூறுவதற்கில்லை. கந்த புராணம் அதனடிப்படையில் எழுந்த கந்தபுராண கலாசாரம் எனும் மக்கள் வாழ்வியல் பண்பாடு, தொன்மையும் அழியா அழகும் கொண்டு, எத்தகையவர்க்கும், எக்காலத்தவர்களுக்கும், எஞ்ஞான்றும் பொருத்தமுடையதாகவும், ஏற்புடைத்தாகவும் விளங்கி வருவதுடன், நிரந்தர விழுமியமாகவும் உள்ளது. அத்துடன் புதுமையின் ஊற்றாகவும் கந்தபுராண கலாசாரக் கல்வி விளங்குகின்றது.

கந்தபுராண கலாசாரம், ஒரு குறிப்பிட்ட சாராருக்கென ஒதுக்கப்பட்ட கலாசாரம் அன்று, எல்லோருக்கும் உரியது. "தென்னாடுடைய சிவன், எந்நாட்டவர்க்கும் இறைவன்" ஆவான் எனும் பொதுமைத்தத்துவம் சைவத்தின் பாற்பட்டது. சமத்துவம் போதிக்கும் சைவம், மக்களிடையே ஏற்றத்தாழ்வுகள், சாதி, குல, மத, மொழி பேதங்கள் கற்பிப்பதில்லை. "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" "தீதும் நன்றும் பிறர்தர வாரா" மற்றும் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" "அறஞ் செய விரும்பு" "தருமம் என்றொரு பொருள் உள்ளது" "அன்பே சிவம்" "நீதியே சிவம்" "அறத்தால் வருவதே இன்பம்" "இன்பமே சூழ்க, எல்லோரும் வாழ்க" "உய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு" "மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்து அறன்" "தீயாரைக் காண்பதுவும் தீது, தீயாரோடிணங்கியிருப்பதுவும் தீது" இவை போன்ற மகுட வாசகங்கள் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலாசார விழுமியங்களை உணர்த்தி நிற்கின்றன. இவையனைத்தையும் தன்னகத்தே கொண்டு விளங்குவது கந்தபுராண கலாசாரம்.

## கந்தபுராணம் உணர்த்தும் வாழ்வியல் விழுமியங்கள்

"நன்றி மறந்தால் வரும் பெரும்கேடு, எல்லாவற்றையும் அழிக்கும் என்ற ஒரு சிறந்த அறத்தைக் கந்தபுராணம் வற்புறுத்துகின்றது. சூரபன்மன் தனக்கு வரந்தந்து வாழ்வு தந்த சிவபெருமானுடைய திருக்குமாரனை வணங்கி நன்றி பாராட்டாது அழிந்து ஒழிந்தான்". - திருமுருக கிருபானந்த வாரியார்.

"சிவத்துரோகிகளுடன் கூடினால் வரும் பெரும் துன்பத்தை இனிது எடுத்து விளக்குவது இப்புராணம் (கந்தபுராணம்). சிவநிந்தை புரிந்த தக்கனுடைய யாகத்தில் பங்கு கொண்ட அமரர்கள் அவ்வதி பாதகத்தின் பயனாக நூற்றெட்டு யுகம் சூரனால் துன்புற்றார்கள். ஆகவே தெய்வ நிந்தை புரிவோருடன் கூடுதல் கூடாது."

- திருமுருக கிருபானந்த வாரியார்.

"சிவமூர்த்தியே குகமூர்த்தி. சிவன் வேறு முருகன் வேறு அன்று, மணியும் ஒளியும் போல் ஒன்றென அறிக. இதனை அறியாது கெட்டான் சூரபன்மன். அவன் புரிந்த இப்பாவத்தை மற்றவர்கள் புரியக் கூடாது. - திருமுருக கிருபானந்த வாரியார்.

மேற்குறிப்பிட்டவற்றைப் போன்று, இன்னும் பல வாழ்வியல் விழுமியங்களை விளக்கும் ஞானநூல், கந்தபுராணம் ஆகும். "கந்தபுராணத்தில் இல்லாத பொருள் எந்தப் புராணத்திலும் இல்லை". என்றொரு பழமொழி நம்மிடையே புழக்கத்தில் உள்ளது. வாழ்க்கைப் பயன்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கையும் தெளிவுபடுத்தி அவற்றை அடையும் வழி முறைகளையும் வகுத்துக் கூறுவது கந்தபுராணம்.

கந்தபுராணம் சிறந்த இலக்கியச்சுவை கொண்ட பாடல்கள் நிறைந்த நூலாகவும் உள்ளது. சொல்நயம், பொருள்நயம், அணிநயம் மற்றும் நடையழகு, தொடையழகு இனிமை, எளிமை, ஆழமுடைமை என்பவற்றுடன் முருகியல்சார் இலக்கிய நூலாகவும் விளங்குகிறது.

உண்மை, அழகு. நன்மை இம்மூன்றையும் உயர்த்தும் செந்தமிழ் நூல், கச்சியப்பரின் கந்தபுராணம் சத்து, சித்து, ஆனந்தம் ஆக இருப்பவர் இறைவன் என்பது சைவ மரபு தரும் இறை இலக்கணம்.

## நோயும் மருந்தும்

இன்று சமுதாயம் வைதிகம், சைவம் என்றும், தமிழ் என்றும் பிளவுபட்டு பிரிந்து நிற்பதைக் கண்ட பண்டிதமணி கணபதிப்பிள்ளை அந்த இருமைகளை ஒருமை செய்வது எவ்வாறு என்பது பற்றி ஆராய்ந்தார். அவர் ஆராய்ந்து எட்டிய முடிவினைபின்வருமாறு விளக்குகிறார்.

"வைதிக சைவப்பிறழ்வு எத்தனையோ கிளை விட்டுச் சாதி சமயங்களைச் சாடி, ஆரியம் வேறு, தமிழ் வேறு என்ற பிளவை நோயாய், நாஸ்திகமாகிப் பரிணமித்திருக்கின்றது. நோய்க்குணமறிந்து ஔஷதப்பிரயோகம் செய்ய வல்லது, அதியற்புத அதிமதுரச் சுத்தச் செந்தமிழாகிய கந்தபுராணம். "இவ்வாறு கந்தபுராண நூல் மகிமை பற்றிப் பண்டிதமணி குறிப்பிட்டுள்ளார்.அவர் தொடர்ந்து கூறும் போது, "கந்தபுராணம் முறையாய் நடந்த காலத்திலே எந்த நோயும் யாழ்ப்பாணத்தை எளிதில் அணுகியதில்லை" எனவும் கோடிட்டுக் காட்டியுள்ளார். இங்கு நோய் என்பது வெறுமனே உடல் நோய்களுடன் மட்டுப்படுத்தப்பட்டதாக எண்ணுதல் ஆகாது. சமூகத்தினை ஒட்டு மொத்தமாக சூழும் சமூக, பொருளாதார, அரசியல், கலாசாரப் பிரச்சினைகள், சிக்கல்கள், சீரழிவுகள், அவலங்கள், துன்பங்கள், அனர்த்தங்கள் அனைத்துமே "நோய்" என்ற சொல்லில் அடங்கியுள்ளமை நோக்கற்பாலது. கந்தபுராண கலாசார வாழ்வு முறையைக் கைநழுவ விட்டமையினால் ஏற்பட்ட தீய விளைவுகளை இன்று நிதர்சனமாகக் காண முடிகின்றது. "முற்பகல் செய்யில் பிற்பகல் விளையும்", என்ற நம் முன்னோர் கண்ட செயல் - விளைவுத் தத்துவம், செயல் ஆவதைக் காண்கின்றோம்.

## உலகாயதம் எழுச்சி

"தீதும் நன்றும் பிறர்தர வாரா" - இதுநம் முன்னோர் கண்ட வாழ்க்கைத் தத்துவம்.

"இன்று உலகாயதம் என்கின்ற ஒண்டுறற்பாம்பு உலகம் எங்கும் படம் விரித்தாடுகின்றது. நாஸ்திகம் என்பது அதுவே". "தற்கால உலக சமுதாயம் அமைதியின்றி இருப்பதற்கான காரணம் உணர்தற்பாலது."

உலகாயதம் என்னும் சண்டமாருதத்தில் சிக்கி உழலும் தற்கால உலகில் அமைதி என்பது எட்டாக் கனியாகும். பிரச்சினைகளுக்குத் தீர்வு எட்டுவது என்பது நடைமுறைச் சாத்தியமற்றது. தவிப்பும், துன்பதுயர்களும், அழிவுகளும் தவிர்க்க முடியாதனவாகி விடுகின்றன. சண்டமாருதம் ஓய்வதற்கான அறிகுறிகளும்தென்படுவதாக இல்லை. உலகாயதம் எனும் சூறாவளி வேகம் அடங்கி இதம் தரும் தென்றலாக மாறவேண்டுமெனில், உலகாயதத்துடன் ஆன்மிகம் இணைய வேண்டும். கந்தபுராண கலாசாரம் இந்த நற்பணியைச் செய்கின்றது.

## உலகியலும் ஆன்மிகமும் : இணைப்பு

உலகியலும் ஆன்மிகமும் எதிரும் புதிரும் அல்ல. சமாந்தரமாக அமைக்கப்பட்டுள்ள இரண்டு தண்டவாளங்கள் போன்று ஒன்றையொன்று சந்திக்க முடியாதவை அல்ல. அவை ஒன்றுடன் ஒன்று இணையக் கூடியன' இணையவும் வேண்டியன. மனித வாழ்க்கையின் தரஉயர்வு, இவ்விரண்டினதும் இணைப்பிலேயே தங்கியுள்ளது என்பது ஒவ்வொருவோரினதும் உள்ளத்தில் கொள்ளப்பட வேண்டும். கந்தபுராண கலாசாரம் இத்தகைய இணைப்பில் எழுந்தது என்றால் மிகையாகாது. உலகாயதம், ஆன்மிகம் இணைப்பில் அளவுமுறை பேணப்பட வேண்டும். மிகுனும் குறையினும் துன்பம் ஏற்படும்.

மனிதனிடம் தான் ஆறாவது அறிவு உள்ளது. அந்த அறிவு தான் மனிதனை ஏனைய உயிரினங்களிலிருந்து வேறுபடுத்தியும் உயர்த்தியும் காட்டுகின்றது. இந்த அறிவு ஐம்புலன்களினூடாக, உலகியல் சாா்ந்து பொருள்கள், மக்கள், இன்பதுன்ப உணர்வுகள், மற்றும் ஆசாபாசங்கள், பிணைப்புக்கள் என்பவற்றுடன் எல்லை கட்டிக், குறுகி நின்று தொழிற்படும் வரையில் மாயையாகவும், உணர்ச்சி வயமாகவும் சிறுமை நிலையடைகிறது. இந்நிலையில் தான் உலகாயதம் வீறு பெற்று எழுந்துமனிதரை ஆட்டிப் படைக்கிறது. “இன்பம், இன்பம், இன்பம் இன்பத்திற்கோர் எல்லை காணில் துன்பம், துன்பம்” என்கிறார் பாரதியார். உலகாயதம் இன்பம் தருவது போல் முதலில் தோன்றினாலும் முடிவில் முழுக்க முழுக்க துன்பம் தான் என்பது அனுபவம் கற்றுத்தரும் பாடம். உலகாயத வாழ்க்கை முறையில் தன் முனைப்பு எனும் ஆணவம் விஞ்சி நிற்கும். “நான்” எனும் அகந்தையும் “எனது” எனும்

மமதையும் ஆணவத்தின் குண இயல்புகள். இவ்வியல்புகளைக் கொண்டவர்களிடம் தற்பற்றும் பொருட்பற்றும் விஞ்சி நிற்கும். அறியாமை எனும் அஞ்ஞான இருளில் மூழ்கியிருப்பர். காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் ஆகிய ஆறு தீக்குணங்களும், உணர்ச்சிகளும் வீறு கொண்ட நிலையில் இருப்பர். சூரபன்மன் எனும் பாத்திரம் மூலம் சிறப்பாகவும், ஏனைய அசுரர்கள் மூலம் பொதுவாக இந்நிலைமைகள் கந்தபுராணத்தில் சித்தரித்துக் காட்டப்பட்டுள்ளன.

உலக வாழ்வில் பொருள், மக்கள், பால், புகழ், செல்வாக்கு, அந்தஸ்து, பதவி என்பவற்றில் பற்று ஏற்படுதல் இயல்பே. கடமை உணர்வோடும், அறந்தழுவியும், ஒழுக்கந்தவறாமலும், இறைவனை விசாரித்தும், நடுவுநிலை பேணியும், நலம் தீது ஆராய்ந்தும், நீதி வழுவா நெறி முறையில் வாழ்க்கையை இட்டும், அளவு முறை அறிந்தும், விழிப்போடு இப்பற்றுக்களை வளர்த்தும், காத்தும், அனுபவித்தும் கொள்ள வேண்டியது மனித வாழ்க்கையின் சீர்மைக்கும், ஒழுங்கிற்கும், சமுதாய நலத்திற்கும், ஈற்றில் பிறவிப்பயனை எய்துதற்கும் அவசியமானது.

எல்லையற்ற மனம் மற்றும் ஐம்புலன்களுக்கும் எட்டாத பரம்பொருள் எனும் பேராற்றலின் ஒரு பகுதியே ஒவ்வொரு மனிதனும் என்ற உண்மையை உணர்ந்து அதனை என்றென்றும் நினைவிற் கொண்டிருத்தல் மனித வாழ்வு செம்மை பெற அவசியமாகும்.இறைஉணர்வோடு, அறந்தழுவிய, விழிப்போடு உலக வாழ்வை நடத்தும் போது தான், பற்றி நிற்பதிலும் பற்றின்மை என்ற தகைமை மனிதர்க்கு ஏற்படுகிறது. உலகியலுடன் ஆன்மிகமும் இணைய வேண்டியதன், தேவையை தனிமனித, குடும்ப, தேச, உலக அமைதியை வேண்டி நிற்கும் அனைவரும் உணர்ந்து செயற்பட வேண்டியது அவசியமும் அவசரமுமாகும்.

"நீரில் குளிப்பது தேவை தான். ஆனால் நீரில் மூழ்கி விடாமலும் காத்துக் கொள்ள வேண்டும். நெருப்பு வாழ்க்கைக்கு பல வழிகளிலும் தேவை தான். ஆனால் நெருப்பு எரிந்து கொள்ளாமலும் காத்துக் கொள்ள வெண்டும்". - அருள்தந்தை வேதாந்திரிமகரிஷி

## இரு உபதேசங்கள் : காசிப முனிவரின் தர்ம உபதேசம்

படைத்தல் கடவுளாகிய பிரம்மாவின் புதல்வன் காசிபன். காசிப முனிவராக விளங்கிய போது காசிப முனிவர் என அழைக்கப்பட்டார். மாயை எனும் அசுரகுலப் பெண், காசிப முனிவரை மணந்து சூரபன்மன், சிங்கமுகன், தாரகன் என்னும் ஆண்மக்களையும், அசமுகி எனும் மகளையும் பெற்றெடுத்தாள். உரிய பருவம் அடைந்த சூரன், சிங்கன், தாரகன் ஆகியோருக்குத்தந்தை காசிப முனிவரால் வித்தியாரம்பம் செய்து வைக்கப்பட்டது. தாயார் மாயையும் உடனிருந்தாள். அவ்வேளை, "தருமம் என்றொரு பொருள் உளது" எனக் காசிபர் கூறி முதல் பாடத்தை ஆரம்பித்தார். தாயின் நோக்கும் போக்கும் வேறு தந்தையின் தருமோபதேசம் அவளுக்குப் பிடிக்கவில்லை. மாயை அசுர குலப் பெண். அசுரர்களும் தேவர்களும் பகைவர்கள். தேவர்களுடன் போர் தொடுத்து அவர்களை வென்று, தமக்கு குற்றேவல் புரியும் அடிமைகளாக்கி, அசுர குலத்தின் ஆதி பத்தியத்தை நிலை நிறுத்தி, அண்டங்கள் அனைத்தையும் ஒரு குடையின் கீழ் கொண்டு வந்து அரசாட்சி செய்யக் கூடிய வலிமையும், வைராக்கியமும், போரூக்கமும், வீரமும் தர்மமும், பராக்கிரமும், பயிற்சியும் தகைமையும் கொண்ட வீரப்புதல்வர்களாக, தம் மைந்தர்களான சூரன், சிங்கன், தாரகன் முதலியோரை வளர்தெடுப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்த மாயை தம் புதல்வர்களை தந்தை காசிப முனிவரிடமிருந்து பிரித்து, அவர்களைக் கூட்டிச் சென்று, அசுர குருவாகிய சுக்கிராச்சாரியாரிடம் ஏற்ற கல்வி கற்பதற்கும் போர்ப்பயிற்சி பெறுவதற்குமாக. சூரன் முதலியோரை ஒப்படைத்தாள்.

மாயையின் நோக்கும் போக்கும் எத்தகையன என்பதை நன்கறிந்தவர் சுக்கிராச்சாரியார். உண்மையில் மாயை அத்தகைய நோக்கினையும் போக்கினையும் கொண்டவளாக உருவெடுக்க அவளை வழிப்படுத்தி, காசிப முனிவரிடம் சென்று, அவரை மணந்து அவர் மூலம் வீர மைந்தர்களைப் பெற்றெடுக்குமாறு ஆலோசனை கூறிச் செயற்படுத்த மாயைக்கு உந்து சக்தியாக விளங்கியர் சுக்கிராச்சாரியார்.

"கந்த புராணத்தில் இரு உபதேசங்கள் வருகின்றன. ஒன்று காசிபன் உபதேசம் மற்றையது சுக்கிரன் உபதேசம். காசிபர் தம்

மக்களுக்கு உபதேசித்தது வைதிக சைவ சித்தாந்த உபதேசம். மாயையின் வேண்டுகோளின்படி சுக்கிரன் உபதேசித்தது ஏகான்மவாதம் எனப்படும். மாயாவாத உபதேசம்." - பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

## சுக்கிராச்சாரியார் உபதேசம்

"உற்றதோர் மேன்மை நாடி உன்னை நீ பிரம மென்றே தெற்றெனத் தெளிதி ......... " - கந்தபுராணம் என்று சுக்கிரன் உபதேசம் வலியுறுத்துகின்றது. சூரபன்மன் "நானே பிரம்மம்" - நானே இறைவன் என்று பின்னர் பிரகடனம் செய்தமைக்குச் சுக்கிரன் உபதேசமே கால்கோள் இட்டது. சூரன் முதலியோரின் அழிவிற்கும் இதுவே காரணமாயிற்று.

"தந்தை சொல் மிக்கதோர் மந்திரமில்லை," என்னும் ஔவைப் பாட்டியாரின் அருள்மொழி, என்றும் பொய்யா மொழி.

சூரபத்மன் முதலியோரின் தந்தை காசிபமுனிவரின் சொற்கேட்டு,அதன் வழியில் தான் சூரன் முதலியோர் தம் வாழ்க்கையை இட்டுச் சென்றிருப்பாராயின் அழிவினின்றும் காப்பாற்றப்பட்டிருப்பர்.

காசிபர் தம் புதல்வர்களுக்குக் காட்டிய வழி, தருமவழி. "தருமம் என்றொரு பொருள் உளது", என்ற தொடக்கத்துடனேயே தம்புதல்வர்களுக்கு அவரால் வித்தியாரம்பமே செய்து வைக்கப்பட்டது.

"தருமம் தலைகாக்கும்" - ஆன்றோர் அநுபவமூலம் தெளிந்து கொண்ட சத்திய வாக்கு.

சூரன் முதலியோர் கடுந்தவம் புரிந்து, சிவபெருமானிடம் பெற்ற வரத்தின்படி, ஆயிரத்தெட்டு அண்டங்களையும், நூற்றெட்டுயுகங்களுக்கும் மேல் அரசாண்டு, அரசபோகங்களையும் அனுபவித்திருப்பர். தாம் பெற்ற வச்சிரயாக்கையையும் அழியாது காப்பாற்றியிருப்பார். உலகில் பூரண அமைதியும் நிலைபெற்றிருக்கும்.

"சொற்கேளாப் பிள்ளைகளால் குலத்துக்கீனம்" என்னும் முதுமொழி, பொருள் பொதித்த வாசகம். தருமத்தை உதாசீனஞ் செய்பவர், தம்மையும் அழித்துத் தாம் சேர்ந்த குலத்தையும் அழித்து, குலத்திற்குத் தீராத வடுவையும் ஈனத்தையும் தேடிவைத்து விடுகின்கிறனர் என்பது கந்தபுராணம் தரும் முக்கிய செய்தியாகும். முழு அரசகுலமே அழிந்தது.

புராண இதிகாசங்கள், "தருமம் வெல்லும், அதர்மம் தோற்கும்", என்னும் உண்மையை, மையப்பொருளாகக் கொண்டு, உலகத்தவர் உளங்கொள்ளத்தக்க வகையில், அதனை விளக்கி, அவர்களின் வாழ்க்கையைச் செம்மைப்படுத்தி, ஈடேற்றம் அடையச் செய்ய எழுந்த தவகதைகள். கந்தபுராணம் தவகதையாகவும் சிவகதையாகவும் விளங்குகின்றது.

சுக்கிராச்சாரியார் அசுரகுரு. தாயின் ஆணைப்படி, சுக்கிராச்சாரியாரைக் குருவாகப் பெற்ற சூரன் முதலியோருக்கு உபதேசிக்கப்பட்டது, ஏகான்ம வாதம் எனப்படும். அதுவே "மிண்டிய மாயாவாதம்" எனவும் கூறப்படுகிறது. "மிண்டிய மாயாவாதமும் உலகாயதமும் அண்ணன், தம்பி", என்பர் பண்டிதமணி.

"தாரமும் குருவும் தலைவிதிப்பயன்", என்பது ஆன்றோர் வாக்கு. எப்பவோ முடிந்த காரியம். அதர்மம், அதர்மத்தையே பிரசவிக்கும், சூரன் முதலியோருக்குக் கிடைக்கப் பெற்ற குருவும், அவர்களின் வினைப்பயனுக்கு ஏற்றவாறே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. "வினைவிதைத்தவன் வினை அறுப்பான், தினை விதைத்தவன் தினை அறுப்பான்" செயலுக்கேற்ற விளைவு, நன்மையோ தீமையோ தப்பாமல் கிடைக்கும்.

காசிப முனிவரைத் தந்தையாகப் பெற்றும், அவரைக் குருவாகவும் பெறும் வாய்ப்பு, சூரன் முதலியோருக்குத் தாயின் குறுக்கீட்டால், கிட்டாமற் போய்விட்டது. அசுரகுரு சுக்கிரன், குருவாகக் கிடைக்கப் பெற்றார்.

"கற்பகத்தைச் சார்ந்தார்க்குக் காஞ்சுரங்காய்
ஈய்ந்ததேன்,
முற்பவத்தில் செய்த வினை."

இது பொருள் பொதிந்த கூற்று.

"பிறழ்வுகள் பிறந்தவாறு காட்டி, வேதாகமமாதி சாத்திர ஒருமையை எடுத்துக்காட்டுக்கள் மூலம் காட்டுவது கந்தபுராணம்". - பண்டிதமணி -

"தம்பியாகிய சிங்கன்பால், தந்தையின் உபதேசமும்", தமையனாகிய சூரபன்மன்பால் சுக்கிரன் உபதேசமும் மனசிற்பதிந்து நிலைத்தன". - பண்டிதமணி -

"ஒரு சமயம் சிங்கமுகாசுரன், ஏகான்ம வாதியாகிய சூரபன்மனை நோக்கி,

"வேதக் காட்சிக்கும் உபநிடத்துச்சியில் விரிந்த
போதக் காட்சிக்குங் காணலன்"
"ஞானந்தானுரு வாகிய நாயகனியல்பை
யானும் நீயுமாயிசைத்துமென்றால∴தெளிதோ"
(கந்தபுராணம் சூரனமைச்சியல் - *127,128*)

என்றிங்ஙனம் வேதாகமோக்த வைதிக சைவசித்தாந்த மூலம் சுப்பிரமணியப் பிரபாவம் பேசுவானயினான். புறக்குடத்தில் வார்த்த நீராயிற்று, சிங்கன் உபதேசம். ஆயினும் அது வீண் போகவில்லை". - பண்டிதமணி -

"கெடுகுடி சொற்கேளாது, சாகிறவன் மருந்து குடியான்" என்ற பழமொழி, சூரபன்மன் செயற்பாடுமூலம் உறுதி பெறுகிறது.

### தர்மம் வெல்லும்

குரு வந்து வாய்க்காவிட்டால், ஏற்படும் கேடுகளை கந்தபுராணம் சித்தரித்துக் காட்டியுள்ளது. தருமத்தை அநுசரித்து வாழ்ந்தால் உண்டு வாழ்வு, மறுத்தாலோ மறந்தாலோ, மறைத்தாலோ உண்டு அனைவர்க்குந் தாழ்வு. இது சர்வ நிச்சயம் என்பதைக் கந்தபுராணம் அறிவிக்கிறது. தருமத்தை - அறத்தை அடித்தளமாகக் கொண்டு எழுந்த வாழ்க்கை நெறியே, கந்தபுராண கலாசாரம் ஆகும்.

தருமம் வெல்லும் என்பது உறுதி. சிற்சில சூழ்நிலைகளில், தோற்பது போலத் தோற்றமளித்தாலும், இறுதியில் தருமம்

வெல்லும். இக்கருத்தைச், சுப்பிரமணிய பாரதியார், பின்வருமாறு விளக்குகிறார்.

"தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்
தருமமறு படி வெல்லும்" எனுமியற்கை
மருமத்தை நம்மாலே யுலகங் கற்கும்
வழிதேடி விதியிந்தச் செய்கை செய்தான்.
கருமத்தை மேன்மேலும் காண்போம். இன்று
கட்டுண்டோம், பொறுத்திருப்போம், காலம் மாறும்
தருமத்தை, யப்போது வெல்லக் காண்போம்".

இவ்வுலகில் அழியாப் பெருஞ் சொத்து, தருமம் என்பதைப் "பாஞ்சாலி சபதம்" எனும் தமது கவிதை நூலில் மேற்கொண்டவாறு குறிப்பிட்டிருப்பது நோக்கற்பாலது.

## சூரன் அழிவின் காரணம்

சூரன் முதலியோர் அத்துணை வலிமையும் பராக்கிரமும், இறைவனிடம் பெற்ற வரங்களும், தவ ஆற்றலும், நிரம்பப் பெற்றிருந்தும், சுக்கிராச்சாரியாரின் தவறான போதனையாலும், பிழையான வழிநடத்தலாலும், உலகின் அமைதியைக் குலைத்ததோடமையாது, தாமும், தம் சுற்றத்தினருடன் அழிந்துபட்டனர். காமம், குரோதம், சினம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் எனும் ஆறுதீய குணங்கள் வயப்பட்டமையும், அகந்தை, மமதை எனும் தற்பற்று, பொருட்பற்று என்பவற்றின் வழி செயற்பட்டமையும் சூரன் ஆகியோரின் அழிவிற்குக் காரணம். உலகாயதம் எனப்படும் மாயாவாத உபதேசம், எந்த அளவிற்கு, ஒரு யுக அழிவிற்கே காரணமாயிற்று என்ற பாடத்தைக் கந்தபுராணம் நமக்குக் கற்றுத்தருகிறது.

## தற்கால உலகினை வழிநடத்தும் உலகாயதம்

தற்கால உலகையும், சுக்கிராச்சாரியார் போற்றி வலியுறுத்திய, "மிண்டிய மாயா வாத சண்டமாருதப் பொருள்", எனும் உலகாயதம் தான் வழிநடத்தி வருகின்றது. தனிமனித அமைதி, குடும்ப அமைதி, சமுதாய அமைதி, உலக அமைதி என்பன

மனிதகுலத்தை விட்டு விலகி வெகுதூரம் சென்று விட்டமைக்குக் காரணம் புரிகின்றதல்லவா! சுக்கிராச்சாரியார் போன்றவர்களே தற்கால உலக மக்களை வழிநடத்துகின்றனர். உலகாயதம் இன்று பல்வேறு வடிவங்கள் எடுத்து - முதலாளித்துவம், பொருள் முதல் வாதம், பொதுவுடமை, உலகமாயமாதல், தாராண்மை - பல்வேறு எதிரும் புதிருமான குழுமங்களாக உலகினைப் பிரித்து வைத்து, வேடிக்கை பார்க்கிறது. இன்று உலகாயதம் என்னும் சண்டமாருதம், அதிகரித்த வீச்சுடன், தொடர்ந்து அட்டகாசம் புரிந்த வண்ணம், அதனது கைவரிசையைக் காண்பித்தவாறு உள்ளது. அது ஓய்வதில்லை, ஓய்வதற்கான அறிகுறிகளும் தென்படவில்லை. உலகமயமாதல் என்னும் மாயைக்குள் சிக்கியிருப்பவர்களுக்குப் பொருள், பண்டம், சொத்து, புகழ், கீர்த்தி, பதவி, அந்தஸ்து, இன்பம், சுகம், போகங்கள் என்பனவற்றைத் தப்பாமல் அடைவதையே, இலக்காகக் கொண்டிருப்பதில் நாட்டமே தவிர, அவற்றை அடைய மேற்கொள்ளப்படும் வழி மற்றும் முறைகள் முக்கியமல்ல. அடைவுமுக்கியமே தவிர, வழி முக்கியமல்ல, வழி குறுக்கு வழியாகவும் இருக்கலாம், நீதி தவறிய நெறிமுறையாகவும் அமையலாம் என்பதில் நம்பிக்கையுடையவர்கள். அவர்கள் “பிழை” க்கத் தெரிந்தவர்கள், பிழை எனத் தெரிந்து கொண்டு புத்திபூர்வமாகப் பிழை செய்பவர்கள் தாம் செய்வது, பின்பற்றும் வழிமுறைகள் என்பன பிழை, தவறு எனத் தெரிந்து கொண்டும், சரியென நியாயிக்கும் வல்லமையுடைய பொய்மையாளர்கள் நிறைந்தது தற்கால உலகம்.

தர்மம் - அறம், தலைதூக்காது அடக்கி ஒடுக்கப்பட்ட நிலையில், உலகில் அமைதி ஏற்படுவது சாத்தியமற்றதாகும். சமாதானம் எனும் பதம், இன்று பலருக்குப் போர்வையாகி விட்டது. சமாதானம் என்னும் போர்வையினுள் புகுந்து, மறைந்து நின்று கொண்டு, அதனைக் கவசம் ஆகவும் பயன்படுத்திக் கொண்டு, சமாதான விரோதச் செயல்களில் ஈடுபடுவோர் தொகை, தற்கால உலகை வழிநடத்துபவர்கள் மத்தியில், பெருகிக்கொண்டே வருகிறது. இவையாவும், ஆன்மீகம் புறந்தள்ளப்பட்டு, உலகாயதத்தின் எதிர்மறைக் குணவியல்புகளின் எழுச்சியின் தீய விளைவுகள் தற்காலத்தில் அறுவடை செய்யப்படுகின்றன.

### அறம் புறம்

முன்னரும் ஒரு காலத்தில், உலகில், மக்கள் வாழ்க்கையில் அறம், புறமானது, அடிதலை மாறியது, சீர்கெட்டது, ஒழுக்கம் சரிந்தது, ஒழுங்கு பிறழ்ந்தது.

"முந்தொரு காலத்தின் மூவுல கந்தன்னில்
வந்திடு முயிர் செய்த வல்வினை யதனாலே
அந்தமில் மறையெல்லா மடிதலை தடுமாறிச்
சிந்திட முனிவோருந் தேவரு மருளுற்றார்

என்னும் கந்தபுராணப் பாடல், நிலைமையைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

### முருக தோற்றம்

உலகத்தை மீண்டும் ஒழுங்காக்கிச் சீர் செய்ய வேண்டிய தேவை உணரப்பட்டது. பரமபதிக்குக் கருணை, உண்டாக, முருக தோற்றம் நிகழ்ந்தது. முருகு என்றால் அழகு, அழகு என்றால் ஒழுங்கு, செம்மை, சீர்மை, நன்மை ஆகும். உலகினைச் சீர்செய்து, ஒழுங்கு படுத்த, உயர்ந்தோர் செய்த தவப்பயனாக வந்து உதித்தவன் முருகன்.

"அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒருதிருமுருகன் வந்தாங் குதித்தனன் உலகமுய்ய".

இவ்வாறு உலகில் உள்ள யாவரினதும் உய்விற்காக, முருகப் பெருமான் உதித்தனன், என்பது கந்தபுராணம் தரும் செய்தி. கந்தபுராண கலாசாரம், அழகும், அறிவும், அறமுந்தழுவி, மானிடத்தை உய்விக்க எழுந்தது என்பது இன்றைய காலகட்டத்தில் உணரப்படவேண்டியது.

கந்தபுராணத்தின் மகிமையையும், அருமையையும் அறிந்து, அதனை உச்சிமேல் கொண்டு, மற்றையோரையும் அவ்வாறு செய்ய வைத்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர். கந்தபுராண

கலாசாரமாக யாழ்ப்பாணத் தமிழ்மக்களிடையே பரவி, வாழ்க்கை நெறியாக மிளிர்ந்தது. நாவலருக்குப் பின், பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் கந்தபுராண கலாசார விருத்திக்குப் பெரும்பணியாற்றியுள்ளார்.

## கந்தபுராண கலாசாரம் – ஒரு வாழ்க்கை நெறி

கந்தபுராண கலாச்சாரம், தருமம் அல்லது அறம் என்பதை மையப் பொருளாகக் கொள்கின்ற வாழ்க்கை நெறி, சநாதன தர்மம் என்பதே இந்து மதத்திற்கு ஆதியிலிருந்து வழங்கப்பட்டு வந்த பெயர். சநாதன தர்மம் என்பதன் கருத்து "என்றைக்கும் உள்ள தர்மம்", என்பதாகும். கலாசாரம் என்பது நல்லொழுக்கம்.

தருமம் என்னும் வடமொழிச் சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல், அறம் ஆகும். அறம் மனித வாழ்வை, வளப்படுத்துகிறது, செழுமைப்படுத்துகிறது, ஒழுங்குபடுத்தி அழகு செய்கிறது. எனவே தான், மனித வாழ்வு கலை எனப்படுகிறது. கலாசாரம் என்றால் ஒழுக்கம், தருமம் என்ற சொல்லுக்குக் கடமை, ஈகை, ஒழுக்கம், நீதி என்னும் பொருள்கள் உண்டு.

மனிதன் தன் உடல்பலம், அறிவு, ஆற்றல், பொருள் செல்வம் என்பனவற்றைப் பெருக்கும் அளவிற்கு அறப் பண்பையும், ஆன்மிக பலத்தையும் பெருக்கிக் கொள்ளாவிடின், துன்பப் பெருக்கம் ஏற்படுவது உறுதியாகி விடும். அதனாலையே, "அறஞ் செயவிரும்பு" என்று முதலிலேயே கூறிப் பாடத்தைத் தொடங்கி வைத்தனர், தமிழன்னை ஔவைப் பிராட்டியார். தர்மத்தை மறுத்து, இன்பப் பெருக்கத்தில் முனைப்புடன் ஈடுபட்ட சூரன் முதலியோருக்கு நேர்ந்தது, துன்பப் பெருக்கமே என்ற பாடத்தை நமக்குக் கந்தபுராணம் கற்றுத்தருகிறது.

## எது தர்மம்

தர்மம் என்பது பரந்த பொருளில் கந்தபுராண கலாசாரத்தில் இடம் பெறுகிறது. எது தர்மம், என்பதற்குப் பண்டிதமணி தரும் விடை பின்வருமாறு அமைகின்றது.

"தருமமாவது சிருஷ்டிகர்த்தாவின் நோக்கம் அறிந்து செய்வது". - பண்டிதமணி -

உலகத்திற்குக் கருத்தாவான கடவுளின் கருத்தை விசாரித்து அறிந்து, ஒப்புதல் பெற்று, ஆற்றும் கருமங்கள் யாவும் தருமமேயாகும். அதுவே தருமத்தின் உரைகல் ஆகும்.

"அரன்றன் பாதம் மறந்து செய்யறங்கள் எல்லாம் வீண் செயல்". அவை நன்மைக்குப் பதில் தீமையையே விளைவிப்பன. குளிக்கப் போய்ச் சேறு பூசிக்கொள்ளுதல் தகாத செயல். "பாத்திர மறிந்து பிச்சை இடு", என்பது நாவலர் பெருமான் தரும் வாக்கு. தருமம் செய்பவரும், பெறுபவரும், தருமத்தைத் துர்ப்பிரயோகம் செய்தல் ஆகாது. அதற்காகவே, கடவுளை விசாரித்து, கருத்தறிந்து தருமஞ்செய்தல் வேண்டும் என்று சொல்லப்படுகிறது.

"தருமம் என்றொரு பொருள் உளது", என்னும் கந்தபுராணம் தரும் மகா வாக்கியத்தை இலட்சியம் செய்து கருமத்தை ஆற்றத் தொடங்குவதற்கு முன், "இது தகுமா, இது முறையா, இது தருமம் தானா?", என்னும் வினாக்களை எழுப்பி, உடன்பாடான விடை கிடைக்கப்பெற்றால் மட்டுமே, அக்கருமத்தை, மனம், மொழி, செயல் தூய்மையுடன் ஆற்ற வேண்டும். அப்பொழுதுதான் அக்கருமம், தருமம் ஆகின்றது. தரும விசாரஞ் செய்தல், மனிதர்கள் வையத்துள் வாழ்வதற்கு இன்றியமையாதது எனும் கொள்கையுடையது, கந்தபுராண கலாசாரம்.

தரும விசாரம் செய்தல் மூலம் நீதி, அநீதி வேறுபடுத்திக் காண முடிகின்றது. அதனால் நீதி வழுவா நெறிமுறையில் வாழ்க்கையை இட்டுச் செல்ல வழி பிறக்கிறது.

### மனிதன் அடையவேண்டியவைகள்

"கற்றதனாலாய பயன் வாழ்க்கை வழி. அறம், பொருள், இன்பம், வீடு, இவை புருடார்த்தங்கள். அரும்பு, மலர், காய், கனிகள். ஒன்றிலிருந்து ஒன்று முதிர்ந்து நடப்பவைகள். மனிதன் அடைய வேண்டியவைகள்". - பண்டிதமணி -

முதலில் மனிதன் நாடி அடைய வேண்டியது அறம்.

"பிறப்புக்கள் தோறும் செய்து வைத்த தவ விசேடத்தினாலே, அறிவு விசாரங்களினாலே ஒருவனுக்கு மனம் முதலிய - அந்தக் கரணங்கள் தூய்மைப்பட்டு, அறங் கைவரலாம்". - பண்டிதமணி -

அறம் கைவரப் பெற்றவனுக்கு, மனமாசுகள் அகன்று விடுகின்றன. "மனத்துக்கண் மாசிலன் ஆதல், அனைத்து அறன்", என வள்ளுவர் பெருமான், அறம் என்றால் என்ன, என்பதற்குத் தெளிவான விடை தருகின்றார்.

மனித மனத்தில் குடிகொண்டிருக்கும் அழுக்குகள் எனப் பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் எனும் நான்கினை இனங்கண்டு, திருவள்ளுவர் பின்வரும் குறளில் பதிவு செய்துள்ளார்.

"அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்" - குறள் 35

அழுக்குகள் நீக்கப்பட்டுத் தூய்மையடைந்த மனதில், நல்ல எண்ணங்கள், தூயசிந்தனைகள், தூய உணர்வுகள் மாத்திரமே தோன்றுகின்றன. அவை, வாய் வழியாக, வார்த்தைகள் வடிவில் வெளிவரும்போது, இனிய இன்சொற்களாக, அன்பும் கருணையும் நிறைந்தனவாக, ஆக்கபூர்வமானவையாக, வாழ்விப்பனவாக, பண்புடையனவாக, நன்மையே பயப்பனவாக, மங்களகரமானவையாக, மகிழ்ச்சியைத் தருவனவாக அமைந்து விடுகின்றன.

"யாவாக்குமாம்பிறர்க் கின்னுரை தானே". - என்கிறது திருமந்திரம். பிறர்க்கு இன்னுரை வழங்குவது, எல்லோராலும் செய்யக்கூடிய, எல்லோருக்கும் இயலக்கூடிய அறம் ஆகும்.

பொதுவாகத் தானமும், அறச்செயல்களும் பொருள் உள்ளவர்களாலேயே செய்யக்கூடியன என்ற கருத்து நிலவுகிறது. அது தவறான கருத்து. நல்ல மனமும், அறம் செய்ய வேண்டும் என்பதில் விருப்பமும் சிரத்தையும் இருப்பின், பல வழிகள் உள்ளன. "மனமுண்டானால் இடமுண்டு", என்பது முதுமொழி.

தூய எண்ணங்கள், உடன்பாட்டுச் சிந்தனைகள், நல்லுணர்வுகள் என்பன செயல்கள் ஆகும் போது, அவை, தனக்கோ, பிறருக்கோ, தற்காலத்திலோ, இனி வருங்காலத்திலோ,

ஒருவரின் உடலுக்கோ, உயிருக்கோ, உடமைக்கோ தீங்கு பயவாதனவாயும், நன்மையே பயப்பனவாயும் அமைந்து விடுகின்றன. அவை அறங்கள் ஆகிவிடுகின்றன.

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" எனவும் வள்ளுவர் பெருமான் கூறியிருப்பது உளங்கொள்ளத்தக்கது.

ஒவ்வொரு செயலுக்கும் ஒரு விளைவு உண்டு. அதுவே இயற்கை நியதி. தர்மமுமாகும். நல்வினை, நன்மையான விளைவையும், தீவினை தீமையையும் பயப்பது உறுதி. புண்ணியங்கள் என்றும் பாவங்கள் என்றும் சமயம் கூறும். ஆகவேதான், ஒவ்வோருவரும் தீமையைத் தவிர்த்து, நல்லதையே செய்யப் பழகிக்கொள்ள வேண்டும். அதுவே தர்மம். நல்லவற்றைச் செய்ய முடியாத பட்சத்தில், தீமையைச் செய்யாது விடுதலும் அறம் ஆகின்றது.

## இறையுணர்வும் அறவாழ்வும்

பிறருக்கு எந்த விதத்திலும் இடையூறுகள், தீமைகள், துன்பங்கள், தொல்லைகள், கவலைகள், பிரச்சினைகள் ஏற்படாதபடி எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றையும் தூய்மைப்படுத்தியும், ஒழுங்குபடுத்தியும் கொண்டு வாழும் வாழ்க்கைதான், ஒழுக்க வாழ்வு, தருமவாழ்வு, அறவாழ்வு, ஆன்மிக வாழ்வு ஆகும். கந்தபுராண கலாசாரம், இத்தகைய பண்பட்ட வாழ்வையே வழங்குகிறது. இத்தகைய கலாசார வாழ்விலே, கடமையும், பொறுப்புடைமையும், ஈகையும், ஒழுக்கமும், அறிவும், அன்பும், கருணையும், சமுதாய மக்களில் சிறப்பாக அமையும். அமைதி நிலவும், நிறைவாக முழுமைப் பேற்றையும் எய்தலாம். இறையுணர்வும் அறவுணர்வும் மனிதரில் வளர்ச்சி பெற்று நிறை வாழ்வு வாழ, மனிதர்க்கு உறுதுணையாக அமைவது கந்தபுராண கலாசாரம் ஆகும்.

ஆன்மிகம் மிகின் சுகம், இன்பம், மகிழ்ச்சி, ஆனந்தம் என்பன வாழ்வில் மிகும். தனக்கு மட்டுமல்ல சார்ந்தோருக்கும் நன்மையே மிகும். அதே வேளை, ஆணவம் மிகின், அழிவு தமக்கும், தம்மைச் சார்ந்தோர்க்கும் உறுதியாகி விடுகின்றது. கந்தபுராணம் கற்றுத் தரும் பாடம் இதுவாகும். கந்தபுராண

கலாசாரத்தை வாழ்வில் ஓம்பி வருபவர்களின் வாழ்வில் என்றும் இன்பம் என்பது அநுபவபூர்வமான உண்மை.

பழுதுபட்டிருந்த உலகினைச் சீர்செய்து, ஒழுங்கினை நிலைநிறுத்தி உலகினை உய்விக்க உதித்த முருகப் பெருமான், ஆணவத்தின் ஒட்டு மொத்தமாக விளங்கிய சூரபத்மன் என்பவனைச் சங்காரம் செய்தமை என்பது ஆணவமல ஒழிப்பு என்பதை விளக்குவதாக அமைகின்றது. மனிதர்களிடம் ஆணவம் மிகின் அழிவு மிகும். உலகில் ஒழுங்கு கெட்டு விடும், தருமம் குன்றும், ஆன்மிகம் மறைந்து விடும், உலகில் இயற்கை அனர்த்தங்கள் பெருகும், மக்களின் இயல்பு வாழ்க்கை சீர்குலைந்து விடும், தற்கால உலகில், இத்தகைய கொடுமைகளை நாம் நிதர்சனமாக கண்டு கொண்டும், வாழா விருக்கின்றோம்.

"அஞ்சுவ தஞ்சாமை பேதமை" - என்கிறது வள்ளுவம். ஆணவத்தைக் கண்டு அஞ்சாது, அதனை அரவணைத்து, அகத்துள் அமர்த்தி, ஆராதிப்பது எத்துணை பேதமை என்பது கந்தபுராணம் தரும் படிப்பினை. "நான்" எனும் அகங்காரமும் "எனது" எனும் மமகாரமும், ஆணவத்தின் குணவியல்புகள். அவை ஒழிந்த நிலையிலேயே ஆனந்தம் தோன்றும். கந்தபுராண கலாசாரம், அந்த வகையில், மனித வாழ்வை மேம்பாடு அடையச் செய்கிறது. விதித்தன செய்தல், விலக்கின ஒழிதல், தருமம், எனக் கந்தபுராண கலாசாரம் போற்றுகிறது.

அறம் கைவரப் பெற்றவர், அறவழிநின்று பொருள் ஈட்டுவர். "தீவினை விட்டு ஈட்டல் பொருள்" - என்பது ஔவையார் வாக்கு. "பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை", என்கிறது வள்ளுவம். தேடிய பொருள் நிலைத்து நிற்கவும், அதைக் கொண்டு இன்பம் துய்க்கவும், வேண்டுமானால், பொருளைத் தேடிய வழி, அறவழியாதல் வேண்டும். "அறத்தால் வருவதே இன்பம்", என்பது பொய்யாமொழி.

அறவழிநின்று பொருள் ஈட்டியவர்கள், அறவழி நின்று, அளவும் முறையும் தெரிந்து, இன்பம் துய்ப்பர். இன்பம் உலகில் நிலையான பண்டம் அல்ல என்பதை அநுபவரீதியாக அறிந்து, உலக இன்பங்கள் யாவும் சிற்றின்பங்களே என்ற முடிவிற்கு வருவர். பொய் கெட்டு, அதாவது இவ்வுலகில் தேடிய பொருளும், அடையப்பெற்ற இன்பமும் பொய்யானவை

என்பதை அறிந்து தெளிந்து, இப்பொய்ப் பொருள்களின் மீது கொண்டிருந்த பற்றுக்களை விட்டு விலகி, மெய்ப்பொருளைப் பற்றிக்கொள்வர். "பொய் கெட்டு மெய்யானார்" - அடையும் பேறு, வீடு பேறு என்பதாகும். அது மரணமிலாப் பெருவாழ்வு, நிலைத்த பேரின்பத்துடன் கூடியது.

"வாழ்க்கை வழி அறம், பொருள், இன்பம், வீடு, அரும்பு, மலர், காய், கனி. இவை புருஷார்த்தம். மனிதன் அடைய வேண்டியவை". - பண்டிதமணி -

"வையத்துள் வாழ் வாங்கு வாழ்பவன் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்". - திருக்குறள் *50*

"வையத்து வாழ்பவர்கள், "வாழ்வாங்கு வாழவேண்டும்". வாழ்வாங்கு வாழ்தலாவது, வாழவேண்டிய இயற்கைநெறியில் வாழ்தல். அ∴தாவது சான்றோர் கண்ட - அவர்கள் - காட்டிய - நெறிமுறை பிறழாது வாழ்தல். உண்மை எதுவோ, நன்மை எதுவோ, அந்த உண்மையை, நன்மையை நாடி, அவற்றை அடையும் பொருட்டு, வாழுதலே, வாழ்வாங்கு வாழ்தல் என்றுங்கூறலாம். அப்படி வாழ்வாங்கு வாழ்பவன், "வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படும்". மண்ணுலகத்தானே எனினும் அவன் விண்ணுலகத்தவனேயாவன். அவன் மனிதர்களுக்குள் தேவன்"
- பண்டிதமணி -

## சான்றோர் சமுதாயம்

கந்தபுராண கலாசாரம் என்பதன் சாரம், சான்றோர் சமுதாயத்தை உருவாக்குதல் ஆகும்.

"கல்வியறிவுடையவர், தாங்கற்றிந்தபடி நல்வழியிலே ஒழுகுதலும், நன் மாணாக்களுக்குக் கல்வி கற்பித்தலும், எல்லோருக்கும் உறுதியைப் போதித்தலுமாகிய இம்மூன்றையும், எந்நாளும் தமக்குக் கடனாகக் கொள்ளல் வேண்டும்". - நாவலர் பெருமான் -

கற்றல், கற்றபடி நிற்றல் ஆகிய இரண்டும் கல்வி எனும் நாணயத்தின் இருபக்கங்கள். அதில் ஒரு பக்கம் பழுதுபட்டாலும், நாணயம் மதிப்பிழந்து விடும். கல்வியைக் கசடறக் கற்று, கற்றாங்கு ஒழுகுபவரே சான்றோர்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக". - திருக்குறள் -

சான்றோர் சமுதாயம் என்பது கல்விச் சமுதாயம் இங்கு கல்வி என்னுஞ் சொல் குறித்து நிற்பது, அறவியற் கல்வியையேயாகும். அறம் சார்ந்த கல்வி, அறம் போதிக்கும் கல்வி, அதுவாகும். விழுமியக்கல்வி என்றும் ஒழுக்கக் கல்வி என்றும் தற்காலத்தில் கூறப்படுகின்றது.

"சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே", என்ற புறநானூற்றுப் பாடல் அடி, தந்தை, மகற்காற்ற வேண்டிய பிரதான கடமையைக் கோடிட்டுக் காட்டுகின்றது.

"தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
முந்தியிருப்பச் செயல்" - திருக்குறள் 67

தந்தை தனது மகனைச் சான்றோன் ஆக்குவதன் மூலமே கற்றவர் சமூகத்தில், அவனை முந்தியிருக்கச் செய்ய முடியும்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்" - திருக்குறள், 67

தன் மகனைப் பெற்ற காலத்து அடையப் பெற்ற அளப்பரிய மகிழ்ச்சியை விடப், பன்மடங்கு அதிக மகிழ்ச்சியைத், தன் மகன் நற்பண்புகள் நிறையப் பெற்ற சான்றோன் எனப் பிறர் சொல்லக் கேள்வியுற்ற தாயானவள் அகமகிழ்வாள்.

தம் மக்களின் அறிவுடைமை, பெற்ற தாய் தந்தையரை ஆனந்தமடையச் செய்வதை விட, உலகத்து மன்பதைக் கெல்லாம் இனிமையும் இன்பமும் பயப்பதாகவும் அமைகின்றது.

"தம்மின் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க்கெல்லாம் இனிது". - திருக்குறள், 68

மக்களைப் பெற்றுச் சீராக வளர்த்து, கல்வி வழங்கி, சான்றோர் ஆக்கி, உலகினுக்கு வழங்குதல் அறச் செயல் ஆகின்றது. சான்றோர், பொய், களவு, சூது, சினம், கொலை, பொறாமை, வஞ்சகம், மது, காமம் ஆகிய அறம் அல்லாத செயல்களுக்கு இடமளியாது, நல்ல அறம் தழுவிய காரியங்களையே விரும்பிச் செய்வர். அவர்கள் கற்ற அறவியல் கல்வி, அவர்களுக்கு அறம்

தெரிதல் மற்றும் அறம் அல்லாத மறம் தெரிதல் என்பவற்றிற்கான அறிவு, திறன், மனப்பாங்குகளை வழங்கும் தன்மையது.

இத்தகைய சான்றோர் சமுதாயம் உருவாகவும் தொடரவும் உறுதுணையாகக் கந்தபுராண கலாசாரம் யாழ்ப்பாண மக்களுக்கு அமைந்தமை, கந்தன் கருணையாகும். கந்தன் வேறு சிவன் வேறு அல்லர். இருவரும் ஒருவரே எனக் கந்தபுராணம் அறிவிக்கிறது. "கந்தபுராணம் முறையாய் நடந்த காலத்தில், எந்த நோயும் யாழ்ப்பாணத்தை எளிதில் அணுகியதில்லை", எனும் பண்டிதமணியின் கூற்று, சிந்திக்கற்பாலது.

## யாழ்ப்பாணத்தில் கந்தபுராணப் படிப்பு

"கந்தபுராணப்படிப்பு", என்பது, யாழ்ப்பாணப் பிரதேசத்தில் வழங்கி வருகின்ற, பொருள் பொதிந்த சொற்றொடர். புராணங்கேட்கும் மரபு ஒன்று, யாழ்ப்பாணப் பிரதேசத்துச் சைவத் தமிழ் மக்கள் மத்தியில் வளர்ந்து வந்தமைக்கு வரலாற்றுச் சான்றுகள் உண்டு. புராண படனம் செய்தல் என்று இதனை அழைக்கும் மரபும் உள்ளது. புராணங் கேட்கக் குருமரபு இன்றியமையாதது. இரவு வேளைகளில் தகுதி வாய்ந்த புராண வித்தகர்கள், புராண வகுப்புகளைக் கிராமங்கள் தோறும் நடத்தி வந்தனர். ஆலயங்கள், மடங்கள், என்பவற்றில் கந்தபுராணம் படித்துப் பயன் சொல்லப்பட்டு வந்தன. பொதுவாக, ஆண்டு தோறும் சித்திரை மாதத்தில், கந்தபுராணப் படிப்பு ஆரம்பித்துத் தினமும், பகல் நேரங்களில் நடைபெற்று, ஆனி மாத இறுதியில் நிறைவு பெறுவது வழமையாகும். ஆலயங்களில் மூன்றுமாத காலம் தொடர்ச்சியாக நடைபெறுகின்ற கந்தபுராணப் படிப்பில், குறித்த ஆலயச் சூழலில் வதிகின்ற சைவமக்கள் கலந்து கொண்டு பயன் பெறுவர். சைவ ஆசாரங்கள் உறுதியாகக் கடைப்பிடித்தல், நியதியாகப் பேணப்பட்டு வந்தது. இன்னமும் நடைமுறையில் உள்ளது. அகப்புறத் தூய்மையராக மக்கள் விளங்கி, கந்தபுராண கலாசாரம் தழைத்து ஓங்கி வளர்வதற்குக், கந்தபுராணப் படிப்பு பெரும் உந்து சக்தியாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்துக் கோயில்களில் நடைபெறும் கந்தபுராணப் படிப்புக்கேட்க வருபவர்களில் பெரும்பாலானவர்கள், பெண்களேயாவர், என்பது நோக்கற்பாலது. சைவ ஆசாரங்கள்,

கந்தபுராண கலாசாரம், யாழ்ப்பாணத்தில் பேணிப் பாதுகாத்து வந்தமைக்கும், நிலைத்து நீடித்தமைக்கும் பிரதம காரண கர்த்தாக்களாக விளங்கி வருபவர்கள் பெண்களே என்றால், அக்கூற்று மிகையாகாது.

"ஒரு காலத்திலே இந்த யாழ்ப்பாணத்திலுள்ள ஆடவர்கள், மகளிர்கள், முதியவர்கள், இளையவர்கள் ஆகிய எல்லோருடைய இரத்தத்திலும் கலந்து நரம்புத்துய்கள் தோறும் ஊறிச்சுரந்து கொண்டு இருந்தது கந்தபுராணம்", என்கிறார் பண்டிதமணி. இந்தக் கந்தபுராணப் படிப்பும், பயன் கேட்டலும் தான் யாழ்ப்பாணப் பிரதேசங்களில், புறச் சமயங்கள், அந்நிய கலாசாரங்கள், மிலேச்ச நாகரிகங்கள் என்பன நம்மவரிடையே புகுந்து, சைவத்தமிழ்ப் பண்பாட்டினைப் பழுதுபடுத்தாது, பாதுகாத்தன.

**படிப்பும் பயனும்.**

கந்தபுராணம் படித்துப் பயன் சொல்லுதல் என்ற வார்த்தைப் பிரயோகமே மக்கள் வழக்கில் இருந்து வந்தமை குறிப்பிட்டத்தக்கது. பொருள் சொல்வது அல்லது கருத்துரை வழங்குவது என்று கூறப்படுவதில்லை. இங்கு "பயன்" என்ற சொல் சுட்டி நிற்பது, வாழ்க்கைப் பயன்களையாகும். அறம், பொருள், இன்பம் வீடு என்பன வாழ்க்கைப் பயன்களாகச் சைவ சமயத்தவர் கொள்வர். கந்தபுராண கலாசாரம் கந்தபுராணப் படிப்புக் கேட்டதன் பயனாகக் கிடைக்கப் பெற்ற பேறு ஆகும். கந்தபுராணம் தந்தது தான் கந்தபுராண கலாசாரம். அதேவேளை, கந்தபுராண கலாசாரம் வலுப் பெற்றிருந்தமையினாலேயே, கந்தபுராணப்படிப்பும், புராணம் கேட்டலும் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் வளர்ச்சியும் தொடர்ச்சியும் பெற்று வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

"கற்றலில் கேட்டல் நன்று" - என்பதைக் கந்தபுராணப் படிப்பு, உறுதி செய்கின்றது. யாழ்ப்பாணத்தில் மரபு வழிக் கல்விப்பாரம்பரியம் தனித்துவம் பெற்றிருந்தமையினால், அதன் வழிவந்த சைவசமய ஆசார ஒழுக்கங்களும், தமிழ்ப் பண்பாட்டு வாழ்வியல் விழுமியங்களும் மக்கள் மத்தியில் நன்கு ஊறியிருந்தன. உயிர்க்கொலை, களவு, பொய், மதுபாவனை, காமம், புலாலுண்ணல், போன்ற செய்யத்தகாத செயல்களென விலக்கியனவற்றைச் செய்யாது ஒழிதல் தர்மமாகக் கொள்ளப்பட்டுப் பெரிதும் கடைப்பிடிக்கப்பட்டும் வந்தன.

## நாவலர் தந்த சிவபுராண விதி

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சிவபுராண விதி தொடர்பாக விளக்கம் தந்துள்ளார். சைவ சமயிகள், மக்கள் யாவர்க்கும் பொதுவாக வேண்டப்படும் இலக்கணங்களை, அதாவது மனித ஒழுக்க விழுமியங்களை வழுவாது கடைப்பிடித்துக் கொண்டே, தங்களுக்குச் சிறப்பு வகையால் விதிக்கப்பட்டுள்ள சைவசமய இலக்கணங்களை - ஆசாரங்களைத் தவறாது பேணி ஒழுகல் இன்றியமையாதது. கந்தபுராண கலாசாரம் இதனை வாழ்க்கைத் தருமமாக வலியுறுத்துகிறது.

"பொது இலக்கணங்களாவன: கொல்லாமை, புலாலுண்ணாமை, கள்ளாமை, கள்ளுண்ணாமை, பிறர்மனை நயவாமை, வரைவின் மகளிர் நயவாமை, இரக்கம், வாய்மை, பொறை, அடக்கம், கொடை, தாய்- தந்தை முதலிய பெரியோரை வழிபடுதல் முதலிய நன்மைகளாம்." - ஆறுமுகநாவலர்.

சிறப்பிலக்கணங்களுள், புறத்திலக்கணம் என்னும் பிரிவில் அடங்குபவை: "விபூதி, உருத்திராட்சம் என்னுஞ் சிவசின்னங்களைத் தரித்தல், குருவை வழிபடல், சிவபெருமானைத் தோத்திரஞ் செய்தல், சிவநாமங்களை உச்சரித்தல், சிவபெருமானைப் பூசை செய்தல், சிவதருமங்களைச் செய்தல், சிவபுராணங் கேட்டல், சிவாலய தரிசனஞ் செய்தல், சிவனடியார்களிடத்தன்றிப் பிறரிடத்துப் போசனம் பண்ணாமை, சிவனடியார்களுக்குக் கொடுத்தல் என்பவைகளாம்." - ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்.

அகத்திலக்கணம் மூன்று. அவையாவன, "பஞ்சாட்சரத்தை, மானதமாகச் செபித்தல், மானத பூசை, சிவபெருமானைத் தன்னோடு பிரிவறக் காண்டல் என்பவைகளாம்" - ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்.

## கந்தபுராணச் சிறப்பு:

சிவபுராணங்கள் பத்து அவையாவும் சைவசமயிகளுக்குரியவை. அவற்றுள் தலையாயது கந்தபுராணம் என்பது நாவலர் பெருமானின் நிலைப்பாடு. புண்ணியங்கள் - (நற்செயல்கள்- நற்காரியங்கள்)இவையென்பதையும் அவற்றின் பயனாகிய இன்பத்தையும், கொலை முதலிய பாவங்கள் இவையென்பதையும்

அவற்றின் பயனாகிய துன்பத்தையும் அறிவிப்பது கந்தபுராணம் ஆதலால் அதன் சிறப்பினை நாவலர் பெருமான் விதந்து கூறியுள்ளார். ஆதலால் சைவசமயிகள் யாம் கந்தபுராணம் கேட்டல் வேண்டும் என அழுத்திக் கூறியுள்ளமை, கவனத்திற்குரியது. அதுவும் கந்தபுராண விதிப்படி மெய்யன்போடு கேட்கக் கடவர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

### விதி முறைகள்:

கந்தபுராணம் படித்துப் பயன் சொல்லுதற்கு உரிய இடங்களாவன தேவாலயம், திருமடம், நதிக்கரை, குளக்கரை, திருநந்தவனம், யாகசாலை முதலிய தூய இடங்களாகும்.

"நவ்லொழுக்கமுடையவராய், நிகண்டு கற்று இலக்கியவாராய்ச்சி செய்து இலக்கணநூல் பயின்றவராய், நீதி நூல்களையும் சைவ நூல்களையும் ஓதியுணர்ந்தவராய், சந்தியாவந்தனம், சிவபூசை முதலிய நித்தியகருமங்களைத் தவறாமல் விதிப்படி சிரத்தையோடு செய்பவராய் உள்ளவர்," கந்தபுராணம் படித்துப் பயன் சொல்வதற்குத் தகுதியும் தகைமையும் உடையவராவர். என நாவலர் பெருமான் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கந்தபுராணபடனம் சுபதினத்தில், சுபமுகூர்த்தத்தில் ஆரம்பித்தல் வேண்டும். ஆரம்பிக்கும் தினத்திலும் முடிக்கும் தினத்திலும்திருக்கல்யாணம் முதலிய சுபசரித்திரங்கள் படிக்குந் தினங்களிலும் சிவபுராண மண்டபத்தை கோமயத்தினாலே திருமெழுகிட்டுக் கமுகுகளையும், வாழைகளையும், கரும்புகளையும் நாட்டி மேற்கட்டி கட்டி, கொய்யப்பட்ட பட்டுக்களையும் பூமாலைகளையும் தூக்கி அலங்கரித்தல் வேண்டும்." - நாவலர் பெருமான்.

### ஈகை உணர்வு வளர்ச்சி:

மகேஸ்வரபூசை என்னும் அன்னதானம் விசேட தினங்களிலும், புராணப்படிப்பை முடிக்கும் தினத்திலும் இடம் பெறும். "ஈதல் அறம்" என்னும் கோட்பாடு இங்கு செயற்பாடு ஆகின்றது. "உண்ணும் போது ஒரு கைப்படி" உணவையாவது

பிறருக்கு வழங்க வேண்டும் என்னும் ஈகை உணர்வைக், கந்தபுராண கலாசாரம் போற்றி வளர்த்து வருகின்றது. பிடியரிசி சேகரித்துச் சமய, சமூகப்பணிகளுக்குப் பயன்படுத்தும் முறைமை நாவலர் பெருமானால் ஆரம்பிக்கப்பட்டு யாழ்ப்பாணப் பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தினமும் சோறு சமைக்கும் போது அரிசியை உலையில் இடுவதற்கு முன், அதில் ஒரு கைப்பிடி அரிசியை எடுத்து, ஒரு பானையிலோ "குட்டான்" என அழைக்கப்படும் பனை ஓலையினால் இழைக்கப்பட்ட ஏதனத்திலோ இட்டு வைப்பார். ஒரு குறிப்பிட்ட எல்லை கால முடிவிலோ, அல்லது ஒவ்வொரு மாத முடிவிலோ, சேமிக்கப்பட்ட அரிசியாவும் சேகரிக்கப்பட்டுச் சமய, சமூகப்பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளமை, கந்தபுராண கலாசாரம் எந்த அளவிற்கு மக்கள் அனைவரையும், ஏழை, செல்வந்தர் என்ற பாகுபாடு இன்றி, மக்கள் பணியில் ஈடுபடுத்திச் சமத்துவம் பேண, வாய்ப்பளித்தது என்பதற்கு சான்றாக அமைகின்றது. " "ஐயம் இட்டு உண்" "ஒப்புரவொழுகு" என்னும் ஔவை வாக்குகள் கந்தபுராண கலாசாரம் மூலம் உயிர்ப்புப் பெறுகின்றன.

> "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
> தொகுத்தவற்றுள் எல்லாந் தலை" - திருக்குறள்,322

தமக்குக் கிடைக்கப்பெற்றவற்றைப் பகுத்து மற்றையோருக்குக் கொடுத்துத் தானும் உண்டு, பல உயிர்களையும் காப்பாற்றுதல், அறநூலார் தொகுத்துத் தந்த அறங்கள் அனைத்திலும் தலையான அறமாகும் என்பது தமிழ் வேதம் தரும் கருத்து ஆகும். "மக்கள் சேவையே மகேசன் சேவை," என்பதை கந்தபுராண கலாசாரம் போற்றி வளர்க்கின்றது. கந்தபுராண கலாசாரம் பற்றிய உண்மை நிலையை அறிந்து கொள்ளாதவரே, சைவசமயம் சமூகநோக்கினைக் கொண்டிருக்கவில்லை என்ற பொய்ப்பிரசாரத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

**கந்தபுராண கலாசார இலட்சணங்கள்:**

மனிதர்கள், அகப்புறத்தூய்மை, அன்பு, கருணை, நீதி, உண்மை சமத்துவம், ஈகை, நல்லொழுக்கம், சீவகாருண்ணியம், தானதர்மங்கள், பிறர்நலம் பேணல் போன்ற நல்லவற்றையெல்லாம்

வாழ்க்கையில் பேணவும், அல்லனவற்றையெல்லாம் புறந்தள்ளி அவற்றை அலட்சியம் பண்ணவும், தேவையான மனஉறுதி, தைரியம், வைராக்கியம், துணிவு என்பவற்றை கந்தபுராண கலாசாரம் அவர்களுக்கு வழங்கி, உறுதுணையாக அமைந்துள்ளமை நோக்கற்பாலது.

பிறருடைய உடலுக்கோ, மனத்திற்கோ துன்பம் ஏற்படுவதை தவிர்க்க வேண்டும். உணவுக்காகப் பிற உயிர்களைக் கொல்லுதல் ஆகாது. பிற உயிர்கள் அனைத்திற்கும் வாழும் சுதந்திரமும் உரிமையும் உண்டு. அவற்றைப் பறித்துக் கொள்ளாது, மதித்து வாழ வேண்டும்.பிறருக்கு உரித்தான பொருள்களையோ, சொத்துக்கள் சுகங்களையோ, பணம் உடமைகளையோ ஏமாற்றிப் பறித்தல், திருடுதல், வன்முறைகள் மற்றும் சூது, வாது, சூழ்ச்சி மூலம் கவருதல், விளையாட்டுக்காயினும் பொய் பேசுதல், மெலியாரைத் தாக்குதல், பரிகசித்தல், புறங்கூறுதல், ஏசுதல், திட்டுதல், இழிவான வன்சொல் பேசுதல் என்பவற்றைத் தவிர்த்தக் கொள்ளுதல் வேண்டும். மச்ச மாமிச உணவுகள், மது அருந்துதல், போதைப்பொருட்பாவனை, முறையற்ற எதிர்ப்பால் கவர்ச்சி இவற்றை அறவே ஒழிக்க வேண்டும். பெரியோர்கள், தாய்தந்தையர்கள், மூத்தோர்கள், சமயகுருமார்கள், கல்வி கற்பித்த ஆசிரியர்கள், தாய்க்குலத்தவர்கள் ஆகியோரை நிராகரித்தல், அவர்களுக்கெதிரான வன்முறைகளில் ஈடுபடுதல், அவமதித்தல், வெறுத்தல், பகைத்தல் ஆகாது. அவர்களை மதித்தும், மரியாதை செய்தும், அவர்கள் சொற்கேட்டும், அவர்களின் உணர்வுகளிற்கு மதிப்பளித்தும், பணிவன்புடன் அவர்களைப் பேணிப் பராமரித்தும் பாதுகாத்தும் வாழ வேண்டும். இவ்வாறான உணர்வையும், உத்வேகத்தையும், செயலூக்கத்தையும், யாழ்ப்பாணப் பிரதேசத்தில் வாழ் மக்களிடையே, குறிப்பாக இளையோர்கள் மத்தியில், கந்தபுராணப்படிப்பும் அதன் வழி வந்த கந்தபுராண கலாசாரமும் விதைத்து, வளர்த்து, நெறிப்படுத்தி, இறை நம்பிக்கை, நன்னடத்தை, நல்லொழுக்கம், சான்றாண்மை, அறநெறி பிறழாத வாழ்வுமுறை, சமூகநலன், அமைதி என்பன கொண்ட சமூகத்தை உருவாக்குவதில் முனைப்பாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

நீதியை, அறத்தை, தருமத்தை மறுப்பவர்கள் வாழ மறுத்தவர் ஆகிவிடுகின்றனர். இது கந்தபுராண கலாசாரம் ஓங்கி உரைக்கும் உண்மைச் செய்தி. கந்தபுராண கலாசாரம் என்னும்

வாழ்க்கை நெறியை, அது சுட்டும் மேன்மைகொள் சைவ நீதியை இலட்சியம் செய்து, பொருள் செய்து, நடைமுறைவாழ்வில் அநுசரித்து வாழ்ந்து வருபவர்களுக்கு உண்டு நிறைவாழ்வு, அதனை மறுத்து, அலட்சியம் செய்வோருக்கு உண்டு தாழ்வு. இது நிச்சயம்.

"நீதி என்ற தமிழ் வார்த்தையில் அடங்காத தருமம் இல்லை. சத்தியம், அஹிம்சை, இரக்கம் பொறை, அடக்கம் முதலிய தருமங்கள் எல்லாம் இதில் அடங்கும்". - பண்டிதமணி -

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்", எனக் கந்தபுராணம் தரும் வாழ்த்துச் செய்தி, கந்தபுராண கலாசாரத்தின் உலகளாவிய தகைமையையும், பொருத்தப்பாட்டினையும், உறுதி செய்வதாக உள்ளது. நீதி என்பது ஒன்றுதான். எல்லோருக்கும், எந்நாட்டிற்கும், எக்காலத்திற்கும் பொதுவானது.

கந்தபுராண கலாசாரம், நீதியை உச்சி மேற்கொண்டு போற்றுகிறது.

**கந்தபுராண கலாசார வரலாற்றுப் பின்னணி**

யாழ்ப்பாணப் பிரதேசத் தமிழ் மக்கள் நெடுங்காலமாகப் பெரிதும் பின்பற்றியும் பேணியும் வந்த கலாசாரம், கந்தபுராண கலாசாரமே, என்பதைப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, தமக்கேயுரிய ஆய்வு முறையினால் நிறுவியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பண்டிதமணியின் பின்வரும் கூற்றுக்கள் இது தொடர்பாகக் கருத்தில் கொள்ளற்பாலன.

"யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழரசர்கள், ஒருவர் பின் ஒருவராய்ப் பன்னிருவருக்கு மேற்பட்டவர்கள். அவர்களுள் ஒருவனான தமிழரசனின் மந்திரி, புவனேகபாகு. அவர் பிராமணர். கங்காதரக் குருக்கள் என்பது இயற்பெயர். அவர் கி.பி. 950 இல் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைக் கட்டினார்".

"இலகிய சகாத்த மெண்ணூற் றெழுபதா மாண்டதெல்லை
அலர்பொலி மாலை மார்ப னாம்புவ னேகவாகு
நலமிகு யாழ்ப்பாணத்து நகரிகட்டுவித்து நல்லைக்
குலவிய கந்தவேட்குக் கோயிலும் புரிவித்தானே".

என்ற பாடல் சரித்திரப் பிரசித்தி வாய்ந்தது. - பண்டிதமணி -

"நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்கு 170 வருடம் முந்தியது. கந்தபுராணம்". - பண்டிதமணி -

"சகாத்தத்துடன் 77 ஆண்டைக் கூட்ட வருவது கிறிஸ்தாப்தம்". - பண்டிதமணி -

"இதன்படி கணித்துப் பார்ப்பின், கி. பி. 857 ஆம் ஆண்டளவில் கந்தபுராண அரங்கேற்றம் நடைபெற்றிருக்கலாம் எனத் துணியலாம். கச்சியப்பர் கந்தபுராணம் பாடி, அரங்கேற்றிய காலத்திலேயே, கந்தபுராண படனம் யாழ்ப்பாணத்திலும் தொடங்கிவிட்டது என எண்ண இடமுண்டு", என்கிறார் பண்டிதமணி.

அரச வம்சத்தவனான வீரராகவன் என்பவன் கவிதை இயற்றுவதிலும் இசைத்துறையிலும் வல்லவன். கந்தபுராணம் இயற்றிய கச்சியப்ப சிவாசாரியாரோடு உடன் கல்வி கற்றவன். (சுன்னாகம் திரு. அ. குமாரசுவாமிப்புலவர் எழுதிய தமிழ்ப் புலவர் சரித்திரம் இதற்கு ஆதாரம்.)

வீரராகவன் தான் யாழ்ப்பாடி என அழைக்கப்பட்டவன். மாருதப்பிரவல்லியின் மகன் பாலசிங்கனிடம், "மணற்றி" என அழைக்கப்பட்ட, இலங்கையின் வடபால் அமைந்துள்ள நிலப்பரப்பினைப் பரிசிலாகப் பெற்றவன். "மணற்றி" யாழ்ப்பாடியின் கைக்குக் கிடைத்தபின், யாழ்ப்பாணம் என்ற பெயரைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. தமிழரசர்களான ஆரியச் சக்கரவர்த்திகளுக்கு முன்னமே யாழ்ப்பாணத்தை ஆண்டவன், அந்த யாழ்ப்பாடி. இவன் அந்தகன் அல்லன், அந்தகக்கவி வீரராகவன் என்ற கவிஞன் வேறு, வீரராகவன் எனப்படுகின்ற யாழ்பாடி வேறு, என்பது பண்டிதமணியின் கண்டு பிடிப்பு.

இந்த யாழ்ப்பாடியுடன் யாழ்ப்பாணம் வந்தவர் கச்சிக் கணேசையர். "கச்சி" என்பது காஞ்சிபுரம். அங்குதான் கந்தபுராணம் அரங்கேற்றப்பட்டது.

"கச்சியப்பரின் சகபாடியாகிய யாழ்ப்பாடியும் கச்சிக் கணேசையரும், கச்சியில் (காஞ்சிபுரம்) நடந்த கச்சியப்ப சுவாமிகளின் கந்தபுராண அரங்கேற்றத்தில் பங்குபற்றியிருப்பர். அந்த இருவரும் கந்தபுராணம் உதயஞ்செய்தபோதே அதன் பிள்ளைமைப் பருவத்திலேதானே, அதனை யாழ்ப்பாணத்துக்குக் கொணர்ந்து புதியதொரு தனிமுறையை இந்நாட்டுக் கோயில்களுக்கேற்ப அமைத்து, கோயில்கள் தோறும் கந்தபுராண படனத்தையும், ஏனைய புராண படனங்களையும் நடத்தியிருப்பர், என்றிங்ஙனம், ஊகிக்கலாம்", எனப், பண்டிதமணி குறிப்பிட்டுள்ளமை கவனிக்கப்படவேண்டிய ஆய்வுக்குறிப்பு ஆகும்.

கந்தபுராண படனம், யாழ்ப்பாணத்துக் கோயில்களிலும், மடங்கள் முதலிய புனித இடங்களிலும், தமிழ் அரசர்கள் அரசாட்சி செய்த காலத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

"அர்ச்சனை பாட்டே ஆகும் ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடுக என்றார் தூமறை பாடும் வாயார்".

எனச் சேக்கிழார் பெருமான், இறைவனின், தமிழ்ப்பாடல்கள் மீதான விருப்பினைப் பாடியுள்ளார். புராண படனம் இறைவனை வழிபாடு செய்வதற்கு, மிகவும் உவந்த சாதனம் என்பதை நம் முன்னோர் அறிந்து, செயல்படுத்திவந்துள்ளனர்.

சைவசமய நெறி, மக்களின் வாழ்க்கை முறையோடு இணைந்து, வளம்படுத்தும் தன்மையது. மனிதரின் பழக்க வழக்கங்கள், பண்பாடு, பாரம்பாரியங்கள், கலாசார, ஒழுக்க மற்றும் ஆன்மீக விழுமியங்கள், இறையுணர்வு, இறைநம்பிக்கை, அறநெறிகள் என்பன சைவசமயம் அடிப்படையிலான வாழ்க்கையோடுதான் இணைந்தும் வளர்ச்சி பெற்றும், அடுத்துவரும் தலைமுறையினருக்குக் கையளிக்கப்பட்டும் வருகின்றன. அந்த வகையில், கந்தபுராண படனம் ஒரு நயத்தக்க நாகரிக கலாசாரத்தை உருவாக்கி, யாழ்ப்பாணத்து மக்கள் மத்தியில் வளர்த்து வந்துள்ளமை, நன்றியுணர்வோடு நினைவு கூரத்தக்கது.

## அந்நியர் வருகையும் கந்தபுராண கலாசாரப் பின்னடைவும்

கந்தபுராண படனம் மற்றும் புராணபடனங்கள், கி.பி. 1505 ஆம் ஆண்டுக்குப்பின், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயர் ஆட்சிக்காலங்களில், அந்நிய ஏகாதிபத்திய ஆட்சியாளர்களின் கொடுங்கோன்மைக்கு அஞ்சி, ஏறத்தாழ முந்நூறு ஆண்டுக் காலம், நிறுத்தப்பட்டிருந்தன. கந்தபுராண கலாசாரம், சைவ ஆசாரங்கள் என்பனவற்றை வெளிப்படையாகப் பின்பற்றி, ஒழுக முடியாத ஓர் அவலச் சூழ்நிலை காணப்பட்டது.

மக்களைப், “புன்னெறியதனிற் செல்லும் போக்கினை விலக்கி”, மேலாம் நன்னெறியில் ஒழுகச் செய்து, மேலோர் சான்றோர், பண்புடையோர் எனப்போற்றப்படுவதற்கு ஆதாரமாகவும், உந்துசக்தியாகவும் விளங்கி வந்த கந்தபுராணம், மற்றும் கந்தபுராண கலாசாரம், தலைமறைவில் அடங்கி, ஒடுங்கிக் கிடக்க வேண்டியதாயிற்று.

“கந்தபுராணத்திலே தமிழும் சைவமும் ஓங்கி வளர்ந்து வருகின்ற யாழ்ப்பாணத்துக்கு ஒரு நாள் கண்ணூறு உண்டானது” - பண்டிதமணி -

“மிலேச்சர்களான பறங்கியர்கள் யாழ்ப்பாணத்தை எட்டிப்பார்த்தார்கள். அன்றே நமது நாட்டுக்கு வந்தது நாசம். தமிழ் அரசு மறைந்தது”. - பண்டிதமணி -

“தமிழரசர்கள் யாழ்ப்பாணத்து நல்லூரிலே ஒரு தமிழ்ச்சங்கம் தாபித்திருந்தார்கள். இரகுவம்சம் என்கின்ற தமிழ் இலக்கியம், பரராசசேகரம். என்கின்ற ஒப்புயர்வில்லாத வைத்தியம், செகராசசேகரம் என்கின்ற சோதிடம், அந்தச் சங்கத்தின் பெறுபேறுகள். தமிழரசுடன் சங்கமும் தொலைந்தது. காக்கைவன்னியன் என்கின்ற கோடரிக் காம்பு பறங்கியரை வரவேற்றான். திருக்கேதீச்சரம், திருக்கோணமலை, ஆகிய தேவாரம் பெற்ற புண்ணியஸ்தலங்களும் மற்றும் சைவாலயங்களும் தரைமட்டமாயின. .... தலைப்பாகை வைக்கிறவர்கள் சிலுவைக் குறித்தலைப்பாகை வைக்கவேண்டுமென்பது சட்டம். வாழையிலையில் சாப்பிடுவதே சமயத்துரோகம். பசுக் கொலை பெரிய புண்ணியம்.... இவ்வாறே நூற்றைம்பது வருடகாலம்

கழிந்தது. அதன்மேல் ஒல்லாந்தர் கண்வைத்தார்கள். அவர்களும் பறங்கியர் (போர்த்துக்கேயர்) போலவே, நூற்றுமுப்பது வருடம் யாழ்ப்பாணத்தைத் தலைகீழ் செய்தார்கள். ஏறக்குறைய முன்னூறு வருடகாலம் யாழ்ப்பாணத்தின் துரதிஷ்ட காலம். .....யாழ்ப்பாணம் அழகுகுலைந்து கிடந்தது. ஆனால் யாழ்ப்பாணத்தின் அகத்தே தமிழரசர் காலத்திலே சைவாலயங்களில் ஆரம்பித்து வைத்த கந்தபுராண ஊற்றுநரம்புத் தூய்கள் தோறும் குமுறிக் கொண்டிருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் வந்து சேர்ந்தார்கள், வெளிக்கு நல்ல பிள்ளைகளான வெள்ளையர்கள் (ஆங்கிலேயர்)".

- பண்டிதமணி -

"பறங்கியர் ஒல்லாந்தர் காலத்திலே சைவ சமயத்திற்கு வந்த வருத்தம் சிரங்கு வருத்தம் போன்றது. அது வெளித்தோல் வருத்தம். உள்ளூரச் சமயம் உயிரைப் பற்றி நின்றது. ஆங்கிலேயர் காலத்திலே சமயத்திற்கு வந்த வருத்தம் கசவருத்தம் போன்றது. உயிரைக் கொல்லுகின்ற வருத்தம் அது. உட்பகையான வருத்தம். புறப்பகையில் உட்பகை பொல்லாதது."

- பண்டிதமணி (மரகதம்-1962).

"ஆங்கிலேயர் சர்வசமய சுயாதீனம் தமது இலட்சியம் என வாய் மலர்ந்தார்கள்........ அவர்கள் கசக்கிருமிகள். பறங்கியர், ஒல்லாந்தர் அன்றறுக்கின்றவர்கள். இவர்கள் (ஆங்கிலேயர்) நின்றறுக்கின்றவர்கள். வெள்ளையர் (ஆங்கிலேயர்) மிகமிக நல்ல பிள்ளைகளாய் நமது சந்ததிக்கு இரங்குகின்றவர்கள் போன்று கல்வியைக் கிறிஸ்தவப் பாதிரிகளிடம்ஒப்பித்தார்கள் அவர்கள்.

"நல்லவழி காட்டுவோம் உடுபுடவை சம்பளம் நாளுநாளுந் தருவோம் நாம் சொல்வதைக் கேளும்" என்று மருட்டித் தமது நாட்டுக் கல்வியைப் பரப்ப ஆரம்பித்தார்கள். கந்தபுராணம் தாண்டவம் ஆடுகின்ற திண்ணைப் பள்ளிக்கூடங்கள் ஒதுங்கி மறைந்தன. கந்தபுராண கலாசாரத்திற்கு மெல்ல மெல்ல வெந்நீர் விடத் தொடங்கினார்கள். அந்த அந்தச் சமயத்தவர்களுக்கு அவ்வச் சமயத்தில் அவர்கள் வைத்திருக்கும் விருப்பைக் குலைப்பதே வெள்ளைக்கல்வியின் அடிப்படை நோக்கமாயிருந்தது. மூலவேரில் வேலை செய்தார்கள் ஆங்கிலேயர்கள். ......... யாழ்ப்பாணமாகிய பாவையை வேண்டியவாறு கூத்தாட்டிக் கொண்டிருந்தார்கள். காரியந்தெரிந்தவர்களின் உள்ளங் கொதித்தது. அந்தக் கொதிப்பு கந்தபுராணக் கொதிப்பு. அக் கொதிப்பினின்றும் ஒரு குழந்தை

யாழ்ப்பாணத்து நல்லூரிலே கொதித்துக் கொண்டே உதயஞ் செய்தது ..... குழந்தை வளருகின்றது. குழந்தையின் சூழல் பொல்லாத கிறிஸ்தவ சூழல். ஆயினும், அக்குழந்தை, கந்தபுராண உதிரத்தில் பிறந்து, கந்தபுராணத்தில் வளர்ந்தது." - பண்டிதமணி -

## நாவலர் மீட்ட கந்தபுராண கலாசார தீபம்:

அந்தக் குழந்தை தான், பின்னர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலராகப் பரிணமித்தது. கந்தபுராணப் படிப்பு மற்றும் கந்தபுராண கலாசாரம் என்பவற்றிற்குப், புத்துயிர்ப்பு அளித்து, மீண்டும் யாழ்ப்பாணத்தில்துளிர் விட்டு வளர்ச்சி பெறச் செய்த வள்ளல் ஆகத் திகழ்பவர் நாவலர் பெருமான்

"கந்தபுராணப் படிப்பு, நாவலர் காலத்திலே உச்ச நிலையை அடைந்தது ... சைவாலயங்கள் தமிழும் சைவமும் வளரும் சர்வகலாசாலைகள் ஆயின." - பண்டிதமணி.

"இந்தியாவிலோ வித்துவான்கள், சைவகுருமார் முதலியோருள்ளுங் கந்தபுராணம் முதலியன அறிந்தவர் சிலர். இத்தேசத்திலோ பெண்களுள்ளும்அவை அறியாதோர் இலர்" .... என நாவலர் பெருமான் தமது யாழ்ப்பாணச் சமயநிலை என்னும் பிரசுரத்தில் குறிப்பிட்டுள்ளமை நோக்கற்பாலது.

"கந்தபுராணம் யாழ்ப்பாணத்துப் பெண்களின் உதிரத்தில் நன்கு ஊறியிருந்தது" என்கிறார், பண்டிதமணி

கந்தபுராண கலாசாரம் இடையூறுகளின் மத்தியிலும் யாழ்ப்பாணப் பிரதேசத்தில், தொடர்ந்து கட்டிக் காத்து வந்தவர்கள், பெண்களே என்றால் மிகையாகாது.

"பாதிரிமார்கள் கிறிஸ்து மதம் எத்தேசத்திற் பரவினும் பரவும், யாழ்ப்பாணத்தில் உள்ளபடி பரவாது என்று அந்தரங்கத்திற் புலம்புகின்றார்கள்." - நாவலர் பெருமான்.

கந்தபுராண கலாசாரம் நன்கு வேரூன்றி இருந்தமை காரணமாகவே, யாழ்ப்பாணத்திலே, சைவசமயத்திற்கு புறச் சமயிகளால், பேரிடர்கள் ஏற்படுத்தப்பட்ட போதும் அது அழிவினின்றும் காப்பாற்றப்பட்டது.

கந்தபுராண கலாசாரம் ஒரு முக்கியமான காலகட்டத்தில் ஒரு நாவலரைத் தந்தது. இது ஓர் அற்புதமான நிகழ்வு. யாழ்ப்பாணத்து மக்களின் சமய, ஆன்மிக, கலாசார சுதந்திரம் மீட்டெடுக்கப்பட்டது.

## நிறைவுரை

"கடவுளும் புண்ணிய பாவமும், சுவர்க்க நரகமும், மறுபிறப்பும் முத்தியும் உண்டென்னும் உண்மையை ஒருபோதும் மறந்தலாகாது," என நாவலர் பெருமான் வலியுறுத்தியுள்ளார். கந்தபுராண கலாசாரத்தின் அடிநாதமாக இக்கூற்று விளங்குகிறது. தன்னம்பிக்கையே நல்வாழ்க்கையாகும். "கடவுளை வணங்கி, அவருடைய திருவருள் வசமாய் நின்றபின் அன்றி, பாவபுண்ணியங்களை ஒழித்துப் புண்ணியங்களைச் செய்தலும் நம்மால் இயலாவாம்." இக்காலத்தவர்கள் நல்லது, கெட்டது, நலம், தீது, பிரித்தறியத் தெரியாமல் கருமமாற்றி வருவது கண்கூடு. கருமங்கள் பெரும்பாலும் தோல்வியைத் தழுவுவதற்கு அதுவே காரணம். பெரியோர் வார்த்தைகளிற்கு மதிப்பளித்தும், அவர்களை விசாரித்தும் அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பதை ஆராய்ந்து அறிந்தும், அவர்கள் பெற்ற அனுபவங்களிலிருந்து பாடங்களை கற்றும் கருமமாற்றுபவர்கள், வெற்றி பெறுவது உறுதி. கடவுளின் திருவருள் துணையுடன் அறிவில் தெளிவும் உயர்வும் பெறுபவர், பெரியோர். அதனாலேயே, பெரியோர் வார்த்தை அமிர்தம் எனக் கொள்கிறது, கந்தபுராண கலாசாரம். நாவலர் பெருமான்போற்றி வளர்த்த கலாசாரம் , பண்டிதமணி போஷித்துப் பரப்பிய கலாசாரம், கந்தபுராண கலாசாரம். அதனைத் தவறாது வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகி, வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் கடமையும் கடப்பாடும் ஆகும்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

## Panditḥamani, Dr. S. Kanapathippillai -1899-1986

Pandithamani, Dr. S. Kanapathippillai, an eminent Tamil scholar was born on 27-06-1899, at Madduvil, in the Thenmaradchi Division of Jaffna District. His father, Sinnathamby hailed from Madduvil and mother Valliammai from Thanankilappu, a village on the border of Chavakachcheri. He had his early education at Madduvil American Mission school. During his early school years and after, he learned Tamil literature and grammar from local Tamil scholars according to the guru-shisya tradition.

From 1917 to 1926, Kanapathippillai had his higher education at Sri La Sri Arumuga Navalar Kaviya Padasalai (Navalar Higher Institute of Traditional Tamil Education) situated at Vannarpannai, Jaffna. Here, he had the rare opportunity of learning Tamil Literary works under scholars like Chunnakam Kumaraswamy Pulavar and Navalar's nephew Srimath T. Kailasapillai. His association with Vidwasiromani Ponnambalapillai, a nephew of Navalar, during this period, had created in him, an awareness in Literary criticism and appreciation.

In 1926, Kanapathippillai passed his Tamil Pandit examination, conducted by the Mathurai Thamil Sangam with distinction. Then he gained admission to Kopay Teachers' Training College where he obtained the Trained Teachers Certificate.

In 1929, he was appointed as Lecturer in Tamil at the Thirunelvely Saiva Teachers' Training College, conducted by the Hindu Board of Education. He held this post for thirty years until his retirement in 1959. He developed himself into a highly respected Teacher, a powerful speaker and a versatile writer. His students, numbering more than two thousand who passed out of the Saiva Teachers' College hailed Pandit Kanapathippillai as their guru and followed his foot-steps in their all walks of life.

Pandit Kanapathippillai's close association with P. Kailasapathi, the Vice -Principal of the teachers' college, made him a Researcher in Saiva Siddhantham.

Pandit Kanapathippillai made a profound and lasting impression on all lovers of Tamil literature, Saiva Religion and Philosophy. He has established his reputation firmly as the most effective exponent of the Navalar tradition in Sri Lanka and South India. Navalar brought Hindu Renaissance during the last century.

Between 1935 and 1946, Pandit Kanapathippillai established and conducted Kavya School at Thirunelvely where Tamil, Sanskirt and Sinhala Languages were taught.

The Tamil Literary world and the "Thinakaran" News Paper conferred on him the title "PANDITHAMANI" which literally means, 'Gem among Pandits' in 1951, in appreciation of his scholarship and contributions, to Saiva Tamil Literary World.

Pandithamani was deeply interested in three branches of knowledge namely, Saiva Religion and Philosophy; Culture and Society and Literary appreciation and criticism. This reflected in his speeches and writings. He had delivered a number of lectures at many literary conferences and seminars and public meetings.

Pandithamani earned a wide reputation in Sri Lanka and abroad as a prolific writer. He had written a number of essays on Tamil Literature, Saiva Philosophy, Religion and Culture. He brought to light the historical background of several Sri Lankan Tamil poets who lived before him and their literary works. The Pandithamani Book Publishing Society published nearly twenty five books authored by Pandithamani. As a literary critic, Pandithamani was bold and unequivocal.

In 1978, the University of Ceylon Conferred a Doctorate of Literature on Pandithamani Kanapathippillai, confirming the recognition, the Tamil Literary world granted him years ago.

In the words of Prof. S. Vithyananthan, "Pandit Kanapathippillai has earned a wide reputation both in Sri Lanka and abroad as a prolific writer, an inspiring teacher, an orator, literary critic, poet and commentator..... Scores of Pandits and Tamil scholars in the Island owe their success to his guidance and inspiration.

Like Sri La Sri Arumuga Navalar, Pandithamani Kanapathippillai, the Ambassador of Jaffna culture and learning, has produced a generation of scholars who pride themselves in belonging to the school of Pandithamani. This correctly depicts the dynamic personality of Pandithamani.

Pandithamani had been very closely associated with Literary, Cultural and Educational Institutions like Oriental Languages Development Society (Arya Dravida Bhashabiviruthi Sangam); Saivaparipalana Sabai; Hindu Board of Education; Jaffna Arts Centre (Kala Nilayam); Jaffna Youth Congress etc. and contributed immensely for their growth and development. He remained a confirmed bachelor throughout his eighty seven years of life and passed away on 13-03-1986.

## கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்

## பற்றிய சிறுகுறிப்பு...



சைவப்பெரியார், கலாநிதி, கலாபூஷணம் குமாரசாமி சோமசுந்தரம் ஐயா தென்மராட்சி கல்வயலைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

கல்விப்பெரும் புலத்தில் ஆசிரியராக, வட்டாரக் கல்வி அதிகாரியாக, கல்விப் பணிப்பாளராக, தேசிய கல்வி நிறுவக பிரதிக் கல்விப்பணிப்பாளர்நாயகமாக கல்விப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார்.

வானொலியிலும், தொலைக்காட்சியிலும், பத்திரிகை ஊடகங்களிலும் தமது பேச்சு வன்மையாலும், எழுத்தாற்றலாலும் கல்வி உலகில் நன்கு அறியப்பட்டவர். மானிடத்தை மனிதத்தை நன்கு நேசித்து எம் போன்ற பலரின் உள்ளங்களை கவர்ந்தவர். இவரின் மனித விழுமியங்கள் பற்றிய அநேகமான கட்டுரைகள் நூல்வடிவம் பெற்றுள்ளன.

நல்லைநகர் நாவலர், சைவமரபும் தமிழர் வாழ்வும், மனித விழுமியங்கள், சைவ வாழ்வியற் சிந்தனைகள், மனித மேம்பாட்டுச் சிந்தனைகள், வாழ்வு நலம் பெற நற்சிந்தனைகள், மனித வாழ்க்கை விழுமியங்கள், சைவ நற்சிந்தனைக் களஞ்சியம் ஆகிய நூல்கள் வெளிவந்து அறிஞர்களின் வரவேற்பைப் பெற்றுள்ளன. சஞ்சிகைகள், மலர்களில் இவருடைய பல கட்டுரைகளை காணலாம். கொழும்பில் வெளிவரும் முன்னணிப் பத்திரிகைகளில் ஒன்றான தினக்குரலில் வெளிவந்து கொண்டிருக்கும் "அற நெறிச்சாரம்" கட்டுரைகள் வாசகர்களுக்கு அறநெறிகளை ஊட்டி வருகின்றன என்பதில் பெருமை கொள்கின்றோம். அருள்தந்தை தத்துவஞானி பேராசான் வேதாத்திரி மகரிஷி அவர்களின் தத்துவ கொள்கைகளுக்கு மதிப்பளித்தவர். நாவலர், பண்டிதமணி, சிவத்தமிழ்ச்செல்வி ஆகியோரின் பணிகளை மதித்து வாழ்பவர்.

- கா. சிவபாலன் -